
வைகறை வெளிச்சம்
ஜூலை 2015 ரமலான் 1436
ஆசிரியர் மு. குலாம் முஹம்மது எம்.ஏ
Volume - 8
Issue - 7
விலை ரூ. 20



# அமெரிக்காவை அழிக்கும் தீவிரவாதம்




தயாராகின்றது
யாசீன் பட்கலுக்கு என்கவுண்டர் கொலை!



ஆம்பூர் கலவர பூமியானதேன்?





அரசின் கல்வி உதவிகளைப் பெறுவது எப்படி?

# வைகறை வெளிச்சம்

ஜுலை 2015 – ரமலான் – 1436

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது

துணை ஆசிரியர்

கே.எம். இல்யாஸ் ரியாஜி

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Tel.: 044-25224887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts private circulation to promote the original issue


بسم الله الرحمن الرحيم


அமெரிக்காவில் பாசிசம் .................... 06

சி.ஐ.ஏ.வின் இரகசிய சித்ரவதைக் கூடங்கள் பற்றிய அமெரிக்காவின் செனட் ஆய்வறிக்கை! .................... 17

மத்திய உளவுத்துறையின் இன்னொரு பொய் அம்பலம்! .. 20

தீன் சுடர் டி.எம். உமர் ஃபாரூக் .................... 22

மோடிக்கு அரியானா பெண்கள் அறிவுறுத்தல்! .................... 24

காவிக் கட்சியினரின், அறிவியலுக்கு முரணான செயல்பாடுகள் .................... 26

அரசின் கல்வி உதவிகளைப் பெறுவது எப்படி? .................... 30

ஆம்பூர் கலவர பூமியானதேன்? .................... 47

டிக். . .டிக். . . டிக். . . ஜுலை 01,2015 .................... 50

கொலைகாரனைக் காப்பாற்ற முயன்றால் சட்டம் தண்டிக்காதா? .................... 51

அவசியம் செய்வோம் இந்த ரமழானில் .................... 52

நிழல் பட்டால் தீட்டா. . . . ? .................... 54

தாருல் இஸ்லாம் ஃபவுண்டஷேன் டிரஸ்ட் (பதிவு) அன்பான வேண்டுகோள்! .................... 55

எது முதலில்? .................... 58

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? .................... 62

குறைஷிகள் .................... 64


**எவர் (இம்மையில் தன்னுடைய நல்ல செயல்கள் மூலம்) மறுமையின் வேளான்மையை (வெகுமதியை) நா(டிச் செயல்ப)டுகிறாரோ அவருக்கு அவருடைய வேளான்மையில் நாம் அதிகப்படுத்துவோம். எவர் உலகத்தின் வேளான்மையை (வெகுமதியை மட்டும் கருதிச் செயல்பட) நாடுகிறாரோ அவருக்கு அதிலிருந்து நாம் கொடுப்போம். (ஆனால்) மறுமையில் அவருக்கு எவ்வித பங்கும் கிடையாது.**

**(அஷ்ஷூரா வசனம் - 42)**

**http:/www.facebook.com / vaigaraivelicham**

தலையங்கம்

# அரசியல் . . . புகலிடம். . . . ?

ஆங்கிலேயர்கள் முன்னூற்றைம்பது ஆண்டுகள், நம் நாட்டை ஆட்சி என்ற பெயரில் கொள்ளை அடித்தார்கள். நம் நாட்டின் இயற்கை வளங்களை முடிந்த வரை துடைத்து எடுத்துவிட்டார்கள்.

இரண்டு உலகப் போரிலும் நமது மக்களை அவர்களுக்காக சண்டை போட வைத்தார்கள்.

எல்லாம் முடிந்தபின் இனி இந்தியாவில் ஆட்சிச் செய்து கொண்டிருப்பது எந்தவிதத்திலேயும், இலாபமில்லை எனக் கண்டபோது இந்தியாவை விட்டு வெளியேறினான்.

இந்திய விடுதலையின் அந்தரங்கம் இதுதான் என அடுக்கடுக்கான ஆதாரங்களோடு நிரூபிக்கின்றார்கள். உலகப் பிரசித்திப் பெற்ற இரண்டு வரலாற்று ஆய்வாளர்கள்.

அவர்கள் தாம், லாரி காலின்ஸ், டொமனிக் லேப்பியர், என்பவர்கள். அவர்கள் எழுதிய பிரசித்திப் பெற்ற நூலில்.

**(ஆதாரம் : Freedom at Midnight by Larry Collins and Domique Lepeaire)**

அதன் பின்னர் நாடு நம் நாட்டுப் பிரஜைகள் எனப்படுவோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அன்று முதல் நம்மவர்கள் நம் நாட்டைக் கொள்ளை அடிக்கத் தொடங்கி விட்டார்கள்.

முதல் ஊழலே முதல் இராணுவ அமைச்சர் மேனன் அவர்களிடமிருந்துதான் வந்தது.

அதன் பின்னர் கொள்ளைகள் படலம் தொடர்ந்து கொண்டே வந்தது.

இந்நிலையில்தான் தேசபக்தி, நாட்டுப்பற்று 'Be Indian Buy Indian' இந்தியனாக இரு, இந்திய பொருள்களையே வாங்கு என தேசியம் பேசியவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அவர்களாக ஏற்படுத்திய கார்க்கில் போரில் இறந்து போன வீரர்களுக்குச் சவப் பெட்டி வாங்குவதிலேயே கொள்ளை அடித்தார்கள். இதர ஊழல்களை இங்கே பட்டியல் போட்டால் தாளாது.

அவர்களின் மாநில முதல்வர்கள் நாட்டின் இயற்கை வளங்களை அந்நிய நாட்டவர்களுக்கு விற்று வயிறு வளர்த்தார்கள்.

அதில் முன்னணியில் நின்றவர் எடியூரப்பா என்ற கன்னட பா.ஜ.க. முதல்வர்தான். இவருடைய அமைச்சரவையில் வீற்றிருந்த ரெட்டி சகோதரர்கள் இரும்பு தாதுக்கள் நிறைந்த கன்னட மாநிலத்தின் எல்லையோரப் பகுதியிலிருந்து அவற்றை அகழ்ந்தெடுத்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்றார்கள்.

இந்தக் கொள்ளையில் அவர்கள் கன்னட மாநிலத்தைத் தாண்டி ஆந்திர மாநிலத்திற்குள்ளும் புகுந்தார்கள்.

பாரதீய ஜனதா கட்சியால் அவர் மீது எந்த நடவடிக்கையையும் எடுத்திட இயலவில்லை. மாறாக அவர்களைக் காப்பாற்றிடத்தான் முனைந்தது. ஏனெனில் பாரதீய ஜனதா கட்சியின் தேர்தல் செலவுகள் அனைத்தையும் இந்த ரெட்டி சகோதரர்கள் கவனித்து வந்தார்கள்.

அதேபோல் அப்போதைய பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் நிட்டின் கர்க்ரே 78 போலி நிறுவனங்களை உருவாக்கி பண மோசடிகளைச் செய்தார். இப்போது மத்திய அமைச்சர்.

இப்போது இராஜஸ்தான் பா.ஜ.க. முதல்வர் லலித் மோடி என்ற சர்வதேச பொருளாதார மோசடிக்காரனுக்கு உதவி செய்தார். அதேபோல் மத்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் சுஷ்மாவும் உதவி செய்தார்.

இராஜஸ்தான் முதல்வர் வசந்தராஜேயின் மகன் சுஷ்மா சுவராஜ்இன் குடும்பம், இவர்களெல்லாம் அந்த சர்வதேச பொருளாதார குற்றவாளி இன்னும் தேடப்படக் கூடிய குற்றவாளிக்கு விழுந்து, விழுந்து உதவி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

மோடி இந்த விவகாரத்தில் வாயையே திறக்கவில்லை. அவர் மௌனமாக இருந்தால், அவருக்கும் லலித் மோடிக்கும் தொடர்பு இருக்கின்றது. இந்தக் குற்றவாளியைக் காப்பாற்றுவதில் மொத்த அரசாங்கத்திற்கும் தொடர்பிருக்கின்றது என்பதே உண்மை எனப் பத்திரிகைகள் பல தலையங்கங்கள், சிறப்புக் கட்டுரை என வெளிப்பட்டன. ஆனாலும் மோடி வாய் திறக்க வில்லை.

அதாவது தனது மௌனத்தின் வழி தனக்கும் லலித் மோடிக்கும் தொடர்பிருக்கின்றது என்பதை உறுதி செய்தார் மோடி.

இப்படி மத்திய பிரதேசத்தில் இவர்களுடைய ஆட்சியின் ஊழலைக் கண்டு பிடித்தவர்களைக் கொலையே செய்துவிடுகின்றார்கள்.

மத்தியில் இப்படி ஊழல் பெருக்கெடுத்து ஓடுகின்றது என்றால் மாநிலத்தில் இரண்டு ஜி, 2ஜி ஊழல். அதன் ஒரு பகுதியாக முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனை பொய்யைக் கண்டுபிடிக்கும் சோதனைக்கு உட்படுத்திட வேண்டும் என நிலைமை அசிங்கமாகி வருகின்றது.

மாநில முதல்வரின் முன்னாள் ஊழல்கள் இப்போது உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டு நிற்கின்றது.

தேசப்பக்தியைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டதாகப் பீற்றும் பாரதீய ஜனதாவும், சமூக விடுதலையை மையப்படுத்தி நீதி தேடிய திராவிடக் கழகங்களும் ஊழலில் ஒன்று போல்தான் திகழ்கின்றன.

யாரிடமும் எள் முனை அளவுக்குக் கூட நேர்மையையோ, மனச்சாட்சியையோ எதிர்பார்க்க வேண்டாம் என்பதே நிலை.

டெல்லியை ஆளும் ஆத்திகவாதிகளும், மாநிலத்தை ஆளும் நாத்திகர்களும் ஊழலில் ஒன்று போல் தான் மனதையும் மனசாட்சியையும் கழற்றி வைத்துவிட்டு வேலை செய்கின்றார்கள்.

உண்மையாக இறைவனை இவர்கள் அறிந்திருந்தால் உணர்ந்திருந்தால் இந்த கீழான செயல்களைச் செய்யத் துணிந்திருக்க மாட்டார்கள்.

அந்த இறைவன் நீங்கள் இந்த உலகில் செய்யும் எல்லா செயல்களுக்கும் இறைவனிடம் ஒரு நாள் பதில் சொல்லியாக வேண்டும். அந்த நாளில் நீங்கள் செய்த தவறுகள் நன்மைகள் இவற்றின் அடிப்படையில் தண்டனை அல்லது நற்கூலி வழங்கப்படும், நீங்கள் உலகில் வகித்த பதவிகளாலும் தகிடுத் தத்தங்களாலும் தன்டணைகளிலிருந்து தப்பித்திருக்கலாம். ஆனால் அந்த நாளில் நிச்சயமாக நீங்கள் தப்பித்திட இயலாது. அந்த நாள் மரத்திற்குப் பின் நாம் எழுப்பப்படும் நாள். அந்த நாளே தீர்ப்பு வழங்கிடும் நாள்.

ஆக இந்த உலகத்தோடு எல்லாம் முடிந்து விடுவதில்லை. நிச்சயமாக நம்மை படைத்த அந்த இறைவனைச் சந்தித்தே ஆக வேண்டும்.

இந்த நாளைப் பற்றிய அச்சம், நம்மிடம் இருந்தால், நாம் நிச்சயமாக இது போன்ற மகா கொள்ளைகளில் ஈடுபடமாட்டோம். நாட்டை மொத்தமாக சுரண்ட மாட்டோம்.

அந்த இறைவனையும் இந்த நாளையும் அஞ்சிவாழ்வதைத்தான் இறையச்சம் இறைவனைப் பற்றிய அச்சம் என்பார்கள். இந்த அச்சம் மிகுந்திருந்தால்தான் இஸ்லாமிய வரலாற்றில் பல உமர் பின் அல்கத்தாப் (ரழி) களைச் சந்தித்தோம். இந்த உமரின் ஆட்சிதான் நமது இந்தியாவில் வரவேண்டும் என விரும்பினார்கள் காந்தி அடிகள்.

அது இங்கு வந்திட அந்த ஏக இறைவனையும் அவன் வழங்கிய வழிகாட்டுதல்களையும் தொடர்ந்து பரப்புவோம். இறையச்சமிக்கவர்களாக நம்மவர்களை ஆக்கிடுவோம்.

இறைவன் எச்சரிக்கின்றான்,

செல்வத்தையும், மக்களையும் ஒருவருக்கொருவர் அதிகமாகத் தேடிக் கொள்வது உங்களைப் பராக்காக்கி விட்டது.

மண்ணறைகளைச் சந்திக்கும் வரை அவ்வாறல்ல, உண்மை நிலையை நீங்கள் விரைவில் கண்டு கொள்வீர்கள். . . . !

**அல்குர்ஆன் அத்தியாயம் - 102 -8**

நிச்சயமாக உங்கள் முயற்சி பலதரப்பட்டது. எவர் தருமத்தை கொடுத்து (அல்லாஹ்வை) அஞ்சி நடந்து கொள்கின்றாரோ,

இன்னும் (எவர்) நல்ல காரியத்தை நல்லதென்று உண்மைப்படுத்தினாரோ, அவருக்கு சொர்க்கம் புகுவதற்கு உண்மையான வழியை நாம் எளிதாக்கித் தருவோம். எவன் உலோபித்தனம் செய்து தேவையற்றவனாகத் தன்னைக் கருதிக் கொள்கின்றானோ, இன்னும் நல்லதைப் பொய்யாக்கினானோ அவனுக்கு கடுமையான நரகத்தை எளிமையாக்கித் தருவோம்

**அல் குர்ஆன் அத்தியாயம் :92**



கவர் ஸ்டோரி

# அமெரிக்காவை அழிக்கும் தீவிரவாதம்

## அதிர்ச்சித் தகவல்கள்

**அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சார்ந்தவர்கள் அதிகமாகக் கொலை செய்யப்பட்டு வருகின்றார்கள்.**

**இந்தக் கொலைகளைச் செய்வது வெள்ளை இன வெறிப்பிடித்த ஓர் அமைப்பு Klu Klux Klam குளு கிளக்ஸ் கிளான் என்ற பாசிச அமைப்பு. இது அங்குள்ள White Supremacist வெள்ளை நிறத்தின் மேன்மையை நிலை நாட்டிடப் பாடுபடும் ஓர் அமைப்பு.**

**அது பற்றிய பல தகவல்கள் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.**

*அமெரிக்க ஏகாதிபத்தியம் (உலகில் வீழ்ந்து கொண்டிருக்கும்) ஒரே வல்லரசு தலைமைச் செயலகம் வெள்ளை மாளிகை!*

*“தங்கள் தலைமைச் செயலகத்திற்கு வெள்ளை மாளிகை எனப் பெயர் வைத்திருப்பதன் மூலம், அங்கு வெள்ளை யர்கள் மட்டுந்தான் அமர்ந்து ஆட்சி நடத்திட முடியும் என்பதைத் தானே காட்டுகின்றனர். கறுப்பர்களுக்கு அங்கே இடமில்லை என்றுதானே பொருள்?” எனக் கேட்டானாம் ஒரு கறுப்பன். அமெரிக்க ஜனாதிபதி ஜான் எஃப். கென்னடியை.*

*அதற்கு அமெரிக்க ஜனாதிபதி இப்படிப் பதில் சொன்னாராம் “ஏதோ மூதாதையர்கள் பெயர் சூட்டி விட்டார்கள். அப்படியே இருக்கட்டும். அதனை விவகாரமாக்கிட வேண்டாம்” என்றாராம்.*

*ஆனால் பொட்டில் அறைந்தாற் போல் அந்த வெள்ளை மாளிகையில் 2008 ஆம் ஆண்டு கறுப்பினத்தைச் சார்ந்த ஹுசைன் ஒபாமா என்பவர் பதவி ஏற்றார்.*

*10 லட்சம் மக்கள் அதனை கண்டு களித்தனர். கடலென திரண்டு அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்ட கறுப்பர்கள் கண்ணீர் தங்கள் கன்னங்களில் வழிந்தோட பார்த்துக் கொண்டு நின்றனர்.*

அவர்கள் பெற்ற ஆனந்தத்தை தான் அந்தக் கண்ணீர் நமக்குச் சுட்டிக் காட்டிற்று.

ஆனால் அடுத்து வந்த நிகழ்வுகளில் அன்று ஏற்பட்ட அத்தனை கனவுகளும் தவிடு பொடியாயின.

கறுப்பர்களை கண்ட இடமெல்லாம் தாக்கினர். அவர்களை அவமானப் படுத்தினர்.

நாளுக்கு நாள் பெருகி வந்த கறுப்பர்களுக் கெதிரான இந்தக் குற்றங்கள், கறுப்பர்கள் காரணமில்லாமல் சுட்டுக் கொன்றிடும் நிலைக்குப் போனது. பட்டப்பகல் படுகொலை என்றானது.

இந்தக் கொலைகளை வெள்ளை நிறம் கொண்ட காவல்துறையினரே செய்தார்கள். அதே போல் வெள்ளை நிற பட்டாளத்துச் சிப்பாய்கள் செய்தார்கள்.

கறுப்பர்களுக்கெதிரான இந்தக் குற்றங்கள் சராசரியாக தினமும் மூன்று நடந்தன, நடந்து கொண்டிருக்கின்றன.

**Front Line July 10, 2015**

அமெரிக்க ஊடகங்கள் வெள்ளை நிறத்தவர்களின் கைகளிலும், யூதர்களின் கைகளிலும் இருக்கின்றன. இதனால் இந்த உண்மைகள் மறைக்கப்பட்டே வந்தன.

ஆனால் அண்மையில் நடந்த சில பெரிய நிகழ்வுகளை, மக்கள் மன்றத்திலிருந்து இந்த அமெரிக்க யூத ஊடகங்களால் மறைத்திட இயலவில்லை.

ஜூன் 2015 இல் அவை, சார்லஸ்டன் என்ற இடத்தில் கிருஸ்தவ ஆலயத்திற்கு சென்று கொண்டிருந்த கறுப்பர்கள் மேல் நடத்திய தாக்குதல். இதில் ஒன்பது பேர் இறந்தார்கள். இதில் அந்தப் பகுதியின் (அமெரிக்க) மாநில நிருவாகக் காரிய கமிட்டி உறுப்பினர் ஒருவரும் (State Senator) கொலைச் செய்யப்பட்டார்.

2. இந்த வருடம் 2015 ஏப்பிரல் நான்காம் நாள் வால்டர் ஸ்காட் என்ற கறுப்பு நிறத்தை உடையவரை ஓர் அமெரிக்க காவல்துறை அதிகாரி பின்னாலிருந்து சுட்டுக் கொன்றான்.

3. சென்ற வருடம் (2014) ஆகஸ்ட் திங்களில் மைக்கேல் பிரவுன் (Michael Bronwn)என்ற கறுப்பு நிறத்தவரை, இளைஞனை பெர்ருஷன் என்ற இடத்தில் வைத்து சுட்டுக் கொன்றான்.

4. எரிக் கார்னர் என்ற கறுப்பு நிறத்தவரை (Eric Garner) நியூயார்க் நகரில் வைத்து ஜூலை 2014 சுட்டுக் கொன்றார்கள்.

5. 2012 ஆம் ஆண்டு டிரைவோன் மார்ட்டின் (Trayyon Martin) என்பவரை புளோரிடா நகரில் வைத்துச் சுட்டுக் கொன்றார்கள். இந்தக் கொலையை எந்த முகாந்திரமுமில்லாமல் ஓர் வெள்ளை வீட்டுக் காவலாளியே செய்தான்.

6. 2015 ஜூன் திங்களில் அமெரிக்காவின் டெக்ஸாஸ் (Texas) மாவட்டத்தில் (Pool Party) நீச்சல் குளத்தில் விருந்து என்றழைக்கப்படும் விநோத நிகழ்ச்சிக்கு, வெள்ளை நிறத்தவர்களுடன் சில கறுப்பு நிறத்தவர்களும் அழைக்கப் பட்டார்கள்.

கறுப்பு நிறத்தைக் கொண்ட சில இளைஞர்களும் சில இளம் பெண்களும் சென்றிருந்தார்கள்.

ஆனால் அங்கிருந்த காவலர்கள் கறுப்பு நிறத்தவர்களை அடித்து விரட்டினார்கள். அந்தக் கறுப்பர்கள் தங்கள் கைகளிலிருந்த அழைப்பிதழைக் காட்டினார்கள். அவற்றைப் பிடுங்கிவிட்டு அவர்களை விரட்டினார்கள். கறுப்பு நிறத்தைக் கொண்ட ஒரு பெண் அங்கிருந்து போக மறுத்தாள். அவளைப் பிடித்து இழுத்து வந்து கீழே தள்ளினான் ஒரு காவல் துறை அதிகாரி. அத்தோடு

நில்லாமல், கீழே விழ்ந்த அந்தப் பெண்ணின் மீது, தன் காலை வைத்து முழு பலத்தையும் பிரயோகித்து அவள் முதுகுத் தண்டை உடைத்து விட்டான்.

**Front Line, July 10,2015.**

உயிருக்குப் போராடிய அந்தப் பெண் சில நாள் மருத்துவ சிகிச்சைக்குப் பின் இறந்து போனாள்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் இனம் புரியாத ஒரு பீதியை அச்சத்தை அமெரிக்கர் களில் கறுப்பு நிறத்தைக் கொண்டவர் களிடம் ஏற்படுத்தி இருக்கின்றது. அவர்கள் வெளியே சென்றால் மீண்டும் வீடு வருவார்கள் என்ற நம்பிக்கை இல்லாமலே வாழ்ந்து கொண்டி ருக்கின்றார்கள். இது உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டில் நடக்கும் அநீதிகள்.

**உண்மை நிலவரம்**

அமெரிக்காவில் உள் நாட்டு தீவிர வாதம் Domestic Terrorism எல்லா எல்லை களையும் கடந்துவிட்டது. எந்த அளவுக்கு என்றால்,

அங்கு 2015 ஆம் ஆண்டு முதல் 5 மாதங்களில் 500 பேர் காவல் துறையாலும் இதர வெள்ளை நிற தீவிரவாதிகளாலும் கொலை செய்யப் படுகின்றார்கள்.

**(செய்தி ஆதாரம் - Front Line July 2015)**

அங்குள்ள ஆய்வுகள் 9/11 என அடையாளப்படுத்தப்படும் தாக்குதலுக்குப் பின் அமெரிக்கா உள்நாட்டு தீவிரவாதத் தால் கொலை செய்யப்பட்ட மக்களே அதிகம் எனக் கூறுகின்றன.

**(Times Of India - 25/6/2015)**

இந்தச் செய்தியை பட்டவர்த்தனமாக அறிவித்து பிரச்சாரம் செய்து வரும் ஆய்வு நிறுவனம் NEW AMERICA "புதிய அமெரிக் கா". இதன் தலை நகரம் அமெரிக்காவின்



தலைநகராகிய வாஷிங்டனில் இருக் கின்றது. இதனை "Washington based think tank" வாஷிங்டன் ஐ தலைநகராகக் கொண்ட "சிந்தனை குழாம்" என்றழைக்கின்றார்கள்.

இந்த ஆய்வு நிறுவனத்தின் கணிப் பின்படி 9/11 என அடையாளப்படுத்தப் பட்ட தீவிரவாத தாக்குதலுக்குப் பின் 7 தாக்குதல்கள்தாம் இஸ்லாமிய தீவிரவாதி கள் எனக் கருதப்படுபவர்களிடமிருந்து வந்திருக்கின்றது. இதில் 26 பேர் தான் கொலை செய்யப் பட்டிருக்கின்றார்கள்.

இதற்கு நேரெதிராக நிறவெறிக் கொள்கையைக் கொண்டவர்களின் தீவிர வாத தாக்குதல்கள் 19 நடந்திருக்கின்றன. அதில் 48பேர்கள் கொலை செய்யப் பட்டிருக் கின்றார்கள்.

**(Times of India 25.6.2015)**

இவர்களின் மேலே நாம் சுட்டிக் காட்டிய மரணங்கள், நடந்த கொலைகள், என பிரண்ட் லைன் ஏடு சுட்டிக் காட்டுபவை அடங்கா. இந்த எண்ணிக் கையையும் இணைத்துப் பார்த்தால் உள்

நாட்டு தீவிரவாதத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை எங்கோ போகின்றது.

ஆக அமெரிக்கா இந்த நிற வெறிக் கொள்கையில் அழிந்து கொண்டிருக்கின்றது என்பதே உண்மை.

இந்த உண்மையை 1960களில் அமெரிக்காவின் நிறவெறி கொலைகள், கொடுமைகள் இவற்றிற்கெதிராகப் போராடி அதில் தன்னை தந்த மால்கம் எக்ஸ் என்ற மாலிக் அல் ஷாபாஸ் அன்று இப்படிக் குறிப்பிட்டார்.

புண்ணியம் பூத்து கண்ணியம் மிகைத்து கிடக்கும் மக்க மாநகரில் தன் ஹஜ்ஜு கடமையை நிறைவேற்றிவிட்டு அங்கிருந்த படியே தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டார்.

“வெள்ளை நிறவெறி என்ற புற்றுநோய் அமெரிக்காவை அழித்து வருகின்றது அமெரிக்காவின் கிருஸ்தவம். இஸ்லாம் சொல்லும் உன்னத உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது ஒன்றே அமெரிக்காவை அது எதிர் நோக்கும் பேரழிவிலிருநது காப்பாற்றும். இன்றேல் இன வெறியால் அழிந்த ஜெர்மானியரைப் போல் அமெரிக்காவின் வெள்ளை நிறவெறி பிடித்த கிருஸ்தவர்களும் அழிந்து போவார்கள்”

**(மால்கம்-X தமிழில்
மு. குலாம் முஹம்மத்)**

ஒபாமா என்ற கறுப்பர் ஆட்சியில் அமர்ந்தவுடன் எல்லா வினையும் தொலையும் என எதிர்பார்த்த கறுப்பர்களின் ஏமாற்றத்தை இந்து பத்திரிக்கை இப்படி தீட்டிக் காட்டுகின்றது தனது தலையங்கத்தில்

“The election of Barak Obama as the first black president of the country in 2008 had raised hopes about the dawn of a post racial era. But Afro - Americans are still being targetted”

**Source : The Hindu - Editorial: Scourge of Racism - June 20, 2015.**

அதாவது, அமெரிக்காவின் முதல் கறுப்பின குடியரசு தலைவராக பேரக் ஒபாமா 2008 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டார். இது இனி நிறவெறிக் கொள்கைக்கு முடிவு கட்டும் என எதிர்பார்த்தோம். ஆனால் ஆப்பிரிக்க அமெரிக்கர்கள், இன்றும் தொடர்ந்து நிறவெறிக் கொலைகளுக்கும் இலக்காக்கப்பட்டே வருகின்றார்கள்.

உண்மையைச் சொன்னால் கறுப்பினத்தைச் சார்ந்த ஒருவரை குடியரசு தலைவராகக் காட்டியே கறுப்பின மக்களைக் கொலை செய்து வருகின்றார்கள்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவரை கொலை செய்து வருபவர்கள் யார்?

## KKK - KLU KLUX KHAN
**குளு கிளக்ஸ் கான் என்ற அமைப்பு.**




“அமெரிக்கா வெள்ளை இனத்தவருக்கு மட்டுமே” என்ற கொள்கையைக் கொண்டதே இந்த அமைப்பு. இந்த அமைப்பு வன்முறையை வழியாகக் கொண்டது.

புரியும்படி சொன்னால் நம் நாட்டில் இருக்கும் இந்துத்துவ அமைப்புகளைப் போன்ற அமைப்பு. நிற வெறியில் இந்த அமைப்பு ஒரு பயங்கர பாசிச அமைப்பு.

இந்த அமைப்பு டிசம்பர் 24 1865 களிலேயே தொடங்கப்பட்டுவிட்டது.

கறுப் பின மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கும் இந்த அமைப்பை ஆறு படித்த வெள்ளையர்கள் தொடங்கினார் கள்.

உண்மையைச் சொன்னால் இந்த அமைப்பு பகிரங்கமாகத் தன்னை அறிவித்த நாளே டிசம்பர் 24,1865. அதற்கு முன் இந்த அமைப்பு இரகசியமாக இயங்கி வந்தது. அப்போது இதை "Secret Service" என அழைத்தார்கள். இரகசியமாக இயங்கிடும் போதே பல கொலைகளைச் செய்து விட்டார்கள்.

இந்த அமைப்பிற்கு என்ன இலட்சி யம் எனக் கேட்டால் இப்படிப் பதில் சொல்லுகின்றார்கள் அதை அந்த அமைப்பினர்.

"We are a law abiding non-violent christian organisation fighting to preserve and protect our white race, **BILL OF RIGHTS** and our constitution as orignally written, against all enemies both foreign and domestic. We stand saving our white christian heritage".

**Source : History of Klux Klu Klan**

**அவர்களுடைய இணையதளம்**

அதாவது,

"நாங்கள் சட்டத்திற்கு கீழ்ப்படிந்து வாழும் வன்முறையற்ற அமைப்பு. நாங்கள்




நமது வெள்ளை இனத்தைத் தக்க வைக்க வும், அதனை பாதுகாக்கவும் போராடிக் கொண்டிருப்பவர்கள். அத்தோடு உரிமை கள் வழங்கிடும் சட்டத்தையும் நமது அரசியல் நிர்ணயச்சட்டத்தையும் அது முதலில் எழுதப்பட்டபடி எதிரிகளிட மிருந்து அதை பாதுகாப்பதற்கும் போராடு கின்றோம். இந்த எதிரிகள் உள்நாட்டு எதிரி களாக இருக்கலாம் அல்லது வெளிநாட்டு எதிரிகளாக இருக்கலாம். நாங்கள் வெள்ளைக் கிருஸ்தவ பழைமைகளை பாதுகாப்பவர்களாக நின்று கொண்டிருக் கின்றோம்."

இவர்கள் நாங்கள் வன்முறையற்றவர் கள் எனச் சொன்னதிலிருந்தே இவர்கள் வன்முறையின் மீது அதிகமாக நம்பிக்கை யுடையவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள லாம். ஏனெனில் நாங்கள் வன்முறை அற்ற அமைப்பு எனச் சொல்லிட வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவர்களைப் பற்றிக் கிடைக்கும் இதர இலக்கியங்கள் இப்படிப் பிரஸ்தாபிக் கின்றன.

Is a patriotic white Christian Organisation promoting Christian Terrorism in America?

இது தேசப்பக்தியுள்ள வெள்ளைக் கிருஸ்தவ அமைப்பு, இது கிருஸ்தவ தீவிரவாதத்தை முன்னே கொண்டு செல்லும் ஓர் அமைப்பு!

இவர்களுக்கு இன்னொரு பெயரும் இருக்கின்றது. அது, A white organisation to retreive America from the blacks.

பொருள் : "ஒரு வெள்ளை நிறத்தவர் களின் அமைப்பு இதன் இலட்சியம் கறுப்பர்களிடமிருந்து அமெரிக்காவை மீட்பது."

இவர்களுடைய முத்திரை முழக்கம் இப்படி அமைகின்றது. Fighting to-day for an American future tomorrow.

இப்போது கூட சார்ஸ்டனில் ஓர் கிருஸ்தவ ஆலயத்தில் பைபிள் படித்துக் கொண்டிருந்த 9 பேரை சுட்டுக் கொன்ற டைலான் ஸ்ராம் ரூஃப் (Dylann Storm Roof) என்பவன் சுடும் போது இப்படிக் கூறினான், "You want to take over our country", "நீங்கள் எங்கள் நாட்டை எடுத்துக் கொள்கிறீர்கள்". இவன் வெள்ளைக் கிருஸ்தவ தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவன்தான்.

இந்தப் பிரச்சாரம் அதாவது கறுப்பர்கள் எங்கள் நாட்டை எடுத்துக் கொள்கின்றார்கள் என்ற பிரச்சாரம் 2008 இல் பாரக் ஒபாமா அமெரிக்காவின் குடியரசு தலைவர் பொறுப்பேற்ற அன்றிலிருந்தே தொடர்ந்து கடுமையாகிக் கொண்டிருக்கின்றது என்கின்றது நமது இந்து பத்திரிகை.

Take back our country which emerged as a rolling cry among the conservations after Obama became President.

"எங்கள் நாட்டை திரும்பப் பெறுவோம், என்பது ஒபாமா குடியரசு தலைவரான பின், பழைமைவாதிகளின் அலை மோதும் அழுகுரலாக ஆகிப் போனது."

இந்தத் தீவிரவாதிகள் ஒரு கால கட்டத்தில் 1865களில் கறுப்பர்களுக்கு வாக்களிக்கும் உரிமைகள் வழங்கப்படக் கூடாது என்றே இயக்கம் நடத்தியவர்கள்.

பிரண்ட் லைன் ஏடு ஜூலை 10, 2015 தரும் தகவல்களின் படி இந்தத் தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் அரசு இயந்திரத்தில் ஏராளமாக ஊடுருவி விட்டார்கள். இராணுவத்திலும் ஊடுருவி விட்டார்கள். இதனால், கறுப்பர்களை அரசு தரும் துப்பாக்கிகளாலேயே சுட்டுக் கொன்று விடுகின்றார்கள். சம்பளமும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

காவல்துறையில் இந்தத் தீவிரவாத அமைப்பினர் (KKK) தாராளமாக ஊடுருவி இருப்பதால் இந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் கறுப்பர்களைத் தாக்கும் வழக்கில் மிகவும் குறைவாகவே கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுகின்றார்கள்.

நீதித்துறையிலும் இந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் நீதிபதிகளாக இருப்பதால் அங்கும் இவர்களுக்கு தண்டனைகள் கிடைப்ப தில்லை. பல நேரங்களில் இந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவதே இல்லை.

சுருக்கமாகச் சொன்னால் மோடியின் ஆட்சிகாலந்தொட்டு குஜராத் மாநிலம் எப்படி காவி மயமாகிக் போனதோ அதேபோல்தான் மொத்த அமெரிக்காவும் கறுப்பர்களைப் பொறுத்த வரை மாறிப் போய் விட்டது. கறுப்பர்களைப் பொறுத்த வரை இப்போது மொத்த இந்தியாவும் இப்படிப்பட்ட அமெரிக்காவாக மாறி வருகின்றது.

இவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இவர்கள் கறுப்பர்களை எப்படி கொலை செய்கின்றார்கள் என்பதை இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

"They burned houses attacked and killed blacks leaving the bodies in the roads."

அதாவது இவர்கள் வீடுகளை எரித்தார்கள், கறுப்பர்களைத் தாக்கினார்கள் கொலை செய்தார்கள். அவர்களின் பிணங்களை வீதியிலேயே தூக்கி வீசினார்கள்.

ஏறத்தாழ சங்கப்பரிவாரத்தினர் சிறுபான்மையினரை இப்படித்தான் கொலை செய்கின்றார்கள். அவர்களின் வீடுகளை காஸ் சிலிண்டர்களைக் கொண்டு தகர்த்துத் தரைமட்டம் ஆக்குகின்றனர். அண்மையில் ஹரியானாவின் அத்தாலியில் இதுவே நடந்தது.

**மங்கா நிறவெறி**

இவர்கள் வெள்ளைக் கிருஸ்துவத்தில் எந்த அளவுக்கு வெறிபிடித்தவர்கள் என்றால், கறுப்பர்களை வெறுப்பதோடு

கறுப்பர்களுக்கு உரிமைகள் வேண்டும் என எந்த வெள்ளைக் கிருஸ்தவராவது வாதாடினால், அவர்களையும் கொலை செய்திட தயங்க மாட்டார்கள். அவர்கள் வகிக்கும் அந்தஸ்த்து, பதவி ஆகியவற்றைப் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்.

## குடியரசு தலைவர் ஆப்ரகாம் லிங்கன், ஜான் எஃப் கென்னடி கொலைகள்!


அமெரிக்காவில் வெள்ளை நிறவெறியர்கள் தங்கள் நிறவெறிகளுக்கு எதிராக வெள்ளை நிறத்தவர்கள் வந்தால் அவர்களையும் கொலை செய்திட தயங்கிட மாட்டார்கள் என்பதை 16வது அமெரிக்க குடியரசுத் தலைவர் வெள்ளை நிறங் கொண்ட அபிரகாம் லிங்கன் அவர்களின் கொலையும், 35வது குடியரசுத் தலைவர் வெள்ளை நிற ஜான் எஃப் கெசன்னடியின் கொலையும் எடுத்துக் காட்டுகின்றது.

வெள்ளை நிறத்தவர்களுக்கு வாக்களிக்க உரிமை இருப்பது போல் கறுப்பு நிறத்தவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை இருக்க வேண்டும் எனப் போராடியவர்களுள் ஒருவர் அமெரிக்க ஆப்பிரகாம் லிங்கன். அமெரிக்காவில் குடியரசு தலைவர் ஆன பின் அதற்காக சட்டங்களையும் கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டவர்.

1860களில் கறுப்பர்கள் அடிமைகளாகவே நடத்தப்பட்டார்கள்.

இதற்காகவே இந்த வெள்ளைக் கிருஸ்தவ தீவிரவாதிகளால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். (பார்க்க பெட்டிச் செய்தி)

### அமெரிக்க அதிபர் அபிரஹாம் லிங்கன் – கொலை ஏன்?



ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் 16 பதினாறாவது குடியரசு தலைவர். 1861 மார்சு நான்காம் நாள் முதல் 1865 ஏப்பிரல் 15 ஆம் நாள் வரை அமெரிக்காவின் அதிபராக இருந்தவர் இவர் வெள்ளை நிற கிருஸ்தவர்.

அமெரிக்காவின் கறுப்பு நிறத்தவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை அதாவது ஓட்டுபோடும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கையை முன் வைத்து மாநில தேர்தல் முதல் அமெரிக்க குடியரசு தலைவர் தேர்தல் வரை போட்டியிட்டவர் வென்றவர்.

பதவியிலிருந்த போது Proclamation of Emancipation என்றொரு பிரகடனத்தைக் கொண்டு வந்தார். அதாவது, அடிமைத்தனம் அகன்றது என்ற பிரகடனத்தைக் கொண்டு வந்தார். இதன்படி 4 லட்சம் கறுப்பர்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டனர்.

கறுப்பர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து அமெரிக்காவில் நடந்த போராட்டங்களைத்தான் சிவில் உரிமை இயக்கங்கள் "Civil Rights Movements" என அழைக்கின்றார்கள். கறுப்பர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை உறுதி செய்யும் சட்டம் என்பதால்தான் ஒரு தியேட்டரில் திரையரங்கில் "Ford Theatre" அவருடைய குடும்பத்தோடு அமர்ந்திருந்தபோது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் இறந்ததும் கறுப்பர்கள் நாங்கள் "எங்கள் மூசாவை இழந்தோம்" என்றார்கள் "We have lost our Moses".


அவரைக் கொலை செய்தது Klu Klax Klan குளு கிளக்ஸ் கிளான் என்ற தீவிரவாத அமைப்புதான். அப்போது இந்த அமைப்புத் தலைமறைவு அமைப்பு "Secret

அதைப் போலவே அமெரிக்காவின் பிரிதோர் குடியரசு தலைவர் ஜான் எஃப் கென்னடி. இவருடைய காலத்தில் தான் கறுப்பர்களுக்கு பல உரிமைகளையும், வாக்களிக்கும் உரிமைகளையும் வழிங்கிடும் சிவில் ரைட்ஸ் ஆக்ட் (Civil Rights Acts) என்ற சட்டத்தை கொண்டு வந்திட எல்லா முயற்சிகளையும் முழு மூச்சுடன் மேற் கொண்டார். அமெரிக்காவின் உளவுத் துறையாகிய (CIA) சி.ஐ.ஏ.இல் புகுந்துவிட்ட இந்த குளு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளைக் கிருஸ்தவ தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் இவரையும் (1965) இல் கொலை செய்துவிட்டார்கள். (பார்க்க பெட்டிச் செய்தி)

எப்படி இந்தியாவில் சங்கப் பரிவாரத் தினர் 'காந்தி கொலை' போன்ற கொலை களைச் செய்துவிட்டு இப்போது அதை சாதனையாகவே பேசுகின்றார்களோ அதே போல் தான் அங்கே அமெரிக்காவில் இந்த குளுகிளஸ் கிளான் வெள்ளைக் கிருஸ்தவ தீவிரவாதிகள் அமெரிக்காவின் பிரபல்ய மான குடியரசு தலைவர்களைக் கொலை செய்து விட்டுப் பெருமை பேசுகின்றார்கள்.

இதுதான் அமெரிக்காவை ஆட்டிப் படைக்கும் கறுப்பன் வெள்ளையன் என்ற நிறவெறிக் கொள்கையின் வரலாறு. அங்கு கறுப்பர்கள் காட்டுமிராண்டித் தனமாகக் கொலை செய்யப்படுவதன் பின்னணி. இந்த குளு கிளக்ஸ் கிளான் அமைப்பினர்தான் அமெரிக்காவை ஆட்டிப் படைத்து வருகின்றார்கள்.

இந்தியாவைக் கவ்விப் பிடித்திருக்கும் பாசிசத்தின் வரலாறும் இதுதான்.



Service" அவரை கொலை செய்தவன் அன்றைக்கு அமெரிக்காவில் பிரபல்யமான நடிகராக இருந்த John Wilkies Booth, ஜான் வில்கீஸ் பூத் என்பவன்தான் ஏப்பிரல் 14, 1865 இரவு 10.30 மணிக்கு பின்னாலிருந்து சுட்டான். மறுநாள் அதாவது ஏப்பிரல் 15, காலை 7.22 மணிக்கு உயிர் பிரிந்தது. இந்த குளு கிளக்ஸ் கிளான் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் அவர்களைக் கொலை செய்திட ஓர் தனிபடையை ஏற்படுத்தி இருந்தது.

ஆபிரகாம் லிங்கனின் மெய்க் காப்பாளன் அவர் கொலை செய்யப் படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னால் பக்கத்து மதுக் கடைக்குச் மது அருந்த சென்றான். அவன் அபிரகாம் லிங்கன் இருந்த பால்கனியை விட்டு வெளியே வந்ததும் கொலைகாரன், "ஜான் விக்கீஸ் பூத்" உள்ளே நுழைந்தான். அபிரகாம் லிங்கனை பின்னாலிலிருந்து கொலை செய்தான். ஆனால் லிங்கனின் மற்றொரு நண்பர் அவருடன் இருந்தார். அவர் பெயர் ஹென்றி ரோத்போன். அவர் கொலை காரனை பிடித்தார். ஆனால் அவன் அவரைக் கத்தியால் குத்திவிட்டு ஓடி விட்டான்.

இப்போதுான் ஏறத்தாழ 150 ஆண்டுகளக்குப் பின்னர்தான் இந்த அமைப்பின் முழு பின்னணியும் தெரிய வந்தது. இவர்கள் தொடர்ந்து இப் போதைய கறுப்பு குடியரசு தலைவர் ஒபாமாவைக் கொலை செய்திட தொடர் ந்து முயற்சி செய்து வருகின்றார்கள்.

நம் நாட்டு பாசிஸிட்டுகள் காந்திஜியை கொலை செய்து விட்டு இப்போது பெருமை பாராட்டுகின்றார் களே அது போல்தான் இந்த அமைப்பும் தங்கள் கொலை செயல்களால் பெருமைப்பட்டுக் கொள்கின்றது. **(Clue from Front LIne wikipedia July 10,2015)**

**MGM**

## ஜான் எஃப் கென்னடி - 35வது அமெரிக்க அதிபர் கொலை



*அமெரிக்க அதிபர் ஜான் எஃப் கென்னடி ஓர் அபார திறமையைக் கொண்டவர். 43வது வயதில் 1961இல் அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் பதவியை எட்டிப் பிடித்தவர்.*

Project Apollo "அப்போலோ இலக்கு" என்றொரு திட்டத்தைத் கொண்டு வந்து விண்வெளி ஆராய்ச்சியை விசாலப் படுத்தியவர். இந்த திட்டத்தால் தான் பின்னர் நிலாவில் மனிதன் கால் பதிக்கும் சரித்திர சாதனை நிகழ்தேறியது. அப்படியொரு சாதனையை நாம் படைக்க வேண்டும் என இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்து 1962 ஆண்டில் ஆற்றிய உரையில் உறுதி படக் கூறியவர் ஜான் எஃப் கென்னடி.

அனைத்திற்கும் மேலாக கறுப்பர் களுக்கு எல்லா உரிமைகளும் குறிப்பாக வாக்களிக்கும் உரிமையும் வழங்கிட வேண்டும் என வாதாடியவர். அதற்கான சட்டத்தை இயற்றிட விரைந்து செயல் பட்டார். அதனால் நவம்பர் 22,1963இல் பகல் 12.30 மணிக்கு Lee Harry Oswald லீ கார்வீ ஒய்வோல்டு என்ற வெள்ளைத் தீவிரவாதியால் சுட்டுக் கொலை செய்யப் பட்டார்.

2013 ஆம் ஆண்டு தான் அமெரிக்காவில் HSCA House Standing Committee On Assisination, அதாவது கொலைக்கான காரணங்களைக் கண்டுபிடிக்கும் நிலைக் குழு இந்த கொலை ஒரு சதி திட்டத்தின் கீழ் செயயப்பட்ட கொலை என அறிவித்தது. ஆக வெள்ளை நிறவெறியர்கள் கறுப்பர்களுக்கு உரிமைகளை வழங்கிட முன் வருபவர்கள் யாராக இருந்தாலும் கொலை செய்திட தயாராக இருந்தார்கள். கொலைகளைச் செய்யவும் செய்தார்கள்.

அமெரிக்காவின் பல்வேறு அரங்குகளில் ஜான் எஃப் கென்னடி அவர்கள், கறுப்பர்களுக்கு உரிமைகளை வழங்கிட மறுப்பது அவமானம். உலக அரங்கில் அமெரிக்காவை தலைகுனிய வைப்பது என கர்ஜித்தார். இதுதான் அவரைக் கொன்று விட்டது. இதினினும் மேலாக ஜூன் 6 ஆம் நாள் 1963 அண்டு அமெரிக்காவின் தொலைக்காட்சிகள் வழி நாடெங்கும் ஒளிபரப்பப்பட்ட உரையில் கறுப்பர்களுக்கு அதாவது ஆப்ரே அமெரிக்கர்களுக்கு சம உரிமைகளை உறுதி செய்யும் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட வேண்டும். அதில், வியாபாரதளங்களில் சாலைகளில், தங்கும் விடுதிகளில், திரை அரங்குகளில், உணவு விடுதிகளில், பொது இடங்களில், கல்விக் கூடங்களில், நிறத்தின் அடிப்படையில் பேதங்கள் கற்பிக்கப் படுவது தடுக்கப்பட வேண்டும். அதற்கான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் எனப்பேசினார்.

### CIVIL RIGHTS ACT 1964 - அமெரிக்கர்களுக்கு உரிமை வழங்கும் சட்டம்

ஜான் எஃப் கென்னடி 22 நவம்பர் 1963இல் கொலை செய்யப்பட்டவுடன் அவரிடம் துணை குடியரசு தலைவராக இருந்த லிண்டன் ஜான்சன் அமெரிக்க குடியரசு தலைவராகப் பதவி ஏற்றார். அவர் ஜூலை 2ஆம் நாள் 1964 ஆண்டு கறுப்பர்களுக்கும் வாக்குரிமை முதல் அனைத்து உரிமைகளும் வழங்கிடும் சட்டத்தை கொண்டு வந்தார். அனைத்து வகை தீண்டாமையையும் ஒழிக்கும் சட்டத்தை கடுமையான எதிர்ப்புக்கு எதிரே நின்று நிறைவேற்றினார். ஆனாலும் நிறவெறிக் கொடுமைகள் தீரவில்லை.

### சில விளக்கங்கள்

அமெரிக்காவின் தற்கால வரலாற்றை 9/11 க்குப் பின் 9/11 க்கு முன் என வகுத்து வரைகின்றார்கள்.

இதன் நோக்கம் 9/11 என்ற இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு அழுத்தம் தருவதுதான். அதே போல் இந்த நிகழ்வு அதாவது இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட இந்த நிகழ்வு மக்கள் மத்தியில் நிலைக்க வேண்டும். அஃது அடுத்தத் தலைமுறைக்கு எடுத்துச் சொல்லப்படவேண்டும் என்ற நோக்கமும் உண்டு.

இவற்றோடு இந்த 9/11 2001 நிகழ்வுக்குக் காரணமாகப் பழி சுமத்தப்படும் இஸ்லாத்தின் மீதான வெறுப்பும், முஸ்லிம்கள் மீதான பகையும் உக்கிரமடைந்திட வேண்டும் என்ற எண்ணமும் உண்டு.

ஆனால் இன்று 9/11 - 2001 நிகழ்வுக்குக் ஏற்பாடு செய்தது அமெரிக்காவின் அதிபயங்கர உளவுத்துறை தான் என்பது வெளிப்பட்டு விட்டது. பல நூல்கள் இந்தப் பின்னணியில் எழுதப்பட்டுவிட்டன.

அதில் இந்த குளு கிளக்ஸ் கிளான் அமைப்பிற்கு நிரம்ப பங்குண்டு.

இன்று அமெரிக்கர்களே இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் பழி சுமத்துவதில்லை. உண்மையைச் சொன்னால் அமெரிக்க அரசாங்கம் சொல்லும் கதையை அமெரிக்கர்களே நம்பிடவில்லை.

பல நூல்களும் பல ஆவணத் தொகுப்புக்களும் வெளிவந்து விட்டன. இன்னும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

### இஸ்லாத்தின் வளர்ச்சி

இதே 9/11 2001க்குப் பின்னர்தான் அமெரிக்காவில் இஸ்லாம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது என்பது அமெரிக்கர்களே வெளியிடும் ஆய்வுகள் தெளிவு படுத்தும் உண்மை!

9/11-2001 நிகழ்ந்த இடத்தில் இன்று ஒருபெரும் மஸ்ஜித் (பள்ளிவாசல்தான்) நின்று கொண்டிருக்கின்றன. அந்த மஸ்ஜித்க்கு "Ground Zero Mosque" கிரவுண்ட் ஜீரோ மஸ்ஜித் என்று பெயர். இவற்றையெல்லாம் நாம் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு விரிவாகத் தந்துள்ளோம்.

ஆக, 9/11 - 2001 இல் இறந்தவர்களின் எண்ணிக்கையையும் அமெரிக்காவின் நிருவாகத் துறையில் ஊடுருவிவிட்ட பாசிஸ்ட்டுகளின் கணக்கில்தான் சேர்க்க வேண்டும்.

### அமெரிக்காவில் கறுப்பர்களுக்கு இன்னொரு பெயர்:

கறுப்பர்களை அமெரிக்காவில் ஆஃப்ரோ அமெரிக்கன் "Afro American" என்றே அழைக்கின்றார்கள். அன்றைய காலங்களில் ஆப்பிரக்காவின் காடுகளில் விலங்கினங்களை வேட்டையாடுவதைப் போல் வேட்டையாடி கறுப்பர்களைப் பிடித்துக் கப்பல்களிலே ஏற்றி வந்து அமெரிக்காவில் அடிமைகளாக வைத்திருந்தார்கள். இந்தப் பின்னணியில்தான் அவர்களை ஆப்ரோ அமெரிக்கர்கள் என அழைக்கின்றார்கள்.

அப்படி கப்பல்களிலே அழைத்து வரும்போது என்ன நடந்தது என்பதை பேரறிஞர் அண்ணா அவர்கள் "வெள்ளை மாளிகை" என்ற நூலில் கூறியுள்ளார்கள்.

இன்னும் அதிகமான தகவல்களை வேர்கள் வெளியீட்டகத்தின் மால்கம் எக்ஸ் என்ற நூலில் படிக்கலாம்.

இப்போது பரபரப்பாக விற்பனை யாகிக் கொண்டிருக்கும் **Crusade 2.0** என்ற நூல் இதனை பட்டவர்த்தனமாக எடுத்து கூறுகின்றது.

நம் நாட்டு பாசிஸ்டுகள் திரிசூலத்தின் மூன்று முனைகளுள் ஒன்று இந்துத்துவாவை எதிர்ப்பவர்களைக் கொலை செய்வதற்கு என அறிவித்ததைப் போன்றது.

இதில் அபிநவ் பாரத் என்ற அமைப்பு ஹேமந்த் கர்கரே என்ற நேர்மையான பிராமண அதிகாரியைக் கொலை செய்தது. காரணம் அவர் நாட்டில், நடந்த குண்டு வெடிப்புகள் எல்லாம் இந்துத்துவ தீவிரவாதிகள் செய்ததுதான் எனக் கூறியதே காரணம். இது ஆபிரஹாம் லிங்கன், ஜான் எஃப் கென்னடி ஆகியோரின் கொலைகளை ஒத்ததுதான்.

✍MGM

# நோய் எதிர்ப்பாற்றல் தரும் பேரிச்சை



உடலுக்கு தேவையான சத்துகளை பெற இயற்கை பல பொருட்களை நமக்கு கொடையாக தந்துள்ளது. அதில் பேரிச்சை மிகவும் அற்புதமான ஒன்று வைட்டமின்கள் தாதுக்கள் போன்ற சத்துகள் நிறைந்தது. சீரான உடல் வளர்ச்சிக்கும் நலமாக இருப்பதற்கும் ஒவ்வொருவரும் அவசியம் பேரிச்சை பழத்தை உண்ண வேண்டும்.

பேரிச்சையின் பலன் பேரிச்சையில் உள்ள நார்ச் சத்துக்கள் எளிதாக செரிமானமாகும். உண்டதும் புத்துணர்ச்சியும், சக்தியும் உடலுக்கு கிடைக்கிறது.


கெட்ட கொழுப்புகளை உறிஞ்சி அகற்றும் ஆற்றல் பேரிச்சைக்கு உண்டு. பெருங்கடற் பகுதியில் புற்றுநோயை உருவாக்கும் ரசாயனங்களை நீக்குவதிலும் பேரிச்சைக்கு ஈடு இல்லை. டேனின்ஸ் எனும் ஆன்டி ஆக்ஸிடென்ட் பேரிச்சையில் உள்ளது. இது நோய் தொற்று, ரத்தம் வெளியேற்றுதல், உடல் வெப்பமாதல் ஆகியவற்றுக்கு எதிரான செயல்படக்கூடியது. வைட்டமின் ஏ, பேரிச்சையில் ஏராளமான அளவில் உள்ளது. இது கண் பார்வைக்கும், குடல் ஆரோக்கியத்திற்கும் சருமத்திற்கும் அவசியமானது.

சிறந்த நோய் எதிர்ப்பு பொருள்களான லுடின் ஸி - காந்தின் மற்றும் பீட்டா கரோட்டின் நிறைந்துள்ளது. இவை குடல், தொண்டை, மார்பகம், நுரையீரல், இரைப்பை ஆகிய உறுப்புகளைத் தாக்கும் புற்றுநோயகளுக்கு எதிராக செயல்படக்கூடியது பேரிச்சை இரும்புச் சத்தை ஏராளமான அள்ளி வழங்கும்.

100 கிராம் பேரிச்சையில் 0.90 இரும்புச் சத்து உள்ளது. இரும்புத் தாது ரத்தத்திற்கு சிவப்பு நிறம் வழங்கும் ஹீமோகுளோபின் உருவாக்கத்தில் பங்கு வகிப்பதாகும். இது ரத்தத்தில் சுமந்து செல்லும் ப்ளெட்ளெடஸ் அளவை தீர்மானிப்பதிலும் பங்கெடுக்கிறது.

பொட்டாசியம் தாது குறிப்பிட்ட அளவில் உள்ளது. இதய வியாதிகள் ஏற்படாமலும் காக்கிறது. இதில் உள்ள கால்சியம், எலும்புகள் மற்றும் பற்களின் பலத்திற்கு அவசியம், நாடித்துடிப்பை சீராக்குதல் மற்றும் ரத்தக் கட்டி ஏற்படுவதை தடுத்தல் ஆகியவற்றிலும் பங்கு வகிக்கிறது.

# சி.ஐ.ஏ.வின் இரகசிய சித்ரவதைக் கூடங்கள் பற்றிய அமெரிக்காவின் செனட் ஆய்வறிக்கை!



***10. ஊடகங்களுக்கு இரகசிய தகவல்களை சி.ஐ.ஏ. கசிய விட்டது. குறிப்பாக சி.ஐ.ஏ.வின் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை குறித்து தவறான தகவல்களை அளித்தது.***

சி.ஐ.ஏ.வி.ன் பொது விவகாரத்துறை அலுவலகமும் மூத்த சி.ஐ.ஏ. அதிகாரிகளும் சி.ஐ.ஏ. வின் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை குறித்த இரகசிய வகைப்படுத்தப்பட்ட தகவல்களை சில குறிப்பிட்ட ஊடகவியலாளர்களுடன் பகிர்ந்து கொண்டனர். பொது மக்களின் எதிர்ப்பை தடுக்கவும் மக்களின் கருத்தை தங்களுக்கு சாதகமாக திருப்பவும் சி.ஐ.ஏ.வின் கைதுகளுக்கு எதிரான நடவடிக்கைகளையும் சி.ஐ.ஏ.வின் அதிகாரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தடுக்கவும் சி.ஐ.ஏ.விற்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்படாமல் தடுக்கவும் இவ்வாறு செய்யப்பட்டது.

சி.ஐ.ஏ.வின் தீவிரவாத எதிர்ப்பு மையத்தின் துணை இயக்குநர் 2005ல் தன்னுடைய சக ஊழியருக்கு அவர்

ஊடகங்களால் நேர்காணல் செய்யப் படுவதற்கு சற்று முன்பாக ஒரு கடிதம் எழுதினார். “நாம் ஏதாவது கதை சொல்லியாக வேண்டும். அல்லது நாம் அழிக்கப்பட்டு விடுவோம். அதன் தாக்கம் ஊடகத்தையும் தாண்டி இருக்கும். காங்கிரஸ் இதனை படிக்கும் நம் அதிகாரத்தை பறிக்கும், நமக்கான பட்ஜெட்டை குறைக்கும். நாம் நம்முடைய கட்டுக்கதையை சொல்லியாக வேண்டும். அல்லது விழுங்கப்பட்டு விடுவோம். இதற்கு இடைப்பட்ட நிலை என்று ஒன்று கிடையாது.”

அதே அதிகாரி இவ்வாறு கூறுகிறார், “வாஷிங்டன் போஸ்ட், நியூயார்க் டைம்ஸ் போன்ற பத்திரிகைகள் மூத்த சி.ஐ.ஏ. அதிகாரிகள் என குறிப்பிடுவது நம்மை தான்.”

சி.ஐ.ஏ. அதிகாரிகள் மேம்படுத்தப் பட்ட விசாரணை முறையைப்பற்றி ஊடகங்களுக்கு அளித்த பெரும்பாலான தகவல்களுமே தவறானவையே. எப்படி இவர்கள் காங்கிரசுக்கும், நீதித்துறைக்கும் வெள்ளை மாளிகைக்கும் தவறான தகவல்களை அளித்தார்களோ அதே போன்று இவர்கள் ஊடகங்களுக்கும் தவறான தகவல்களையே அளித்தார்கள்.

**11. சி.ஐ.ஏ. இந்த மேம்படுத்தப்பட்ட விசாரணை முறையை ஆரம்பிக்கும் போது அதற்கான தயார் நிலையில் இல்லை.**

செப்டம்பர் 17,2001இல் ஜனாதிபதி ஓர் இரகசிய குறிப்பில் கையெழுத்திட்டார். அது கடுமையான வன்முறை அச்சுறுத்தல் உள்ளவர்களையும் அல்லது அமெரிக்க மக்களின் உயிர்களை பறிக்கும் ஆபத்து உள்ளவர்களையும் தீவிரவாத நடவடிக்கை களில் ஈடுபாடு கொண்டவர்களையும் அதற்காக திட்டமிடுபவர்களையும் இரகசியமாக கைது செய்ய சி.ஐ.ஏ.வின் தீவிரவாதத்திற்கெதிரான அதிகாரிகளுக்கு அதிகாரம் அளித்தது. அதில் மேம்படுத்தப் பட்ட விசாரணையை பற்றியோ பலவந்தமான தகவல் பெறும் முறைகளைப் பற்றியோ எந்த குறிப்பும் இல்லை.

ஆனால் சி.ஐ.ஏ. தன்னுடைய முதல் கைதியை பெற்றுக்கொள்ளும் தயார்நிலை யில் அப்போது இல்லை. 2001ல் சி.ஐ.ஏ. இரகசிய சிறைகளை மற்ற நாடுகளில் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை தெரி வித்தது. அதில் இருந்த ஆபத்துக்ளையும் சி.ஐ.ஏ. தெரிவித்திருந்தது. இதன் காரணமாக இந்த சிறைச்சாலை களை அமைக்க அதாவது இரகசியமாக மேல் சொன்ன குறிப்பின் கீழ் கைது செய்ய அமெரிக்க இராணுவ தளங்களே சிறந்தவை பாதுகாப்பானவை என்ற முடிவெடுக்கப் பட்டது.

மார்ச் 2002இன் பிற்பகுதிகளில் அபு சுபைதா கைது செய்யப்பட்டவுடன் வேறு பல விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டியதாகியது. அபூ சுபைதாவை அமெரிக்க இராணுவ தளத்தில் வைத்து கைது செய்தால் அவரைப் பற்றி பன்னாட்டு செஞ்சிலுவை கமிட்டியிடம் அறிவிக்க வேண்டியிருக்கும் என்பதால் நாட்டிலேயே ஓர் இரகசிய சிறைச்சாலையை ஏற்படுத்திட அனுமதி கோருவது என முடிவெடுக்கப் பட்டது.

இந்த கைதிகளை இடம் மாற்றம் செய்ய எந்த திட்டத்தையும் சி.ஐ.ஏ. வைத்திருக்கவில்லை. இதன் காரணமாக அபூசுபைதாவை தனிமை சிறையில் ஆயுட்காலம் முழுவதும் வைக்க சி.ஐ.ஏ. அதிகாரிகள் முடிவெடுத்தனர்.

சி.ஐ.ஏ. தன் முந்தைய கால அனுபவம் எதையும் தன்னுடைய பலவந்தமான தகவலை பெறும் முறையில் பயன்படுத்த

வில்லை. அதனை மீளாய்வு செய்யவில்லை. “மனிதத்தன்மையற்ற உடல்ரீதியான மனரீதியான சித்ரவதைகள் எதிர்விளைவு களை தான் ஏற்படுத்தும். அது உளவுத் தகவல்களை பெற்றுத்தராது. மாறாக அது தவறான பதில்களையே பெற்றுத்தரும்” என்று காங்கிரசிடம் அது கூறிய கூற்றினையும் மறந்துவிட்டது. சி.ஐ.ஏ. அமெரிக்காவின் மற்ற விசாரணை நிபுணத்துவம் கொண்ட துறைகளையும் தொடர்பு கொள்ளவில்லை.

ஜூலை 2002ல் இரண்டு ஒப்பந்த உளவியலாளர்களின் ஆலோசனையின் அடிப்படையில் நீதித்துறையிடமிருந்து பலவந்தமான விசாரணை முறைக்கு சி.ஐ.ஏ. ஒப்புதல் கோரியது. இந்த விசாரணை முறையை அது U.S. Air Force Survival, Evasion, Resistance and Escape (SERE) அமெரிக்க விமானப்படை உயிர்பிழைத்தல், நழுவுதல் எதிர்ப்பு மற்றும் தப்பித்தல் அதிகாரி களிடம் இருந்து பெற்றுக் கொண்டது. ஆனால் இந்த U.S. Air Force Survival, Evasion, Resistance and Escape (SERE) துறையோ ஜெனீவா ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத நாடுகளிடம் அமெரிக்கர்கள் மாட்டிக் கொண்டால் எப்படி நடந்து கொள்வது என்பதற்காக உருவாக்கப்பட்டது.


கைதுகளையும் விசாரணைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்த நேரத்தில் சி.ஐ.ஏ. போதிய அனுபவமில்லாத போதிய பயிற்சி இல்லாத அதிகாரிகளை நியமித்தது. அபூசுபைதாவை கைது செய்த ஏழு மாதங்களுக்கு பிறகே அதாவது தன் மேம்படுத்தப்பட்ட விசாரணை முறைகளை 3 மாத காலம் செய்து முடித்த பிறகே விசாரணைக்கான பயிற்சிகளுக்கு அதிகாரிகளை அனுப்பியது. சி.ஐ.ஏ.வின் இயக்குநர் ஜார்ஜ் டெனட் ஜனவரி 2003ல் விசாரணை முறைக்கான வழிகாட்டுதல் களை அனுப்பினார். ஆனால் அதற்கு முன்பே சி.ஐ.ஏ.வினால் கைது செய்யப்பட்ட நன்கு அறிந்த 119 பேரில் 40 பேர் சி.ஐ.ஏ.வினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

12. **சி.ஐ.ஏ.வினால் 2002 மற்றும் 2003ம் ஆண்டின் ஆரம்பத்தில் செய்யப் பட்ட கைதுகளிலும் விசாரணை நடவடிக்கைகளிலும் சி.ஐ.ஏ.வின் மேலான்மையும், செயல்பாடுகளும் மொத்தமும் தவறானவை. சி.ஐ.ஏ. வின் கோபால்ட் (COBALT) சிறை செப்டம்பர் 2002ம் ஆண்டு நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆய்வில் அடையாளம் காணப்பட்டுள்ள 119 கைதிகளில் பாதிக்கும் மேற் பட்டோர் இந்த சிறையில் அடைக்கப்பட்டனர். சி.ஐ.ஏ. இந்த கைதிகளைப் பற்றிய மிகச்சாதாரண மான அறிக்கைகளையே வைத் திருந்தது. பயிற்சி பெறாத சி.ஐ.ஏ. அதிகாரிகளினால் தொடர்ச்சியாக அங்கீகாரமற்ற மேற் பார்வையற்ற மிக கடுமையான உடல் ரீதியான சித்ரவதைகள் இங்கு நடத்தப் பட்டன.**

COBALT- ல் அனுபவமற்ற இளைய அதிகாரி ஒருவரை சி.ஐ.ஏ. இங்கு பணியமர்த்தியது. நவம்பர் 2002ல் ஒரு கைதி அரை நிர்வாணமாக்கப்பட்டு கான்க்ரீட் தரையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டார். இதன் காரணமாக உடல் குறைந்த வெப்பநிலைக்கு சென்று அவர் இறந்து விட்டார். அந்நேரம் சி.ஐ.ஏ. தலைமை யகத்தில் உள்ள எந்த ஒரு பிரிவும் (Unit) இதற்கு பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. 2003ல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலு வலகம் இது குறித்து விசாரித்த போது சி.ஐ.ஏ.வி.ன தலைமையும் மூத்த வழக் கறிஞர்களும் தங்களுக்கு குறைவான தகவல்களே தெரியும் அல்லது ஒன்றுமே தெரியாது என கூறிவிட்டனர். இன்னும் சிலரோ மேம்படுத்தப்பட்ட விசாரணை முறை அங்கு பயன்படுத்தப்படவில்லை என நம்பினர்.

**தொடரும் . .**

# மத்திய உளவுத்துறையின் இன்னொரு பொய் அம்பலம்!



## தயாராகின்றது யாசீன் பட்கலுக்கு என்கவுண்டர் கொலை!

கடந்த வாரங்களில் மத்திய உளவுத்துறை ஐ.பி.யின் வழியாக மீண்டுமொரு பொய்யான செய்தி ஊடகங்களில் வழி கசிய விடப்பட்டது. எப்பொழுதும் போல் இந்த முறையும் ஊடகங்களின் உளவுத்துறையின் பம்மாத்து செய்திகளை உண்மை செய்திகளென ஒளிபரப்பின. அது யாசீன் பட்கல் சிரியாவின் ஐ.எஸ்.ஐ.எல் தீவிரவாதிகளின் உதவியோடு சிறையிலிருந்து தப்பிக்க போகிறார் என்பதே.

யாசீன் பட்கல் தப்பிக்க சிரியாவின் ISDL உதவி

இந்தியாவில் இந்துத்துவா வாதிகளால் நடத்தப்பட்ட பல குண்டு வெடிப்புகளுக்கு பலிகடாவாக்க, ஐ.பி. என்ற மத்திய உளவுத்துறையின் கற்பனையாக உருவாக்கப்பட்டதே இந்திய முஜாஹிதீன் இயக்கம். இதற்காக கண்டெடுக்கப்பட்ட தலைவர் தான் யாசீன் பட்கல். ஏனெனில் இந்த குண்டு வெடிப்புகளில் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பங்கேற்றவர்கள் மத்திய உளவுத்துறையை சார்ந்தவர்கள் (படிக்க கர்கரேயை கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் - முன்னாள் ஐ.ஜி. மஹாராஷ்டிரா எஸ்.எம். முஷ்ரீப் எழுதியது)

யாசின் பட்கலை அங்குமிங்கும் வலை வீசி தேடி வருவதாக கூறிவந்த இவர்கள் 2013-ல் நேபாளத்தில் இவரை கைது செய்ததாக கூறி சிறையிலடைத்தனர். பின்னர் இவரை தெலுங்கானவின் ஹைதராபாத்தில் உள்ள செர்ளாபள்ளி சிறையிலடைந்தனர்.

கடந்த வாரம் ஊடகங்களில் உளவுத் துறையின் வழியாக பெற்றதாக கூறி யாசீன் பட்கல் சிறையை உடைத்து தப்பிக்க போவதாகவும் அதற்கு சிரியாவின் ஐ.எஸ்.ஐ.எல் போராளிகள் உதவுவார்கள் எனவும் அதற்காக யாசின் பட்கல் காத்திருப்பதாகவும் செல்போன் வழியாக தன் மனைவியிடம் உரையாடியதாக செய்திகளை வெளியிட்டனர். பரபரப்பை ஏற்படுத்தினர். இந்த தகவல்கள் மத்திய உளவுத்துறை அளித்தது எனவும் செய்திகள் வெளியிட்டன.

வழக்கம் போல் இந்த செய்திகள் பரபரப்பின் உச்சத்தை அடைந்தன. இந்த செய்திகளின் வழி ஆதாயம் அடைவோருக்கு இம்முறை அவமானமே மிஞ்சியது. மத்திய உளவுத் துறை சொன்னது அனைத்தும் பொய் என ஹைதராபாத் சிறை அதிகாரிகள் கூறி விட்டனர். இவ்வாறு சிறையிலிருந்து தப்பிப்பது செய்ய இயலாத ஒன்று என டைரக்டர் ஜெனரல் (சிறைச்சாலை) வி.கே. சிங் அவர்கள் கூறிவிட்டார்.

“அடிப்படையில் இது ஆதாரமற்ற தகவல். இது எங்கிருந்து வந்தது என தெரியவில்லை. இருப்பினும் நான் ஆய்வு செய்கிறேன்” என தெலுங்கானாவின் காவல்துறை டைரக்டர் ஜெனரல் அனுராக் ஷர்மா பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் கூறினார்.

செர்ளாபள்ளி சிறைச்சாலை கடுமையான பாதுகாப்பிற்கு பெயர் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



## டி.ஐ.ஜி. நரசிம்மாவின் பத்திரிகையாளர் சந்திப்பு

உளவுத்துறை தான்தோன்றித் தனமாக கசியவிட்ட இந்த தகவல் அத்தனை சுலபமாக முந்தைய செய்திகளை போல் அத்தோடு அமுங்கிவிடவில்லை. இது செர்னாபள்ளி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தன்மான பிரச்சனை. எனவே சிறைச்சாலை டி.ஐ.ஜி. நரசிம்மா அவர்கள் பத்திரிக்கையாளர்களை சந்தித் தார். அப்போது பத்திரிக்கையாளர்கள் அடுக்கடுக்காக கேள்விக்கணைகளை அவர் மீது தொடுத்தனர். அவற்றையெல்லாம் நரசிம்மா தெளிவான பதில்களின் வழியாக உடைத்தார்.

“எனது பத்திரிகை நண்பர்களே முதலில் யாசீன் பட்கலுக்கு சிறைச்சாலை அதிகாரிகளே தொலைபேசி கொழுத்தது போன்று தோற்றம் அளிக்கப்படுகிறது. ஆனால் உண்மை என்னவெனில் மாநகர மூத்த நீதிபதியின் ஆணையின் பேரிலேயே சட்டத்திற்கு உட்பட்டு யாசின் பட்கலுக்கு தரை வழி தொலைபேசி (லேண்ட் லைன்) வாரத்திற்கு இருமுறை ஐந்து ஐந்து நிமிடங்கள் வழங்கப்படுகின்றன. அவருக்கு கைபேசிகளோ வேறு தொலைபேசி சாதனங்களோ வழங்கப்படுவதில்லை. அவர் STD மட்டுமே பேசியுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட தொலைபேசியில் ISD வசதிகள் கிடையாது. ஆகவே அவர் சிரியாவின் உதவிகளை நாடியுள்ளார் என்பதில் எள்ளவும் உண்மை கிடையாது.

இவ்வாறாக அவர் 27 முறை தொலைபேசியில் பேசியுள்ளார். இவ்வாறு அவர் பேசுவது அவருடைய தாய் மற்றும் மனைவியுடன் மட்டும்தான். அந்த இரண்டு பேரின் எண்களும் NIAவிடம் கொடுக்கப் பட்டு அதற்கு தடையேதும் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த 27 உரையாடல்களும் பல்வேறு அரசு பாதுகாப்பு நிறுவனங்களிடம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. நானே அதில் பல உரையாடல்களை கேட்டுள்ளேன்.

இவற்றில் எந்த உரையாடலிலும் தப்பி செல்வது பற்றி எதுவும் பேசவில்லை.”

உடனே பத்திரிக்கையாளர்கள் அவரை இடைமறித்து “அப்படியானால் உளவுத்துறை கூறுவது பொய்யா?” எனக் கேட்டனர்.

அதற்கு நரசிம்மா “அவர்கள் அவர் களின் கடமையை செய்கிறார்கள். நாங்கள் எங்கள் கடமையை செய்கிறோம். விசா ரணையின் முடிவு உண்மை என்ன என்பதை தெளிவுப்படுத்தும்” என கூறினார்.

தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய 3 மொழிகளில் இதனை அவர் அழுத்தமான தெரிவித்தார்.

## ஏன் இந்த தகவல் கசிய விடப்படுகிறது?

யாசீன் பட்கல் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை. இந்திய முஜாஹீதீன் இயக்கம் என்பதும் கற்பனை யே. நீதிமன்றத்தில் யாசின் பட்கலுக்கு எதிராக எந்தவிதமான ஆதாரங்களையும் கொண்டு வர இயலவில்லை. எனவே யாசின் பட்கலை கொலை செய்து தாங்கள் சொன்ன அத்துணைப் பொய்களையும் உண்மைப்படுத்திட முயற்சிக்கின்றார்கள்.. எனவே சிறையை உடைத்து அவர் தப்ப முயன்று வருவதாக செய்திகளை வெளியிடு கிறார்கள். இது பின்னர் அவரை கொலை செய்வதற்காகவே.

என் மகனின் உயிருக்கு ஆபத்து. அவனுக்கு ஏதோ மோசமான ஒன்று நடக்கப்போகிறது. முதலில் என் மகன் சிரியாவிற்கு தப்பிக்க இருப்பதாகக் கூறினார்கள். எனவே அவன் சிறையில் இருந்து தப்பிக்கும் போது சுட்டுக் கொன்றதாக கூறி அவனை கொலை செய்துவிடக்கூடும். என் மகன் பல சந்தர்ப்பங்களில் போலிசார் அவனை கொலை செய்துவிடக் கூடும் என கூறியிருக்கிறான். எனவே இதனை

**தொடர்ச்சி 25ம் பக்கம்**

# தீன் சுடர்
# டி.எம். உமர் ஃபாரூக்




டி.எம். உமர் ஃபாரூக் அவர்களுக்கு தீன் சுடர் விருது
மலேசியா டத்தோ இக்பால் அவர்களால் வழங்கப்பட்டது.

**அண்ணன் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அவர் பிறந்த நாளிலிருந்து அவரை அல்லாஹ் அழைத்துக் கொண்ட 5.6.2015 வரையும் எழுத வேண்டும் என்பதே அவா. ஆனால் அதற்காக ஒரு பெரும் முயற்சி தேவை. அதற்கான கால அவகாசமும் இல்லை. அதனால் அவரோடு உள்ள நினைவுகளை மட்டுமே பதிவு செய்கின்றேன்.**

- மு. குலாம் முஹம்மத்

தொடக்க காலங்களில் நாங்கள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்துக் கொண்டிருந்தபோது அண்ணன் கொடிக் கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள், டி.எம். மணி என்றொருவர் இருக்கின்றார். நானும் (கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் வும்) மணியும், இளையபெருமாளுடைய நீதிக்கட்சியில் இணைந்து பணியாற்றி னோம். நான் இளைய பெருமாளுடைய கட்சியிலிருந்து வெளியே வந்து விட்டேன். ஆனால் டி.எம். மணி இப்போது அவ ருடைய கட்சியில் பொதுச் செயலாளராக இருக்கின்றார் எனக் கூறி இளைய பெரு மாளுடன் டி.எம். மணியையும் அறிமுகப் படுத்தினார்கள் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ்.

பல முறை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இளைய பெருமாளைச் சந்தித்திருக்கின்றோம். டி.எம். மணியையும் சந்தித்திருக்கின்றோம்.

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபின், இளைய பெருமாளுடைய கட்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். ஒரு நாள் நாங்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் வைத்து பல விவகாரங்களைப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது இளைய பெருமாள் அவர்கள் கொடிக்கால் அவர்களிடம் நீங்கள் ஏன் அவசரப்பட்டு இஸ்லாத்தில் இணைந்தீர்கள், கட்சி என்ன ஆகும் எனக் கேட்டார்கள்.

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள் சட்டென்று “அதற்காக நான் நரகத்திற்குப் போகமுடியாது” என்றார்கள்.

இளைய பெருமாள் வாயடைத்துப் போனார்.

டி.எம். மணியைப் பற்றிப் பேசிடும் போதெல்லாம் Cadre - கட்டுப்பாடான நபர் எனப் பேசினார்கள் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள். அவரோடு எங்களையெல்லாம் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

ஓரிரு வாரங்களுக்குப் பின் டி.எம். மணியை அவருடைய இடத்திலேயே சந்தித்து விடுவது என நானும் கொடிக் காலும் திருப்பனந்தாள் சென்றோம். அந்தப் பயணத்தில் இஸ்லாமிய இயக்கங்கள் பற்றிய ஒரு குறுகிய வரலாற்றைக் கொடிக் காலுடன் பகிர்ந்து கொண்டேன்.

அங்கு கடைவீதியில் ஒரு டெய்லர் கடையில்தான் டி.எம். உமர் பாரூக் அவர் களின் அலுவலகமாய் செயல்பட்டது.

அங்கு சில தொண்டர்களுடன் டி.எம். உமர் பாரூக் அவர்கள் இருந்தார்கள். ஏதோ பிரச்னைகள் சம்பந்தமாக ஒரு விவாதம் நடந்து கொண்டிருந்தது.

எங்களைக் கண்டதும் மகிழ்ச்சியோடு வரவேற்றார். டீ சொல்லுங்கள் என்றார்கள்.


அப்போது கொடிக்கால் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். இவர்களின் விருந்தோம்பல் அளவுக்கு இவர்களிடம் அத்தனை பேருக்கும் டீ குடிக்க காசு இருக்காது. நாமே கொடுத்து விடுவோம் எனக் கூறினார்கள். நாங்களே கொடுத் தோம். பின்னர் கொடிக்கால் சொன்னது தான் உண்மை என்பதைத் தெரிந்து கொண்டோம்.

கடைவீதி டெய்லர் கடையில் நடந்த விவாதங்களிலிருந்து இவர்கள் யதார்த்த மானவர்கள். போலித்தனங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதையும் அதே நேரத்தில் காசு பணமில்லாமல் காரிய மாற்றும் செயல்மறவர்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

விவாதத்திற்குப் பின் நாங்கள் தம்பி மன்சூர் அலியைச் சந்திக்க மயிலாடுதுறை சென்றோம்.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்**


# வரப்பெற்றோம்




**செங்கிஸ்கான் பேரர்கள்**

**நூல் ஆசிரியர்**
**தாழை மதியவன்**

**வெளியீடு**
**தோணித்துறை**

**பக்கங்கள் - 96 விலை ரூபாய் - 50.00**

**விற்பனை உரிமை**
**தாழையான் பதிப்பகம்**
**160, தங்கராஜ் நகர், கடலூர் - 607 002.**
**அலைபேசி : 97102 66971**



### மோடி மனைவி விவகாரம்

# மோடிக்கு அரியானா பெண்கள் அறிவுறுத்தல்!

ஜின்த் பிப்.8, அரியானா மாநிலம், ஜின்த் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் அமைப்பு ஒன்று "முதலில் மோடி தனது மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்து காட்டிய பிறகு ஊருக்கு உபதேசம் செய்யட்டும்" என்று கூறியுள்ளது.

அரியானா மாநிலத்தில் சில நாட்களுக்கு முன்பு 'பெண் குழந்தையைக் காப்பாற்றுங்கள், பெண் குழந்தையை படிக்க வையுங்கள்' என்ற முழக்கத்துடன் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தி சில திட்டங்களை அறிவித்தார்.

அங்கு பேசும் போது அரியானாவில் தான் பெண்கள் நிலை மிகவும் மோசமாக உள்ளது. இங்கு தான் பெண்களை கணவன்கள் சரியாக நடத்த மறுக்கிறார்கள். பெண்கள் சமூக அக்கறையின்றி வாழ்கிறார்கள் என்று பேசினார்.

**மாதம்தோறும் 10,000 கடிதங்கள் மோடிக்கு!**

இதற்கு அரியானாவைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்த நிலையில் அரியானா ஜின்த் மாவட்டத்தில் உள்ள பெண்கள் அமைப்பு "முதலில் மோடி தனது மனைவியுடன் வாழ்ந்து காட்டட்டும்" என்று கூறியிருந்தனர். மேலும் அவர்கள் "வாரம் ஒரு முறை மோடிக்கு மனைவியுடன் சேர்ந்து வாழ வேண்டி 10,000 கடிதங்கள் எழுதுவோம். அவர் தனது மனைவியுடன் சேர்ந்து வாழும் வரை நாங்கள் தொடர்ந்து விடாமல் கடிதம் எழுதுவோம்" என்று கூறியிருந்தார்கள்.

மேலும் அவர்கள் கூறியதாவது: 'உலகப் புகழ் விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா, விளையாட்டு வீராங்கனை சானியா நெய்வால், ஹாக்கி வீராங்கனை சுமன் பால், மல்யுத்த வீராங்கனை சுமன் கத்து போன்றோர் அரியானா பெண்கள் தான். உங்களது அமைச்சரவையில் உள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவர்களும் அரியானாவைச் சேர்ந்தவர்

தான். மேலும் இந்தியாவிலேயே அதிக அளவில் அயல்நாடு சென்று பெரிய பதவியில் இருக்கும் பெண்களில் அரியானா வைச் சேர்ந்தவர் தான் அதிகம். பெண் களுக்கு எதிரான நிலை அரியானாவில் மாத்திரம் இல்லை, இந்தியா முழுவதும் இந்த நிலை உள்ளது. ஆனால் எங்கள் மாநிலத்தை மாத்திரம் சுட்டிக் காட்டி யுள்ளது தவறு.'

**ஒபாமாவைப் பார்த்தாவது திருந்த வேண்டாமா?**

அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா இரண்டாவது முறையாக இந்தியாவுக்கு வந்திருந்தார். அவர் இரண்டு முறையும் தனது மனைவியுடன் வருகை தந்தார். இது அவர் இந்த உலக மக்களுக்கு கூறும் சிறந்த எடுத்துக்காட்டாக கருதுகிறேன் என்று அவரே கூறுகிறார். எந்த ஒரு அயல்நாட்டு சுற்றுப் பயணத்திற்குச் சென்றாலும் தனது மனைவியை அழைத்துச் செல்லாமலிருப்ப தில்லை. அவரை தனது நண்பர் என்று பெருமையுடன் கூறிக்கொண்டு இருக்கும் மோடி அவரிடம் இருந்து குடும்பவாழ்க்கை யில் மனைவியின் முதன்மைத்துவம் பற்றி தெரிந்திருக்க வேண்டாமா?

முதலில் திருமணம் பிறகு சில ஆண்டு மண வாழ்க்கை அதன் பிறகு அந்தப் பெண்ணை தனிமையில் விட்டுவிட்டு வெளியேறியவர் அந்தப் பெண்ணைப் பற்றி சிறிதாவது சிந்தித்துப் பார்த்தாரா?

“பெண்களின் நிலை பற்றிப் பேசும் முன் தான் அதற்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். முதலில் தனது மனைவியை அழைத்து வந்து குடும்பம் நடத்திவிட்டு ஊருக்கு உபதேசம் செய்யட்டும்! அவர் தனது மனைவியை அழைத்து வந்து குடும்பம் நடத்தும் வரை வாரத்திற்கு 10,000 கடிதங்கள் தொடர்ந்து எழுதுவோம்” என்ற கூறினார்கள். மேலும் ஜின்த் மாவட்டத்தில் உள்ள பல்வா என்ற சிற்றூரைச் சேர்நத் ஜில்லா பரிஷத் தலைவி சுரீந்தர் தேவி கூறும் போது விரைவில் நாங்கள் எங்கள் ஜில்லா பரிஷத்தின் மூலம் மோடி தன் மனைவியுடன் வாழ வேண்டும் என்று தீர்மானம் இயற்றி வற்புறுத்துவோம் எனக் கூறினார்கள்.

இந்தப் பெண்களின் கோரிக்கை குறித்து அரியானா பா.ஜ.க. எந்த கருத்தும் கூற மறுத்துவிட்டது.

**நன்றி : தி ஹிந்து, விடுதலை - 9.2.2015**

---

**21ம் பக்கத்தின் தொடர்ச்சி. . .**


சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனே கவனிக்க வேண்டும்.

இந்த தகவல்கள் எல்லாம் அவனை கொலை செய்ய வேண்டும் என சதி செய்யும் அரசு நிறுவனங்களால் கசிய விடப்படுபவை. நாளை அவனை கொன்று அவன் தப்பிக்கும் போது தான் சுட்டோம் என கூறினாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. அந்த நிலையை நாங்கள் அடைந்து விட்டோம். யாரை நாங்கள் அணுகுவது என்பது தெரியவில்லை” என யாசின் பட்கலின் தாயார் ரிஹானா சித்திபாபா அவர்கள் பத்திரிகையாளர்களிடம் கூறினார். இதையே அவர் நீதிமன்றத்தில் பிரமாண பத்திரமாகவும் தன் மகன் உயிருக்கு ஆபத்து என தாக்கல் செய்துள்ளார்.

ஆக யாசின் பட்கலை கொலை செய்ய மத்திய உளவுத்துறை தயாராகி விட்டது. அதற்கான மூளை இன்டர் நேஷனல் விவேகானந்தா ஃபவுன்டேஷனில் தான் உருவாகியிருக்க வேண்டும். ஏனெனில் யார் எப்படி செயல்பட வேண்டும் எங்கு குண்டு வைக்க வேண்டும் என முடிவு செய்பவர்கள் இவர்களே.

இதன் முன்னாள் தலைவர் தற்போதைய தேசிய பாதுகாப்பு செயலர் என்பது இன்னும் குறிப்பிடத்தக்கது.

# காவிக் கட்சியினரின், அறிவியலுக்கு முரணான செயல்பாடுகள்




**மும்பையில் அண்மையில் நடைபெற்ற 102 ஆவது இந்திய அறிவியல் மாநாடு என்பது அசல் கேலிக் கூத்தாக, மூடத்தனத்தின் மய்யப் புள்ளியாகச் சுழன்றது.**

**இதற்கு முன் எந்தக் காலத்திலும் இப்படியொரு தெருப் புழுதிகள் அரங்கேறியதும் இல்லை. 'சமஸ்கிருதம் மூலம் பண்டைய இந்திய அறிவியல், யோக எனும் நரம்பியல் மருத்துவம், பண்டைய இந்தியக் கட்டடங்களில் கட்டுமானப் பொறியியல் அறிவியல் கோட்பாடுகள்' என்பது போன்ற மலத்தில் அரிசிப் பொறுக்கும் உரைகள் நிகழ்த்தப்பட்டன.**

**இவற்றை மறுத்தும், எதிர்த்தும் அறிவியலாளர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியும் வருகின்றனர். இது குறித்து 'எகனாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி' இதழில் வெளிவந்த அறிவியல் ரீதியான கட்டுரை மொழி பெயர்த்து இங்கே தரப்படுகிறது.**

இந்திய அறிவியல் மாநாட்டு நிகழ்ச்சிகளில் ஜோதிடம், வாஸ்து போன்ற போலி அறிவியல் தலைப்புகளுக்கு இடம் அளிக்கப்பட்டிருந்ததை அனைத்து நிலைகளிலும் அனைத்து விஷயங்களும் தற்போது காவிமயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நமது கல்வி கலாச்சார சீர்கேட்டிற்கு வழி வகுக்கும் - நடைமுறை யின் ஒரு பகுதியாகவே பார்க்கப்பட வேண்டும்.

இந்து மதக் கலாச்சாரமே மிகமிக உயர்ந்தது என்பதை நிலை நாட்டுவதற்காக

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் எல்லா வகையான பொய்களையும் புனைசுருட்டுகளையும் புகுத்துவதற்காக சங் பரிவாரத்தைச் சேர்நத் கழுகுகள் நீண்ட காலமாகவே முயன்று வருகின்றன. இப்போது இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த இந்துத்துவ செயல்திட்டத்தின் வேர்களை, இந்து மதத்துக்கு மறு மலர்ச்சியை ஏற்படுத்த முனைந்த முன் னோடிகள் என்று அழைக்கப்படும் வங்காள மாநிலத்தைச் சேர்ந்த அறிவுஜீவிகள் என்று கருதப்படும் ராஜாராம் மோகன்ராய் முதற்கொண்டு சாமி விவேகானந்தர், பங்கிம் சந்திரர் ஆகியோரிடம் காணலாம்.

ஆனால் இந்து மதத்தையும், இந்துக்களையும் மிகமிக உயர்ந்தவர் களாகக் காட்டிக் கொள்ளும் இந்தச் செயல் திட்டத்தின் உணரத்தக்கத் தொடக்கத்தை மகாராஷ்டிராவில் பேஷ்வாக்களின் வீழ்ச்சியையடுத்து, சித்பவன் பார்ப்பனர் கள் தங்களை அறிவு ஜீவிகளாகக் காட்டிக் கொள்ள மேற்கொண்ட முயற்சியில் காணலாம். வேதங்களில் காணப்படும் துருவவீடு என்ற நூலில் பாலகங்காதர திலகராலும், இந்திய வரலாற்றின் புகழ் பெற்ற **ஆறு சகாப்தங்கள்** என்று நூலில் இந்துத்துவக் கோட்பாட்டை உருவாக்கிய வரான வினாயக் தாமோதர் சாவர்க் கராலும் **தாஜ்மஹால் ஓர் உண்மைக் கதை** என்ற தனது நூலில், தாஜ்மஹால் உண்மையிலேயே ஒரு பழைய சிவன் கோவில் என்றும் தேஜோ மஹாலயா என்றழைக்கப்படும், ஒரு ராஜபுத்ர அரண் மனை என்றும் பெருமை பேசிக்கொண்டே புருஷோத்தம் நாகேஷ் ஓக் போன்றவர் களாலும் சிந்தித்து சொல்லுருவாக்கப் பட்டதுதான் இந்தச் செயல்திட்டம். அனைத்து மத்திய காலக் கட்டங்கள் மட்டுமின்றி 'மெக்காவில் உள்ள கபாவும்' கூட பண்டைய இந்துச் சின்னமே என்று ஓக் கூறவது, அவரது பயித்தியக்காரத் தனம் அல்லது முட்டாள்தனத்தின் எல்லையைக் காட்டுவதாக இருக்கிறது என்றே கூறலாம்.

அறிவியல் தொழில்நுட்பக் களத்தில் இருப்பதாக அவர்கள் பெருமையாகப் பேசிக் கொள்ளும் இந்து மதத்தின் உயர் சிறப்புத் தன்மையும் இத்தகைய உரிமை கோரகளில் அடங்கும். மும்பைப் பல்கலைக்கழகத்தின் சார்பில்

மும்பையில் அண்மையில் நடத்தப் பட்ட 102ஆவது இந்திய அறிவியல் மாநாடு போன்ற கற்றறிந்தோர் நிறைந்த அவையில் குறிப்பிட்ட பெயர்களில் இந்து மதத்தின் உயர்தனிச் சிறப்பை அழைப்பது பற்றி தங்களது குரலை அவர்கள் இதற்கு முன்பு எப்போதுமே உயர்த்தியதில்லை. குறிப்பாக காதல் மீதான புனிதப் போர், ராம்சாதே - ஹராம் சாதே, பகவத் கீதை ஆகியவை தேசிய நூலாக்கப்படவேண்டும். காந்தி யைச் கொன்ற கோட்சே ஒரு தேசபக்தன். அனைத்து முஸ்லிம் மதரசாக்களும் தீவிரவாதிகளின் பயிற்சி மய்யங்கள் போன்ற இந்துத்துவ காவிப் படையினர் தொடர்ந்து எழுப்பிக் கொண்டிருக்கும் முழக்கங்களின் செவிகளைத் துளைக்கும் கீச்சொலியும், மிகுந்த ஏமாற்றத்தையும் மனவருத்தத்தை யும் அளிப்பதாக இருக்கிறது.

### கோமாளித்தனங்கள்

இந்தியாவில் அறிவியல் ஆராய்ச்சி கள் மேற்கொள்ளப்படுவதற்கு தூண்டுதல் அளிப்பதற்காக ஆண்டுக்கு ஒரு முறை அறிவியல் ஆய்வுப் பணியாளர்கள் கூடிப் பேசுவதற்காக அறிவியல் மேம்பாட்டுக் கான ஆங்கிலேயர் சங்கத்தைப் போன்ற ஓர் அமைப்பாக இந்த இந்திய அறிவியல் சங்கம் இரண்டு ஆங்கிலேயே வேதி யியலாரர்களான ஜே.எல். சிம்மன்சன், பி.எஸ்.மக்மோகன் ஆகியவர்களின் முயற்சியினால் தொடங்கப்பட்டதாகும்.

கொல்கத்தா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் அஷூ டோஷ் தலைமையில் கொல்கத்தா ஆசிய சங்கக் கட்டடத்தில் 1914 ஜனவரி 15 ஆம் தேதிமுதல் 17 ஆம் தேதி வரை நடைபெற்ற அதன் முதல் கூட்டம் தொடங்கி இந்தச் சங்கத்தின் மாநாடுகள் சோதனை வழியாக மெய்ப்பிக்கப்பட இயன்ற உண்மையான அறிவியல் ஆராய்ச்சிகள் பற்றி பகுத்தறிவுடன் கூடிய விவாதங்களை நடத்தி வந்திருக்கின்றது.

அறிவியலுக்குத் தொடர்பு இல்லாத வேறு எவர் ஒருவருக்கும் இந்திய அறிவியல் மாநாட்டு அமைப்பு இதுவரை மேடை அமைத்துத் தந்ததில்லை. இத்தகைய பாரம்பரியத்தைக் கொண்ட இந்த இந்திய அறிவியல் சங்கம் அறிவியலாளர் சமூகத்தின் முன்னே, தங்களின் கற்பனையிலான கட்டுக் கதைகளை இந்துத்துவ வாதிகள் அவிழ்த்து விடுவதற்கு மும்பை அறிவியல் மாநாட்டில் ஒரு மேடை அமைத்துத் தந்துள்ளது பா.ஜ.க. ஆட்சியில்.

தங்களது செயல்பாடுகளை இந்துத்துவவாதிகள் முடிவு செய்ய இந்திய அறிவியல் சங்கம் அனுமதிதத்திருப்பதன் ஓர் அடையாளமே யாகும்.

மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்சசியில் சமஸ்கிருதம் மூலம் பண்டைய இந்திய அறிவியல் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடத்தப்பட திட்டமிடப்பட்டிருந்தது.

யோகா என்னும் நரம்பியல் மருத்துவம், பண்டைய இந்தியக் கட்டடங்களில், கட்டுமானப் பொறியியல் அறிவியல் கோட்பாடுகள், பண்டைய இந்திய அறுவை சிகிச்சை, பண்டைய இந்தியத் தாவரவியல் போன்ற தலைப்புகளில் இக்கருத்தரங்களில் பேசுவதற்கு எட்டுப் பேச்சாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

**ஆகாயப் புரட்டல்கள்**

பண்டைய கால இந்திய விமானத் தொழில் நுட்பம் என்ற தலைப்பில் ஒரு விமான ஓட்டுநர் பயிற்சி மய்யத்தின் ஓய்வு பெற்ற முதல்வர் கேப்டன் ஆனந்த் போடாஸ் என்பவர், மும்பை சாமி விவேகாந்தா இன்டர்நேஷனல் பள்ளி மற்றம் இளம் கலைக் கல்லூரியின் ஒரு பேச்சாளருடன் இணைந்துதான் தயாரித்த 30 நிமிட உரையை ஆற்றினார். அகஸ்தியர், பரத்வாஜர் போன்ற ஞானிகள் 7000 ஆண்டுகளுக்கு முன்பு வேத காலத்தில் ஜம்போ ஜெட் என்னும் மிகப் பெரிய விமானங்களைக் கண்டு பிடித்தனர் என்றும், அந்த விமானங்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதுடன் ஒரு கோளிலிருந்து மற்றொரு கோளுக்கும் செல்ல இயன்றவையாக இருந்தன என்றும் அந்த விமானங்கள் முன்னோக்கி மட்டுமே இயங்குபவையாக இல்லாமல், இடம், வலமாகவும், மேலும் கீழுமாகவும் இயங்க வல்லவையாக இருந்தன என்றும் அவர் தனது உரையில் பொய் மூட்டைகளை அள்ளி அள்ளி வீசியுள்ளார். அத்தகைய விமானங்களைக் கட்டுவதற்காக அவர்கள் பல்வேறுபட்ட உலோகக் கலவைகளைப் பயன்படுத்தினார்கள் என்றும், அவற்றை ஓட்டிய விமானிகள், கிருமிகளால் பாதிக்கப்படாத தண்ணீர் புகாத அதிர்வைத் தாங்கும் நீர்த்தாவர இழைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆடைகளையே அணிந்திருந்தனர் என்றும் அவர் கூறினார். விமான சம்ஹிதா என்ற பரத்வாஜரின் நூலைக் கற்க வேண்டும் என்றும், அதில் கூறப்பட்டுள்ள உலோக கலவைகளை இந்தியாவிலேயே தயாரித்து அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்த வேண்டும் என்றும் இளைய தலைமுறையினரை போடாஸ் கேட்டுக் கொண்டார். இக் காலராடர் சிஸ்டம், விமானங்கள் பறப்பதை பீப் ஒலி எழுப்பி

அடையாளம் காட்டவதைப் போல் அல்லாமல், ரூபர்கண்ரஹஸ்யா என்றழைக் கப்படும் அக்கால ராடார் சிஸ்டம் விமானங்களின் நிழற்படங்களையே காட்ட வல்லதாக இருந்தது என்றும் அவர் புளுகினார்.


அது போலேவே இந்த உலகில் எவருமே அறிந்திராத நிகழ்ச்சி ஒன்று 1895 இல் நடந்தாக அவர் கூறினார். அமெரிக்க நாட்டின் வடகலோலினா மாகாணத்தின் கிட்டி ஹாக் என்னும் இடத்தில் தங்களது முதல் விமானப் பயணத்தை ரைட் சகோதரர்கள் நடத்திக் காட்டியதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பே ஷிவகர் பாபுஜி டால்பாடேயும் அவரது மனைவியும் மும்பை சவ்பாத்தி கடற்கரையில் ஒரு விமானத்தை ஓட்டிக் காட்டி கண்டவர் அனைவரையும் மயிர் கூச்செறியவைத்தனர் என்று அவர் கூறினார். டால்பாடேயால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வேதகால என்ஜினின் தொழில் நுட்பம் அது போன்ற விமானப் பயணங்கள் மேற்கொள்ள சாதகமானதுதானா என்பது பற்றி சோதனை செய்த ஆராய்ச்சியாளர் களால் அது தரமற்ற குப்பைக் சரக்கு என்று ஒதுக்கப்பட்டது வேறு விஷயம். விமான சாஸ்தரப் பணி பற்றி ஒரு பகுத்தாய்வு என்ற எச்.எஸ். முகுந்தா என்பவரால் எழுதப்பட்ட நூல் 1974 இல் பெங்களூரு இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தால் வெளி யிடப்பட்டது.

மும்பை இந்திய அறிவியல் மாநாட்டில் பேசிய மற்ற பேச்சாளர்களும் இது போன்ற பலப்பல சாதனைகளுக்கு உரிமை கொண்டாடினர். மும்பையில் மருத்துவத் தொழில் செய்து வரும் ஓர் ஆயுர்வேத மருத்துவர் நவீன அறுவை சிகிச்சை முறைகள் தோற்றம் பெறுவதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பண்டைய இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர்கள் அறுவை சிகிச்சைத் துறையில் செய்த சாதனைகளை விவரித்தார். இதற்காக 20 மிகமிக நுண்ணிய கருவிகளையும் 101 முனை மழுங்கிய கருவிகளையும் அவர்கள் கண்டுபிடித்து பயன்படுத்தினர் என்றும், ஒரு மனித முடியைக் கூட பிளக்கும் நுட்பம் மிகுந்த கருவிகள் இருந்தன என்றும் அவர் விட்டார் அண்ட புளுகை.

இந்திய தாவரவியல் பற்றிய போதுமான அறிவை பண்டைய இந்திய கட்டுமானப் பொறியாளர்கள் பெற்றிருந் தனர் என்றும், தங்களது கட்டுமானப் பணிகளில் அந்த அறிவை அவர்கள் எந்த அளவுக்குப் பயன்படுத்தினர் என்றும் மற்றொரு பேச்சாளர் பேசினார்.

இப்படிப் பொய்களையும், புரட்டுக் களையும் கட்டவிழ்த்து விடுவதற்கு பல கோடி ரூபாய் விரயம் செய்தனர்.

**Economic and Political Weekly**




# வரப்பெற்றோம்


## ரமளானை முன்வைத்து இஸ்லாம் குறித்த விரிவான பார்வை

வெளியீடு - **நிலவொளி பதிப்பகம்,**

280/11, காயிதே மில்லத் சாலை, திருவல்லிக்கேணி - 600 005

விலை - ரூ. 150.00

# அரசின் கல்வி உதவிகளைப் பெறுவது எப்படி?



**விடுதலையடைந்த தொடக்க நாள் தொட்டே சிறுபான்மையினரின் கல்வி முன்னேற்றத்திற்கு பல கல்வி உதவிகள் அரசின் சார்பில் வழங்கப்படுகின்றன. இதனை அறியாமலும், தெரியாமலும் உயர் கல்வியைப் பெறாமல் பலர் பின் தங்கி விடுகின்றனர். அவர்களிடையே இது குறித்து ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்திட தொடர்ந்து கேப்டன் அமீர் அலீ ஹஸன் ஷேஹ், முன்னாள் துணைவேந்தர் சாதிக் ஆகியோர் அவர்கள் வெளியிட்டுள்ள "கொட்டிக்கிடக்கின்றன சலுகைகள்" என்ற நூலின் முக்கிய பகுதியை இங்கே தருகின்றோம்.**

## மத்திய அரசின் சிறுபான்மை நலத்துறை அமைச்சகத்தின் கல்வி உதவித் திட்டங்கள்

## PRE-MATRIC SCHOLARSHIP

Pre Matric Scholarship எனப்படும் கல்வி உதவி முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் சிறுபான்மை சமுதாய மக்களுக்கு வழங்கப்படுவதாகும்.

### தகுதிகள்

Pre-Matric Scholarship தகுதி பெற கீழ்காணும் காரணங்கள் பொருத்த வேண்டும்.

1. பெற்றோர் அல்லது பாதுகாவலருக்கு அனைத்து வகையிலும் கிட்டும் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
2. மாணவ / மாணவியர் அரசு பள்ளிக்கூடம் / தனியார் அல்லது

கல்வி நிறுவனம் / மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் அனுமதி பெற்ற பள்ளிக் கூடங்களில் படிக்க வேண்டும்.

3. முக்கிய தேர்வுகளில் 50 சதவீதத்திற்கும் குறையாத மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு Pre-Matric Scholarship தொடர்ந்து வழங்கப்படும்.

4. இந்த திட்டத்தின் கீழ் பயணடையும் மாணவ / மாணவியர் இதே காரணத்திற்காக அரசின் வேறு எந்த திட்டத்தில் வழங்கப்படும் பயனையும் அடைய முடியாது.

## உரிமை யாருக்கு (Entitlement)

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

1. 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பள்ளி சேர்ப்பு கட்டணமாக ஆண்டுக்கு ரூ. 500/- வழங்கப்படும். விடுதிகளில் தங்கி படிப்போருக்கு தினசரி வந்து போய் படிப்போருக்கும் இதே தொகையே வழங்கப்படும்.

2. 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்விக் கட்டணமாக (Tution Fee) (தங்கிப் படித்தாலும் / வந்து போய் படித்தாலும்) மாதம் 300 ரூபாய் வழங்கப்படுகிறது.

3. 1ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பராமரிப்பு செலவுக்காக (Maintenance Allowance) ஒவ்வோர் கல்வி ஆண்டிற்கும் உட்பட்ட 10 மாதங்களுக்கு ஒவ்வோர் மாணவருக்கும் மாதம் தோறும் 100 ரூபாய் வழங்கப்படும்.

4. 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர் மாணவியர்களுக்கு பராமரிப்பு செலவாக மாதந்தோறும் தங்கி பயில்வோருக்கு மாதம் 600 ரூபாயும், தினந்தோறும் வந்து போய் படிப்போருக்கு 100 ரூபாயும் வழங்கப்படும்.

☞ 30 ரூபாய் உதவித் தொகை மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

☞ Pre-Matric கல்வி தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை பள்ளி தலைமை ஆசிரியர் (Principal of the School), மாவட்ட சிறுபான்மை நலத்துறை அலுவலர் அல்லது உங்கள் மாவட்டத்தில் உள்ள சிறுபான்மை நலனுக்காக பொறுப்பு அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

☞ இதற்கான அறிவிப்பு வழக்கமாக மாநில அரசு / யூனியன் பிரதேசங்களால் மார்ச் மாதம் வெளியிடப்படுகிறது.

வருட வருமானம் குறித்த அறிக்கை கீழ்காணும் முறைப்படி பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பமிட்டு விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். பெற்றோர் / பாதுகாவலர் பணி செய்வோராக இருந்தால் வேலை கொடுத்தவர்களிடம் இருந்து வருமான சான்றிதழ் வாங்கி இணைக்க வேண்டும்.

## விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்:

1. சுய சான்றொப்பமிட்ட (Self attested) பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படம்.

2. பாரா 12ல் குறிப்பிட்டபடியான கல்வி தகுதிக்கான சான்றிதழ்களின் சான்றொப்பமிட்ட நகல்கள்.

3. சுயவேலைவாய்ப்புள்ள பெற்றோர் / காவலர் நீதித்துறை சாராத 10 ரூபாய் முத்திரை தாளில் வருமானத்திற்கான வாக்குமூலத்தை தெரிவிக்க வேண்டும். வேலை செய்யும் பெற்றோர் வேலை

உரிமையாளரிடமிருந்து நீதித்துறை சாராத 10 ரூபாய் முத்திரை தாளில் வருமானத்திற்கான வாக்குமூலத்தை தெரிவிக்க வேண்டும்.

4. நிரந்தர முகவரிக்கான ஆதாரத்தை நீதித்துறை சாராத 10 ரூபாய் முத்திரை தாளில் கொடுக்க வேண்டும்.

5. முந்தைய ஆண்டில் கல்வி உதவித் தொகை பெற்றதற்கான ஒப்புகை சீட்டில் பள்ளி / கல்வி நிறுவன தலை வரின் மேல் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

6. நீதித்துறை சாரா முத்திரைத்தாளில் மாணவ / மாணவியர் சிறுபான்மை சமூகத்தவர் என்பதற்கான ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க வேண்டும். அந்த மாணவ / மாணவியர் மத்திய அரசு அறிவித்திருக்கும் சிறுபான்மை இனத்தை சார்ந்தவராக இருக்க வேண்டும்.

1. மேற்சொன்ன தகவல்கள் அனைத்தும் உண்மையென தெரிவிக்கிறேன்.

2. இநத வகைக்கான வேறு எந்தவொரு கல்வி உதவித்தொகையும் நான பெறவில்லை.

3. Pre-Matric Scholarship பெறுவதற்கான அனைத்த நிபந்தனைகளையும் ஒப்புக் கொள்கிறேன்.

4. மாநில அரசு / யூனியன் அரசுகளின் சிறுபான்மை கல்வி உதவித்தொகை வழங்கும் ஆணையம் நான் கொடுத்த தகவல்கள் தவறு என கண்டறிந்து அது உண்மை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட கல்வி உதவித்தொகையை ரத்து செய்யவும், எனக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த கல்வி தொகைகள் அனைத்தையும் நான் திருப்பிக் கொடுக்கவும் அல்லத என்னிடம் திரும்ப பெறவும் சட்டப்படியான நடவடிக்கைக்கும் எந்தவொரு சூழ்நிலையிலும் ஆளாவேன் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

## POST - MATRIC SCHOLARSHIP

Post-matric Scholarship எனப்படும் கல்வி உதவித் தொகை சிறுபான்மையினர் என்று வகைப்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்நத் மாணவர்களுக்கு 11ஆம் வகுப்பு தொடங்கி முனைவர் பட்டம் பெறும் வரை வழங்கப்படுகிறது. தொழில் நுட்பம் (Technical) மற்றும் தொழில் பயிற்சி (Vocational) பயில்வோருக்கும் இந்தக் கல்வி உதவித் தொகை உண்டு.

### தகுதி

Post - Matric Scholarship கல்வி உதவித் தொகை பெற தகுதியுடையவருக்கான தேவைகள்.

1. பெற்றோர் / காப்பாளரின் அனைத்து வகையான ஆண்டு வருமானம் 2 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. அரசு பள்ளி / கல்லூரி / பல்கலைக் கழகம் / அங்கீகாரமுடைய அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் / ITI எனப்படும் தொழிற்பயிற்சி கல்வி மையங்கள் 11 மற்றும் 12 வகுப்புகளில் தொழில் மற்றும் தொழில் நுட்ப பயிற்சி / ITC எனப்படும் தொழிற் பயிற்சி மையங்கள் (தொழில் பயிற்சிக் கான தேசிய குழுவுடன் இணைக்கப் பட்டிருக்க வேண்டும்) ஆகியவற்றில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப் படுகிறது.

3. 50 சதவீதத்திற்கும் குறையாத மதிப் பெண்கள் பெறும் மாணவ / மாணவி

யருக்கும் முந்தைய இறுதி தேர்வுக்கு இணையான தகுதி பெறுவோருக்கும் இந்தக் கல்வி உதவித் தொகை வழங்கப் படுகிறது.

4. இத்திட்டத்தின் கீழ் பயனடையும் மாணவ / மாணவியர் இதே நோக்கத் திற்காக அரசாங்கத்தின் வேறு எந்த திட்டத்தின் கீழும் பயனடைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

## உரிமை யாருக்கு ? (Entitltement)

இத்திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியருக்கு கீழ் வரும் உதவிகள் வழங்கப்படும்.

1. 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியருக்கு சேர்க்கை மற்றும் கல்விக் கட்டணமாக வருடத்திற்கு அதிகபட்சம் 7000ரூபாய் வழங்கப்படுகிறது. வந்து பயில்வோரு க்கும் தங்கி பயில் வோருக்கும் இதே தொகை வழங்கப்படும்.
2. தொழில் மற்றும் தொழில் நுட்ப படிப்புகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான பாடம் பயில்வோருக்கு சேர்க்கை மற்றும் கல்வி கட்டணமாக வருடத்திற்கு அதிகபட்சம் 10,000 ரூபாய் வழங்கப்படும். வந்து பயில் வோருக்கும், தங்கி பயில்வோருக்கும் இதே தொகை வழங்கப்படுகிறது.
3. 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வியில் இதே மட்டத்தில் பயிலும் மாணவ / மாணவியருக்கான பராமரிப்பு செலவுக்கு மாத தொகையாக தங்கி பயில்வோருக்கு 380 ரூபாயும், வந்து பயில்வோருக்கு 320 ரூபாயும் வழங்கப்படுகிறது.
4. இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு மாதந்தோறும் பராமரிப்பு செலவாக தங்கி பயில் வோருக்கு 570 ரூபாயும், வந்து பயில் வோருக்கு 300 ரூபாயும் வழங்கப் படுகிறது.
5. இளமுனைவர் (M.Phil.) மற்றும் முனைவர் (Phd.) பயில்வோருக்கு தங்கி பயில்வோருக்கு 1200 ரூபாயும், வந்து பயில்வோருக்கு 550 ரூபாயும் மாதந்தோறும் வழங்கப்படுகிறது. (பல்கலைக்கழகம் மற்றும் இதர அமைப்புகளிடம் உதவித்தொகை பெறாதவர்களாக இருக்க வேண்டும்.)

☞ மாணவியருக்கு 30 சதவிகிதம் உதவித்தொகை ஒதுக்கப்படுகிறது.

☞ Post - Matric Scholarship விண்ணப்பிக்க சிறுபான்மை நலத்துறை அமைச்சகத் தின் www. minorityaffairs.gov.in என்ற வலைதளத்திற்கு செல்ல வேண்டும். இணைய தள விண்ணப்பத்தை online scholarship mangaement system (OSMS) க்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

☞ மாணவர்கள் பள்ளி முதல்வர் மற்றும் மாவட்ட சிறுபான்மை நல அலுவலர் அல்லது உங்கள் மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கான பொறுப்பிலுள்ள அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

☞ இதற்கான விளம்பரம் வழக்கமாக மாநில அரசு / யூனியன் அரசுகளால் மார்ச் மாதம் வெளியிடுகின்றன.

விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்

1. பத்தி 11ல் நிரப்பப்பட்டிருப்பதைப் போன்ற சான்றொப்பமிடப்பட்ட (At-tested) கல்வித்தகுதி சான்றிதழ்கள் (புதுப்பிக்கும் விண்ணப்பத்துடன்

சான்றிதழ் இணைக்க தேவையில்லை.)

2. நீதித்துறை அல்லாத முத்திரைத் தாளில் வருமானம் குறித்த விபரங்கள் வாக்குமூலமாக கொடுக்க வேண்டும். மேலும் வேலை கொடுப்பவர்களிட மிருந்து வருமானத்திற்கான சான்றிதழ் பெற்று இணைக்க வேண்டும்.

3. நிரந்தர முகவரிக்கான ஆதாரம் (முகவரி மாற்றம் இல்லையென்றால் புதுப்பிக்கும் விண்ணப்பத்திற்கு முகவரிக்கான ஆதாரம் தேவை யில்லை)

4. முந்தைய ஆண்டில் உதவித்தொகை பெற்றதற்கான ஒப்புகை சீட்டில் பள்ளி தலைமை ஆசிரியர் கையொப்பமிட்டு இணைக்க வேண்டும்.

## உறுதி மொழி

1. மேலே சொன்ன தகவல்கள் அனைத் தும் சரியென உறுதி கூறுகிறேன்.

2. வேறு எந்த வகையிலும் இதே காரணத்திற்கான எந்தவொரு கல்வி உதவித்தொகையும் பெறவில்லை.

3. Merit-cum-means அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கான முறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக் கொள்கிறேன்.

4. சிறுபான்மையினர் விவகாரங்களுக் கான அமைச்சகத்தின் ஆணையத்திற்கு நான் கொடுக்கும் தகவல்கள் பொய் யானவைகள் என தெரியவந்து அது உண்மையென நிருபிக்கப்படும் பட்சத் தில் எனக்கு ஒதுக்கப்பட்ட கல்வி உதவித் தொகையை ரத்து செய்யவும் எனக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த கல்வி தொகைகள் அனைத்தையும் நான் திருப்பிக் கொடுக்கவும் அல்லது என்னிடம் திரும்பப் பெறவும் சட்டப் படியான நடவடிக்கைக்கும் எந்த வொரு சூழ்நிலையிலும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன்.

## தகுதி மற்றும் தேவை (Merit - Cum - Means) அடிப்படையில் கல்வி உதவித் தொகை

தகுதி மற்றம் தேவை அடிப்படை யிலான கல்வி உதவித்தொகை சிறுபான்மை சமூகத்தை சார்ந்த மாணவ - மாணவியர்கள் தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்வியில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்புகளுக்காக வழங்கப்படுகிறது. தகுதி பெற்ற கல்வி நிறுவனங்களில் சேர்ந்த படிக்க வேண்டும்.

## தகுதி

தகுதி மற்றும் தேவை அடிப்படை யிலான கல்வி உதவித் தொகை பெற தேவையான தகுதிகள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றது.

1. பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் அனைத்து வழிகளிலும் 2,50,000 /க்குள் இருக்க வேண்டும்.

2. மாணவர்கள் மேல்நிலை பட்டப் படிப்புகளில் 50 சதவீதத்திற்கும் குறையாமல் மதிப்பெண்கள் பெற் றிருக்க வேண்டும்.

## உரிமை யாருக்கு ? (Entitltement)

இத்திட்டத்தின் மாணவ / மாணவியருக்கு கீழ் வரும் உதவிகள் வழங்கப்படும்.

1. பராமரிப்பு செலவுக்கு உதவித்தொகை யாக தங்கி பயில்வோலருக்கு 10,000 ரூபாயும், வந்து பயில்வோருக்கு 5,000 ரூபாயும் ஒரு வருடத்திற்கு (10 மாதத்திற்கு மட்டும்) வழங்கப்படுகிறது.

2. இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மை அமைச்சகம் பட்டியலிட்ட 85 கல்வி நிறுவனங்களுக்கு செலவு செய்த

தொகை முழுவதும் திருப்பிக் கொடுக்கப்படும். மற்ற கல்வி நிறுவனங்களில் படிப்பவர்களுக்கு வருடத்திற்கு 20,000/- ரூபாய் அல்லது அசல் தொகை வழங்கப்படுட்ம. தங்கி பயில்வோருக்கும், வந்து பயில் வோருக்கும் வழங்கப்படும்.

☞ 30 சதவீதம் உதவித்தொகை மாணவி களுக்கு வழங்கப்படும்.

☞ Merit-Cuï - Means கல்வி உதவித் தொகை பெற www.minorityaffairs.gov.in என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்கலாம். Online scholarshi management system (OSMS) என்பதன் மூலம் நேரடியாக இணைய தள விண்ணப்பத்தை தாக்கல் செய்ய லாம். (உதாரணமாக: www.momascholarship.gov.in)

☞ இதற்கான விளம்பரத்தை வழக்கமாக சம்பந்தப்பட்ட மாநில அரசு வெளியிடும்.

## விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்

1. பத்தி 11ல் நிரப்பப்பட்டிருப்பதைப் போன்ற சான்றொப்பமிடப்பட்ட (Attested) கல்வித்தகுதி சான்றிதழ்கள் (புதுபிக்கும் விண்ணப்பத்துடன் சான்றிதழ் இணைக்க தேவையில்லை).
2. நீதித்துறை அல்லாத முத்திரைத் தாளில் வருமானம் குறித்த விபரங்களை வாக்குமூலமாக கொடுக்க வேண்டும். மேலும் வேலை கொடுப்பவரிடமிருந்து வருமானத்திற்கான சான்றிதழ் பெற்று இணைக்க வேண்டும்.
3. நிரந்தர முகவரிக்கான ஆதாரம் (முகவரி மாற்றம் இல்லையென்றால் புதுப்பிக்கும் விண்ணபத்திற்கு முகவரிக்கான ஆதாரம் தேவையில்லை).
4. முந்தைய ஆண்டில் கல்வி உதவித் தொகை பெற்றதற்கான ஒப்புகை சீட்டில் பள்ளி தலைமை ஆசிரியர் கையொப்பம் பெற்று இணைக்க வேண்டும்.

## உறுதி மொழி

1. மேலே சொன்ன தகவல்கள் அனைத்தும் சரியென உறுதி கூறுகிறேன்.
2. வேறு எந்த வகையிலும் இதே காரணத்திற்கான எந்தவொரு கல்வி உதவித்தொகையும் பெறவில்லை.
3. Merit-cum-means அடிப்படையிலான கல்வி உதவித்தொகை பெறுவதற்கான முறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக்கொள்கிறேன்.
4. சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆணையத்திற்கு நான் கொடுக்கும் தகவல்கள் பொய்யானவைகள் என தெரியவந்து அது உண்மையென நிருபிக்கப்படும் பட்சத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட கல்வி உதவித் தொகையை ரத்து செய்யவும் எனக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த கல்வி தொகைகள் அனைத்தையும் நான் திருப்பிக் கொடுக்கவும் அல்லது என்னிடம் திரும்ப பெறவும் சட்டப்படியான நடவடிக்கைக்கும் எந்தவொரு சூழ்நிலையிலும் ஆளாவேன் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

## தகுதி அளவுகோள் (Eligibility Creteria)

1. போட்டி தேர்வுகள் அடிப்படையில் அங்கீகாரமுடைய கல்லூரியில் தொழில் / தொழில் நுட்ப படிப்புகளில் சேர்ந்திருக்க வேண்டும்.
2. அங்கீகாரமுடைய கல்லூரிகளில் போட்டித் தேர்வுகள் அல்லாமல் தொழில் / தொழில் நுட்ப படிப்பு

களில் சேர்ந்திருப்பவர்களுக்கும் கல்வி உதவித் தொகை பெற தகுதி உண்டு. எவ்வாறு இருப்பினும் மாணவ / மாணவியர் 50 க்கும் குறையாமல் மேல்நிலை / பட்டப் படிப்புகளில் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். கண்டிப்பாக தகுதியின் அடிப்படையில் மட்டும் தான் இத்திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3. இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெறுவோர் வேறு வகையான கல்வி உதவித் தொகை / ஊதியம் (Stipend) பெறக் கூடாது.

4. பயனாளி / பெற்றோர் / காப்பாளர் ஆகியோரின் குடும்ப வருமானம் அனைத்து வகையிலும் சேர்த்து ஆண்டுக்கு 2,50,000/- த்தை மிகாமல் இருக்க வேண்டும்.

5. ஒரு குறிப்பிட்ட மாநிலம் / யூனியன் பிரதேசம் சார்ந்த ஒரு மாணவர் அந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தின் ஒதுக்கீட்டின் கீழ் அவர் வாழும் இடம் மற்றும் படிப்பை பொருட்படுத்தாமல் கல்வி உதவித் தொகை பெற தகுதி உண்டு.

## விண்ணப்பிக்கும் முறை

இத்திட்டத்தின் கீழ் Scholarship Management System (OSMS) என்பதன் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. Online மூலம் தான் அனைத்து மாணவ / மாணவியரும் கண்டிப்பாக விண்ணப்பிக்க வேண்டும். சிறுபான்மையினர் அமைச்சகத்தின் கல்வி உதவித்தொகைக்கான இணைய தள முகவரி www.momascholarship.gov.in மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

Online-ல் விண்ணப்பித்த பிறகு விண்ணப்பத்தை பிரிண்ட் எடுத்து அதனை மாணவ / மாணவியர் தொழில் / தொழில் நுட்ப கல்வி பயிலும் கல்வி நிறுவனங்கள் மூலமாக கல்வி நிறுவனங்கள் / கல்லூரிகளுக்கு அல்லது சிறுபான்மையினர் நலனுக்காக மாநில அரசு / யூனியன் பிரதேசம் அமைத்துள்ள துறைகளிடம் தாக்கல் செய்ய வேண்டும். மாணவர்கள் அவர்கள் சார்ந்த மாநில அரசுகளிடம் தான் விண்ணப்பங்களை கொடுக்க வேண்டும். அவர்கள் பயிலும் கல்வி நிறுவனங்கள் இருக்கும் மாநில அரசுகளிடம் கொடுக்க தேவையில்லை.

## மௌலானா ஆசாத் தேசிய கூட்டுவாய்ப்பு MAULANA AZAD NATIONAL FELLOWSHIP

இத்திட்டத்தின் கீழ், இளமுனைவர் (M.Phil) முனைவர் (Ph.D) பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மை சமூகத்தின் மாணவர்களுக்கு கூட்டுவாய்ப்பு முறையில் கல்வி உதவி வழங்கப்படுகிறது.

## தகுதி

மௌலானா ஆசாத் தேசிய கூட்டுவாய்ப்பு திட்டத்தில் கல்வி உதவி பெற தேவையான ஆவணங்கள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

1. பெற்றோர் / காவலர் ஆண்டு வருமானம் 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. UGC (பல்கலைக் கழக மானிய குழு) விளம்பரத்தில் கொடுக்கப்பட்ட கூட்டு வாய்ப்பு விதிகளின்படி மாணவ / மாணவியர் பல்கலைக்கழகம் / கல்வி நிறுவனங்களில் முறையான / முழுநேர, இளமுனைவர் / முனைவர் படிப்புகளக்காக சேரலாம். பல்கலைக்கழகம் / கல்வி நிறுவனங்களின் நிபந்தனைகள் முழுவதையும் ஒப்புக் கொண்டிருக்க வேண்டும்.

3. இத்திட்டத்தின் கீழ் கூட்டுவாய்ப்பு மூலமாக கல்வி உதவி தொகைக்கு தகுதி பெறும் மாணவ / மாணவியர் வேறு எந்த வகையிலும் கல்வி உதவித் தொகை பெற உரிமையில்லை. உதாரணமாக மாநில அரசு அல்லது பல்கலை கழக மானிய குழு UGC போன்ற எந்தவொரு அமைப்பிலும் இந்த கல்விக்காக உதவித் தொகை பெற உரிமை இல்லை.

4. M.Phil. மற்றம் Ph.D. படிப்புகளில் மௌலானா ஆசாத் தேசிய கூட்டுவாய்ப்பு கல்வி உதவித் தொகை பெற NET எனப்படும் தேசிய கல்வி தேர்வு மற்றும் மாநில அளவிலான தகுதித் தேர்வு (SLET) களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும என்ற அவசியம் இல்லை.

5. Junior Reserach Fellowship (JRF) மற்றும் Senior Research Fellowship களுக்கு கல்வி உதவி பெறுவதற்கு இளமுனைவர் (M.Phil.) முனைவர் (Ph.D.)க்கு முந்தைய நிலையில் உள்ள படிப்புகளுக்கு பல் கலைகழக மானிய குழுவின் விதிமுறை கள் பொருந்தும். மேலும் முதுகலை படிப்பில் குறைந்தபட்சம் 50 சதவிகத் திற்கம் குறையாத மதிப்பெண்கள் எடுத்திருக்க வேண்டும்.

## உரிமை யாருக்கு ? (Entitltement)

☞ 30 சதவிகிதம் கூட்டுவாய்ப்பு மாணவி களுக்கு கொடுக்கப்படும்.

☞ இதற்கான விளம்பரத்தை பல்கலைக் கழக மானிய குழு (ருழூஊ) ஜனவரி மாதம் தனது றறற.ரபஉ.யஉ.டை என்ற இணையதளத்தில் வெளியிடுகிறது.

## தயா சவேரா இலவச பயிற்சியும் இணைந்த திட்டமும்

சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு, அறிவையும், திறமையும் பெருக்கிக் கொள்வதற்கும், போட்டித் தேர்வுகள் / தேர்வுமுறைகள் மூலமாக அரசு / தனியார் துறைகளில் வேலைவாய்ப்பு பெறும் தகுதியடையவும் புகழ்மிக்க கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கும் உதவும் வகையில் இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவி தொகை வழங்கப்படுகிறது.

## தகுதி

இத்திட்டத்தின் கீழ் உதவி தொகை பெற கீழ்காணும் அம்சங்கள் அவசியம்

1. குடும்ப வருமானம் அனைத்து வகை களிலும் சேர்ந்து வருடத்திற்கு 3 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. விரும்பிய படிப்புகள் / ஆளெடுப்பு தேர்வுகள் (rectruitment Examinations) ஆகியவற்றிற்கு தகுதி பெற பரிந்துரைக் கப்பட்ட தகுதித் தேர்வு மதிப்பெண் களில் தேவையான சதவீதத்தை பெற வேண்டும்.

3. ஒரு குறிப்பிட்ட மாணவ / மாணவி இத்திட்டத்தின் கீழ் ஒரேயொரு முறை கற்பித்தல் (Coaching) செயல்முறை பயிற்சி (Training) பெற முடியும். மாணவ / மாணவியர் போட்டி தேர்வுகளில் பங்கேற்க எண்ணிக்கை தடை இல்லை.

4. Coaching / Training 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

## உரிமை யாருக்கு ? (Entitltement)

இத்திட்டத்தின் கீழ் மாணவ / மாணவியருக்கு கீழ்காணப்படும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

1. Group - A Services களுக்கு கற்பித்தல் கட்டணம் (Coaching fee) கல்வி நிறுவனம் உறுதி செய்யும் அதிக பட்சமான 2000 ரூபாயுடன் வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 200

ரூபாயும், உள்ளூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 1500 ரூபாயும் மாதந்தோறும் ஊதியமாக வழங்கப்படும்.

2. Group -B services களுக்கு கல்வி நிறுவனங்களால் இறுதி செய்யப்படும் கற்பித்தல் கட்டணம் அதிகபட்சமான 2000 ரூபாயுடன் வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 3000 ரூபாயும், உள்ளூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 1500 ரூபாயும் மாதந்தோறும் ஊதியமாக வழங்கப்படும்.

3. Group - C Services களுக்கு கல்வி நிறுவனங்களால் இறுதி செய்யப்படும் கற்பித்தல் கட்டணம் அதிகபட்சமான 1500 ரூபாயுடன், வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 3000 ரூபாயும், உள்ளூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 1500 ரூபாயும் மாதந்தோறும் ஊதியமாக வழங்கப்படும்.

4. தொழில் / தொழில் நுட்ப கல்விகளுக்கான நுழைவு தேர்வுக்கு கற்பித்தல் கட்டணம் கல்வி நிறுவனங்கள் இறுதி செய்யும் அதிகபட்சமான 2000 ரூபாயுடன், வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 3000 ரூபாயும் உள்ளூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 1500 ரூபாயும் மாதந்தோறும் ஊதியமாக வழங்கப்படும்.

5. தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் பெற பயிற்சிக்கான கற்பித்தல் கட்டணமாக கல்வி நிறுவனங்கள் முடிவு செய்யும் அதிகபட்சமாக 2000 ரூபாயுடன் வெளியூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 3000 ரூபாயும், உள்ளூர் மாணவ / மாணவியருக்கு மாதம் 1500 ரூபாயும் மாதந்தோறும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

2013-2014ல் இருந்து சிறுபான்மை சமூக மாணவ / மாணவியர் 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அறிவியல் படிப்பில் (இயற்பியல், வேதியல், உயிரியல் மற்றும் / அல்லது கணிதம்) ஆர்வம் கொடுத்து படிப்பதற்காக இத்திட்டத்துடன் புதிய தொரு பகுதி இணைக்கப்பட்டிருக்கிறது.

1. இத்திட்டத்தின் புதிய தொகுதி தமிழ்நாடு, பீகார், உத்திரபிரதேசம், அஸ்ஸாம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், கர்நாடகா, பஞ்சாப், டெல்லி என 9 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் அமல் படுத்தப்பட்டிருக்கிறது.

2. CBSE, ICSC கல்விமுறைகள் உள்ளடக்கி அதிகபடியான மாநிலங்கள் / யூனியன் பகுதிகள் மற்றும் இந்திய அரசு / மாநில அரசு / யூனியன் பிரதேசங்களின் அங்கீகாரம் பெற்ற பிற கல்வி வாரியங்கள் பின் வரும் ஆண்டுகளில் இத்திட்ட வழிகாட்டுதல்கள் படி இணைத்துக் கொள்ளப்படும். மேலும் நிதிகள் பெறவும் இயலும்.

3. தங்கியிருந்து கற்றல் / பயிற்சி எடுத்தல் திட்டத்திற்காக பல்கலைக்கழகம் / கல்வி தலைமை நிறுவனம் மாணவ / மாணவியர்களுக்கு தனித்தனியாக விடுதி வசதிகளுடன் அதிக எண்ணிக்கையில் அறிவியல் துறை ஆசிரியர்களையும் கொண்டிருக்கும் கல்வி நிறுவனங்கள் / பள்ளிகள் / கல்லூரிகளிலிருந்து தேர்வு குழுவானது கல்வி நிறுவனங்கள் / பள்ளிகள் / கல்லூரிகளை தேர்வு செய்யும்.

4. மாணவ - மாணவியர் தேர்வு, தகுதியின் அடிப்படையில் அமையும். தேர்வாகும் மாணவ / மாணவியர் இத்திட்டத்தின் கீழ் வரும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ / மாணவியருக்கு இந்த தொகுதியின் கீழ்

வருடத்திற்கு 1,00,000/- ரூபாய் நிதி உதவியாக வழங்கப்படும்.

☞ இத்திட்டத்தின் தகவல்களை சிறு பான்மை நலத்துறை அமைச்சகம் விளம் பரப்படுத்தும். ஒவ்வோர் ஆண்டும் கற்பித்தல் / பயிற்சியளித்தல் (Cocahinhg/ Training) மையங்களிடமிருந்து பரிந்துரை கள் வரவேற்கப்படும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க கற்பித்தல் / பயிற்சி யளித்தல் மையங்கள் சிறுபான்மை அமைச்ச இணையதள முகவரியான mionrityaffairs.gov.in க்கு போக வேண்டும்.

☞ சிறுபான்மை அமைச்சகம் பட்டி யலிட்டுள்ள பயிற்சி மையங்களின் தகவல்களை பெறவும் மாணவ / மாணவி யர்கள் சிறுபான்மை அமைச்சக இணையதள முகவரியான minority affiars.gov.in-க்கு போக வேண்டும். அம்மையங்களில் மாணவ/ மாணவியர் கள் சேர்ந்து கொள்ளலாம்.

## நயி உதான் - முதல்கட்ட தேர்வுகளை முடிப்பதற்கான திட்டம்.

UPSC, SSC மற்றும் SPSC நடத்தும் தேர்வு முறைகளில் முதல்கட்ட தேர்வுகளை சிறுபான்மை சமூக மாணவ / மாணவியர் கள் முடிப்பதற்காக வழங்கப்படும் நிதியுதவி திட்டம் தான் நயி உதான்.

☞ சிறுபான்மை சமூகத்தை சார்ந்த மாணவ / மாணவியர்கள் UNION PUBLIC SERVICE COMMISSION (UPSC), STAFF SELECTION COMMISSION (SSC), k‰W« STATE PUBLIC SERVICE COMMISSIONS (SPSCs) ஆகியன நடத்தும் முதல் கட் தேர்வுகளில் (Prelims Examination) வெற்றி பெறுவதற்காக இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப் படுகிறது.

☞ இத்திட்டத்தின் கீழ் ஒருமுறை அளிக்கப் படும் நிதியுதவு கெஜட்டட் பதவிக்கு 50,000 ரூபாயும், கெஜட்டட் அல்லாத பதவிக்கு 25,000 ரூபாயும் வழங்கப் படுகிறது.

☞ முதற்கட்ட தேர்வின் முடிவுகள் வெளி யான பிறகு விண்ணப்பத்தை சிறு பான்மை அமைச்சகத்திடம் நேரடியாக தாக்கல் செய்யலாம்.

☞ மேற்கொண்டு தகவல்களுக்கும் முறைகள் மற்றும் நிபந்தனைகளை அறிந்து கொள் ளவும் சிறுபான்மை அமைச்சகத்தின் இணையதளமான mionrityaffairs.gov.in-க்கு போக வேண்டும்.

## பதோ பிரதேஷ் - வெளிநாடுகளில் பயிலும் சிறுபான்மை சமூக மாணவ / மாணவியருக்கு கல்வி கடன்களில் வட்டிக்கு மானியம் வழங்கும் திட்டம்.

**1. பின்னணி** (Background)

சிறுபான்மையினர் நலனுக்கான பாரத பிரதமரின் 15 அம்ச திட்டம் 2006ம் ஆண்டு ஜூன் மாதம் அறிவிப்புச் செய்யப்பட்து. இத்திட்டம் சிறுபான்மை சமூகத்தில் இருந்து வரும் தகுதி வாய்ந்த மாணவ / மாணவியருக்கு கல்வி உதவிகள் வழங்குவதற்கான திட்டங்களை வழங்கு கிறது. இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்படும்.

வெளிநாடுகளில் படிக்கச் செல்லும் சிறுபான்மை சமூக மாணவ / மாணவியரின் கல்வி முன்னேற்றத்தை மேம்படுத்து வதற்காக கல்வி கடன்கள் கொடுக்கப் படுகின்றன. அந்த கடன்களுக்கான வட்டிக்கு மானியம் கொடுப்பதுதான் வட்டிக்கு மானியம் (Interest Subsidy) திட்ட மாகும்.

### 2. நோக்கம் (Objective)

சிறுபான்மை சமூகத்தில் பொருளா தாரத்தில் பின்தங்கிய தகுதி வாய்ந்த

மாணவ / மாணவியர்கள் வெளிநாடுகளுக்கு சென்று உயர்கல்வி பெறுவதற்கு வழங்கப் படும் கடனுக்கு ஆகும் வட்டிக்கு மானியம் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கம்.

## 3. எல்லை (Scope)

சிறுபான்மையினருக்கான தேசிய ஆணைய சட்டம் 1992ல் பிரிவு 2 (c)ன் படி மத்திய அரசு வரையறுத்த சிறுபான்மை சமூகங்களை சார்ந்த மாணவ / மாணவியருக்கு வட்டிக்கு மானியம் அளிக்கும் மத்திய அரசு திட்டம் (Central Sector Scheme)

வெளிநாடுகளில் இருக்கும் முதுகலை மற்றும் ஆராய்ச்சி அளவிலான அங்கீகாரம் பெற்ற கல்விகளில் வெளிநாடுகளில் சென்று படிப்பதற்கு வழங்கப்படும் கல்வி கடன்களின் மீதுள்ள வட்டியை காலம் தாழ்த்தி அடைப்பதற்காக வட்டிக்கு மானியம் என்ற திட்டத்தின் கீழ் வட்டி மானியம் வழங்கப் படுகிறது.

4. வட்டிக்கு மானியம் பெற நிபந்தனைகள் (Conditions for Interest Subsidy)

1. வெளிநாடுகளில் உயர் கல்வி படிப் போர்க்கு மட்டும் இத்திட்டம் பொருந் தும். இந்திய வங்கிகள் கழகத்தின் (Indian Banks Association) நடைமுறையில் இருக் கும் கல்விக்கடன் திட்டத்துடன் வட்டி மானியம் இணைக்கப்படும்.

   முதுகலை (Masters) இளமுனைவர் (M.Phil), முனைவர் (Ph.D.) அளவிலான படிப்பு களில் சேர்ந்துள்ள மாணவ / மாணவியருக்கு மட்டும் என இத்திட்டம் சுருக்கப்பட்டிருக் கிறது.

2. இத்திட்டத்தின் கீழ் வட்டி மானியம் தகுதியுடைய மாணவ / மாணவியருக்கு ஒரே ஒருமுறை முதுகலை அல்லது முனைவர் படிப்புக்கு மட்டும் வழங்கப்படும். இடை யிலேயே படிப்பை நிறுத்திய மாணவ / மாணவியருக்கும், ஒழுக்கம் அல்லது கல்வி அடிப்படை யில் கல்வி நிறுவனங்களி லிருந்து வெளியேறிய மாணவ / மாணவி யருக்கும் எந்த காரணத்தைக் கொண்டும் வட்டி மானியம் வழங்கப் படாது.

3. வங்கி கடனை திருப்பிச் செலுத்தாத காலத்தில், வட்டியை முன் செலுத் தும் வங்கிகள் வழங்கும் வட்டி விகிதத்தில் உள்ள, ஒரு சதவீத வட்டி குறைப்பின் பலன் மாணவ / மாணவி யருக்கு வழங்கப்படும்.

4. இத்திட்டத்தின் ஏதேனும் ஒரு நிபந்தனையை மாணவ / மாணவியர் மீறினால் மானியம் உடனடியாக நிறுத்தப்படும்.

5. தவறான தகவல்கள் / சான்றிதழ் கள் கொடுத்து மாணவ / மாணவியர்கள் மானியம் பெற்றிருப்பதை கண்டு பிடித்தால் உடனடியாக மானியம் திரும்பப் பெறப்படும் / ரத்து செய்யப்படும். ஏற்கெனவே கொடுக் கப்பட்ட மானியம் கூட்டு வட்டி யுடன் வசூலிக்கப்படும். மேலும் சட்டப்படி குற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

6. கடன் நிலுவையில் உள்ள காலத்தில் மாணவ / மாணவியர் இந்திய குடி யுரிமையை ரத்து செய்து கொண் டால் இத்திட்டத்தின் கீழ் பெற்ற கடனுக்கு வட்டி மானியம் வழங்கப் படாது.

7. உரிமையளிக்கப்பட் வங்கியானது சிறுபான்மை அமைச்சகத்திட மிருந்து பெறப்பட்ட நிதி சம்பந்த மான ஆவணங்கள் மற்றும் தனியான கணக்கை பராமரித்து வரும். மே லும், இந்த கணக்கும் ஆவணங்களும்

அமைச்சகத்தின் அதிகாரிகளால் ஆய்வு செய்து தணிக்கை செய்யப்படும். அல்லது அமைச்சகம் பரிந்துரைக்கும் ஏதேனும் ஒரு நிறுவனம் / மத்திய கணக்கு தணிக்கைத்துறை ஆய்வு செய்து தணிக்கை செய்யும்.

8. பொது நிதிச் சட்டங்கள் (GFR) விதிகளின் படி உரிமம் அளிக்கப்பட் வங்கி முந்தைய ஆண்டு நிதிகளை விடுவித்ததற் கான சான்றிதழ்களை அளித்த பிறகு இரண்டாம் ஆண்டுக் கான வட்டி மானியத் தொகை அவ்வங்கிக்கு வழங்கப்படும்.

9. உரிமம் பெற்ற வங்கி தனது நிதி மற்றும் வங்கி செயல்பாடுகளின் அனைத்து உண்மையான தகவல்களையும் அதன் இணையதளத்தில் வெளியிட வேண் டும். மேலும், சிறுபான்மை அமைச்ச கமும் அவ்வங்கியும் கை யெழுத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்ததத்தின் படி இத்திட்டத் தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

10. சிறுபான்மை சமூகத்தை சார்ந்த மாணவ / மாணவியர், எஸ்.சி. / எஸ்.சி. / ஓ.பி.சி. வகையை சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இதே காரணத் திற்காக வேறு எந்த வகையிலும் வட்டி மானியம் பெறவில்லை என்பதை உரிமம் பெற்ற வங்கி உறுதி செய்து கொள்ளும்.

11. சிறுபான்மை அமைச்சகத்துடன் கலந்து ஆலோசித்து தகுதியுள்ள மாணவ / மாணவியருக்கு வட்டி மானியத்தை உரிமம் பெற்ற வங்கி வழங்குவது தொடர்பான செயல் முறைகளை முன்வைக்கும்.

12. சிறுபான்மை அமைச்சகம் அல்லது அமைச்சகம் உரிமம் அளிக்கும் வேறொரு நிறுவனம் இத்திட்டத் தினை தொடர்ச்சி யாக மதிப்பீடு செய்யும். மதிப்பீட்ட ஆய்வுக்கான செலவை அமைச்சகம் ஏற்கும்.

13. சிறுபான்மை நலத்துறை பிரதேசத்தின் தகுதியுள்ள ஆணையத் திடமிருந்து வருமான சான்றிதழ் பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

## பரிந்துரைக்கும் குழு

1. இத்திட்டத்தில் பொறுப்பு வகிக்கும் இணைச் செயலர், பரிந்துரைக்கும் குழுவுக்கு தலைமை வகிப்பார். அதில் நிதிப்பிரிவை (Finance Division) சார்ந்த வர்கள் இடம் பெறுவார்கள். மற்றும் தலைமை வங்கி (Nodal Bank) -ன் பிரதிநிதி இடம் பெறுவார். இதன் இயக்குநர் / துணைச் செயலர் ஒருங் கிணைப்பாளராக இருந்து விண்ணப்ப ங்களை ஆராய்ந்து வட்டி மானியம் பெற பரிந்துரைப்பார். 4 மாதங்களுக்கு ஒரு முறை விண்ணப்பங்களை சரி பார்த்து பரிந்துரைக்கப் படும்.
2. சிறுபான்மை சமூகங்களுக்கு முடிந்த அளவு அவர்களது விழுக்காட்டிற்கு ஏற்ப வட்டி மானியம் வழங்கப்படும்.
3. மாணவியருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

## வட்டி மானியத்தின் விகிதம்

1. இத்திட்டத்தின் கீழ் கல்விக் கடன்கள் பெற்றதற்காக மாணவ / மாணவியர் செலுத்த வேண்டிய வட்டித் தொகையை படிக்கும் காலத்திற்கு (படிக்கும் காலத்துடன் கூடுதலாக ஒருவருடம் அல்லது வேலை கிடைத்த பின்னர் 6 மாதம் / இவை இரண்டில் எது முந்துகிறதோ அது) இந்திய அரசு பொறுப்பு ஏற்கும். இந்திய வங்கிகள் கழகத்தின் கல்விக் கடன் திட்டத்தில் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

2. படிக்கும் காலம் முடிந்த பிறகு மீதமுள்ள கடனுக்கான வட்டியை சம்பந்தப் பட்ட மாணவ / மாணவியர் கட்ட வேண்டும் தற்போதுள்ள கல்விக் கடன் திட்டத்தின்படி நேரத்திற்கு நேரம் அமல்படுத்தப்படும்.

3. படிப்பு காலம் முடிந்த பிறகு மாணவ / மாணவியர் தான் அசலான தவணை களையும் வட்டியையும் செலுத்த வேண்டும்.

**செயல்படுத்தும் நிறுவனங்கள்**

உரிமம் பெற்ற வங்கியானது சிறு பான்மை நலத்துறை அமைச்சகத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத் தின் படி இத்திட்டத்தினை செயல்படுத்தும்.

**நிர்வாகச் செலவுகள்**

1. இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் ஆண்டு நிதியிலிருந்து 3 சதவீதத்திற்கும் மிகாத தொகை நிர்வாகம் மற்றும் அதை சார்ந்த செலவுகளுக்காக ஒதுக்கப்படும். கணிணி, கணிணி பாகங் கள் உள்ளிட்ட அலுவலக உபகரணங் கள், விளம்பரங்கள் மற்றும் இதர வகைகளுக்கு அமைச்சகம் செலவிடும்.

2. சிறுபான்மை நலத்துதுறை அமைச்சகம் அனுமதி அளிக்கும் தகுதி வாயந்த நிறுவனங்கள் / அமைப்புகள் மூலம் இத்திட்டத்தினை கண் காணிக்கவும் கணக்கு பார்க்கவும் இந்த 3 சதவீத நிதியிலிருந்து தான் செல விடப்படும்.

**கண்காணித்தல் மற்றும் வெளிப்படை**

1. இத்திட்டம் எவ்வாறு செயல்படுத்தப் படுகிறது என்பதை சிறுபாான்மை நலத்துறை அமைச்சகம் கண்காணி க்கும்.

2. இதற்காக இத்திட்டத்தினை கண் காணிக்கும் ஒரு இணைய தளத்தை உரிமம் பெற்ற வங்கி ஏற்படுத்தும்.

3. தகுதிபெற்ற தலைமை வங்கி (Nodal Bank) நிதி மற்றும் செயல்முறை அறிக்கைகளை காலாண்டு முறையில் அமைச்சகத்திற்கு தாக்கல் செய்ய வேண்டும்.

4. உரிமம் பெற்ற தலைமை வங்கி மாணவர்கள் பெறும் கல்வி உதவித் தொகை அவர்கள் பயிலும் கல்வி நிறு வனம், கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடம், வகுப்பு, பாலீனம், புதியது அல்லது புதுப்பித்தல் நிரந்தர முகவரி / பெற்றோர் முகவரி ஆகிய தகவல் களையும் வருடந்தோறும் பராமரித்து வரும்.

5. உரிமம் பெற்ற தலைமை வங்கி நிதி மற்றும் செயல்முறையின் சரியான தகவல் களை அதன் அதிகாரபூர்வ வலைதளத்தில் வெளியிடும்.

**சிறிய திருத்தங்கள் / மாற்றங்கள்**

நிதி சம்பந்தமில்லாமல் சிறிய திருத்தங்கள் / மாற்றங்கள் தகுதியுள்ள ஆணையத்தால் கொண்டு வரப்படலாம். அதற்காக SFC / EFC /CM அமைச்சகத்திட மிருந்து எந்த உதவியும் பெறப்படாது.

**மதிப்பீடு**

சிறுபான்மை அமைச்சகம் உரிமம் வழங்கும் தகுதியான நிறுவனங்கள் / அமைப்புகள், ஒதுக்கப்பட்ட தொகை / கிடைத்த பலன்களை ஆய்வு செய்து அதனை கொண்டு இத்திட்டத்தின் நிதி மற்றும் நிறுவனத்தின் செயல்பாடுகளை குறித்த காலங்களில் மதிப்பீடு செய்யும்.

**தகுதியுடைய மாணவிகளுக்கு மௌலானா ஆசாத் கல்வி உதவித்திட்டம்**

இத்திட்டம் சிறுபான்மை விவகார அமைச்சகத்தின் துணை அமைப்பான மௌலானா ஆசாத் கல்வி நிறுவனத்தின் (Maulana Azad Educational Foundation - MAEF)

மூலம் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் அரசு அறிவிப்பாணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிறுபான்மை சமூகங்களை சார்ந்த தகுதியுடைய மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

10ம் வகுப்பு தேறிய மாணவ - மாணவிகளுக்கு 11 மற்றும் 12ம் வகுப்புகளில் சேர்ந்து படிக்க கல்வி உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை MAEF நேரடியாக வரவேற்கிறது.

## தகுதி

இத்திட்டத்தின் கீழ் உதவி பெற கீழ்க்கண்ட அம்சங்கள் தகுதிகளாகும்.

1. 10ம் வகுப்பு தேர்வில் 55 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.
2. பெற்றோர் / காவலர் வருமானம் ரூ. 1,00,000/-த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. வேறு வழிகளில் கல்வி உதவித் தொகை பெறுபவர்கள் MAEF-ல் கல்வி உதவித் தொகை பெற தகுதி பெற மாட்டார்கள்.

## உரிமை யாருக்கு? (Entittlement)

☞ வருடத்திற்கு ரூ. 6,000 ஆக இரண்டு வருடத்திற்கு (11 மற்றும் 12ம் வகுப்பிற்கு) ரூ. 12,000 கொடுக்கப்படுகிறது.

☞ மாணவிகள் விண்ணப்பத்தை இந் நிறுவனத்திற்க தபால் மூலமாகவோ அல்லது வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நேரடியாகவோ கொடுக்கலாம்.

☞ - எந்த நபருக்கும் எந்த சேவைக்கும் கட்டணமோ / சேவை கட்டணமோ கொடுக்கத் தேவையில்லை.

☞ - தேர்வு செய்யப்படும் மாணவிகளின் முகவரிக்கு கல்வி உதவித்தொகைக்கான இசைவுக் கடிதம் / காசோலை (Santion Letter / Cheque) பதிவு தபால் மூலம் நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

☞ - தகவல்கள் பெறவும் விண்ணப்பத்தை பதிவிறக்கம் (Downlaod) செய்து கொள்ளவும் மாணவிகள் ஆஹநுகு-ன் www.maef.nic.in என்ற வலைதளத்திற்கு செல்லவும். மேலும் ஆயுநுகு-ன் செயலாளரை 011-23583788 / 23583789 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளவும்.

சிறுபான்மை சமூகத்தில் தகுதியுடைய மாணவிகளக்கு மௌலானா ஆசாத் தேசிய கல்வி உதவித் திட்டம்.

மௌலானா அபுல்கலாம் ஆசாத்தின் நூற்றாண்டு நிகழ்வின் போது மௌலானா ஆசாத் கல்வி கழகம் உருவாக்கப்பட்டது. 1989 ஜூலை 6ம் நாளில், 1860 ஆம் ஆண்டு கழகங்கள் பதிவு சட்டத்தின் (Societies Registration Act 1860) கீழ இக்கழகம் பதிவு செய்யப்பட்டது. இந்தக் கழகம் தன்னார்வம் கொண்டது. அரசியல் சார்பற்றது. ஆதாய நோக்கமற்றது. சமூக சேவை அமைப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுபான்மை சமூகத்தில் கல்வியில் பின்தங்கிய பிரிவினரின் கல்வி திறனை வளர்பப்பதற்காக இந்த கழகம் உருவாக்கப்பட்டது.

இந்திய அரசின் சிறுபான்மை விவகார அமைச்சகம் இக்கழகத்திற்கு நிதி வழங்குகிறது. கல்வி திட்டங்களை வகுப்பதும், செயல்படுத்துவதும், பொதுவாக பின்தங்கிய பிரிவினருக்கம் குறிப்பாக கல்வியில் பின்தங்கியிருக்கும் சிறுபான்மையினருக்கும் நலன் பயக்கும் வகையில் திட்டமிடுவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

## திட்டத்தின் தலைப்பு

சிறுபான்மை சமூகங்களை சார்ந்த மாணவிகளக்கான மௌலானா ஆசாத் தேசிய கல்வி உதவித் திட்டம்.

### திட்டத்தின் நோக்கம்

நிதியுதவி இல்லாமல் கல்வியை தொடர முடியாத சிறுபான்மை சமூகத்தை சார்ந்த தகுதியுடைய மாணவிகளை ஒப்புக் கொள்வதும், மேம்படுத்துவதும் உதவிடு வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

### செயல் திட்ட நோக்கம்

பள்ளி / கல்லூரிகளுக்கு கல்விக் கட்டணங்களுக்கு செலவு, பாட புத்தகங்கள் வாங்குவது எழுது பொருட்கள் / உபகரணங் கள் வாங்குவது, உறைவிட கட்டணம் ஆகிய செலவுகளுக்கு நிதியுதவி வழங்கப் படுவது செயல் திட்ட நோக்கம்.

### அவசியமானவை

1. www.maef.nic.in என்ற வலைதளத்தி லிருந்து விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பத் தின் நகலை தாராளமாக பயன்படுத் திக் கொள்ளலாம்.
2. இந்நிறுவனத்திற்கு மாணவிகள் விண்ணப்பத்தை தபால் மூலம் நேரடியாக அனுப்பலாம் அல்லது அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அலுவலகத்திற்கு நேரடியாக வந்தும் கொடுக்கலாம்.
3. அலுவலகத்தில் இருப்பவர்களுக்கு எந்த கட்டணமும் / சேவை கட்டண மும் கொடுக்கத் தேவையில்லை.
4. நிதியுதவிக்கு தேர்வு செய்யப்படும் மாணவிகள் வீட்டு முகவரிக்கு பதிவு தபால் மூலம் இசைவுத் கடிதம் / காசோலை நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.
5. பிற தகவல்கள் விசாரணைக்கு MAEF-ன் செயலாளரை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

### தகுதி கோட்பாடு / யார் விண்ணப்பிக்கலாம்?

1. அரசு அங்கீகாரம் பெற்ற சிறுபான்மை யினர் சமூகத்தைச் சார்ந்த (முஸ்லிம், கிறித்தவர், புத்த மதத்தவர், சீக்கியர் கள், பார்சிகள், ஜெயனர்கள்) மாணவி கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
2. அரசு அங்கீகாரம் பெற்ற மத்திய - மாநில (Central/State Board) வாரிய பள்ளிகள் நடத்தும் 10ம் வகுப்பு தேர்வில் 55 விழுக்காட்டிற்கு குறையாத மதிப்பெண்கள் பெற வேண்டும். பின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற 33 Boards / Councils ஐ பார்க்கவும் 55 விழுக்காடு தான் விண்ணப்பித்தற்கான தகுதி யுடைய விண்ணப்பங்களிலிருந்து அதிகபட்ச மதிப்பெண்கள் பெற்ற நபருக்கு அம்மாநிலத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ள கல்வி நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படும் என்று உறுதி மொழி எதுவும் கிடையாது.
3. நடப்பு நிதியாண்டில் மாணவியின் குடும்ப வருமானம் அனைத்து வகை யிலுமாக சேர்த்து ரூ.1,00,000த்திற்கும் குறைவாக இருக்க வேண்டும்.

☞ மாத ஊதியம் பெறும் வகையினராக இருந்தால் பெற்றோர் / காப்பாளரின் வேலை, சம்பள அளவு (Pay Scale) அடிப்படை சம்பளம் (Basic Pay) வீடு வாடகைக்கு கிடைக்கும் வருமானம் உள்ளிட்டு இதர வகைகளில் கிடைக்கும் வருமானங்கள் அனைத்தையும் மாணவி யர் தெளிவாக குறிப்பிட வேண்டும். வெறுமனே Service என்று குறிப்பிடுவது ஏற்கப்படாது. பெற்றோரின் ஊதிய சான்றிதழ் (Salary Certificate) ஓய்வு பெற்றவராக இருந்தால் ஓய்வூதிய சான்றிதழ் (Pensioner Certificate)

ஆகியவற்றை கட்டுப்பாட்டு ஆணையத்தால் (Controlling Authority) உண்மையென சான்றளிக்கப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

☞ பெற்றோர் விவசாயம் / தோட்டக்கலை தொழில் செய்பவர்களாக இருந்தால் மொத்த நிலம் குறித்த தகவல்களையும் நிலம் பாசன வசதி உடையதா / அற்றதா என்ற தகவலையும் இதர நிலங்கள் சார்ந்த தகவலையும் குடும்பத்தின் மொத்த வருமானத்தையும் குறிப்பிட வேண்டும். இந்த தகவல்களை பெற்றோர் / காவலர் சமர்ப்பித்தும் வாக்குமூலத்திலும் (ஹககனையஎவை) வருவாய் துறையிடம் பெறும் சான்றிதழிலும் குறிப்பிட வேண்டும்.

☞ பெற்றோர் வியாபாரம் செய்பவர்களாக இருந்தால் தொழிலின் பெயர் மற்றும் தொழில் வகையையும் வருடாந்திர மொத்த வருமானத்தையும் குடும்பத்தின் மொத்த வருமானத்தையும் மாணவியர் வகைப்படுத்தி கூற வேண்டும். இதே தகவல்களை பெற்றோர் / காப்பாளர்களிடமிருந்து பெறப்படும் வாக்குமூலத்திலும் குறிப்பிட வேண்டும்.

☞ இதர அனைத்து வழிகளிலும் கிடைக்கும் மொத்த வருமானத்தையும் குறிப்பாக தாயார் வேலைக்கு போகக் கூடியவராக இருந்தால் அதையும் தெரியப்படுத்த வேண்டும்.

☞ விண்ணப்பத்தில் மாணவியர்கள் குறிப்பிடும் அனைத்து தகவல்களும் வருமான சான்றிதழ்களும் MAEF - ஆல் மேலும் சரிபார்க்கப்படும். அதில் வெளிப்படையான முரண்பாடோ / உண்மைக்கு மாறானதோ கண்டறியப்பட்டால் வழங்கிய / வழங்கவுள்ள (Granted Released) உதவித் தொகையை MAEF ரத்து செய்யும் / திரும்பப் பெறும். மேலும் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கும்.

☞ பெற்றோர் / காப்பாளரிடமிருந்து வருமான சான்றிதழ் / வாக்கு மூலம் கண்டிப்பாக பெற வேண்டும். மேலும் அவர்கள் குடியிருக்கும் ஊரிலிருந்து பெற்றிருக்க வேண்டும்.

☞ வீடு இருக்கும் பகுதியில் அல்லாமல் மாணவியர் படித்து வரும் பகுதியிலிருந்து பெறப்படும் வருமான சான்றிதழ் / வாக்குமூலம் ஏற்றுக் கொள்ளப்படாது. (நகலாக இருந்தால் பயிலும் கல்வி நிறுவனத்தின் தலைமை ஆசிரியர் (Head of Istitute) அல்லது Gazzetted Officer சான்றுயொப்பம் இட்டிருக்க வேண்டும்.

4. 11ம் வகுப்பில் அனுமதி பெற்றிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மாணவியர் படிக்கும் பள்ளி / கல்லூரி வழங்கும் மாணவர் சேர்க்கைக்கான அனுமதி சீட்டு மற்றும் பள்ளி / கல்லூரி முதல்வர் வழங்கிய சரிபார்க்கம் படிவம் (Verification Form) விண்ணப்பத்துடன் இணைக்கப் பட வேண்டும்.

6. இந்த கல்வி உதவித்தொகை ஒரு முறை வழங்கப்படுவதான் நிரந்தரமாக பயனடைய முடியாது. கல்வி உதவித் தொகைக்கு ஒரு முறை தேர்வு செய்யப்படும் மாணவியர் மீண்டும் அதே வாய்ப்பை பெற முடியாது.

7. வேறு இடத்தில் கல்வி உதவித் தொகை பெறுபவர் MAEF- கல்வி உதவித் தொகை பெற தகுதி பெற மாட்டார்.

8. விண்ணப்பத்துடன் பற்று சீட்டை MAEF- அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் செப்டம்பர் 30. இது உறுதியானது. செப்டம்பர் 30க்கு பிறகு பெறப்படும் விண்ணப்ப

ங்கள் எந்த சூழ்நிலையிலும் தகுதி பெறாது. தபால் துறையால் ஏற்படும் தாமதத்திற்கும் MAEF- பொறுப் பேற்காது.

9. கல்வி உதவித் தொகை ரூ.12,000 தவணைக்கு ரூ. 6,000 ஆக இரண்டு தவணைகளில் வழங்கப்படும். உதவித் தொகை பெற அனுமதி கொடுக்கப் பட்ட பிறகு முதல் தவணை தொகை யும், 11ம் வகுப்பு தேர்வுக்கான சான்றை தாக்கல் செய்யும் போது இரண் டாவது தவணை தொகை வழங்கப் படும். 12ம் வகுப்பிற்கான ஆலோசனை கள் (admonition) MAEF -ன் அலுவலகத் தில் வழங்கப்படும்.

10. 10ம் வகுப்பிற்கான தேர்வு முடிவுகள் வெளியாகும் அதே வருடம் 11ம் வகுப்பில் அனுமதி பெறுபவருக்கே கல்வி உதவித் தொகை வழங்கப்படும். 10ம் வகுப்பு மறு ஆண்டில் 11ம் வகுப்பில் சேருபவரின் விண்ணப்பம் தகுதி பெறாது.

## LIST OF BOARD / COUNCILS

1. Andhra Pradesh Board of Secondary Education, Andhra Pradesh
2. Arunachal Pradesh Board of Secondary Education, Arunachal Pradesh
3. Board of Secondary Education, Assam
4. Bihar School of Examination, Bihar
5. Chattisgarh Board of Secondary Education, Chattisgarh
6. Goa Board of Secondary & Higher Secondary Education, Goa.
7. Gujarat Secondary & Higher Secondary Education, Gujarat
8. Haryana Board of Education, Haryana
9. Himachal Pradesh Board of School Education, Himachal Pradesh
10. J&K State Board of School Education, Jammu and Kashmir
11. Jharkhand Board of Secondary Education, Jharkhand
12. Karnataka Secondary Education Examination Board, Karnataka
13. Kerala Board of Public Examination, Kerala
14. Madhya Pradesh Board of Secondary Education, Madhya Pradesh
15. Maharashtra State Board of Secondary & Higher Secondary Education, Maharashtra
16. Manipur Board of School Education, Manipur
17. Meghalaya Board of School Education, Meghalaya
18. Mizoram Board of School Education, Mizoram
19. Nagaland Board of School Education, Nagaland
20. Orissa Board of School Education, Orissa
21. Punjab School Education Board, Punjab
22. Rajasthan Board of Secondary Education, Rajasthan
23. Sikkim Board of Secondary Education, Sikkim
24. Tamil Nadu Board of Secondary Education, Tamilnadu
25. Tripura Board of Secondary Education, Tripura
26. U.P. Board of High School 7 Intermediate Education, Uttar Pradesh
27. Uttaranchal Board of Secondary Education, Uttaranchal
28. West Bengal Board of Secondary Education, West Bengal

## ALL INDIA BOARDS / COUNCILS

1. Aligarh Muslim University, Aligarh
2. Central Board of Secondary Education, Delhi
3. Council for the Indian School Certificate Examinations
4. Jamia Millia Islamia, New Delhi



# ஆம்பூர் கலவர பூமியானதேன்?

வேலூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூர் காதர்பேட்டையைச் சேர்ந்த சாஜகானின் இளைய மகன் 26 வயது ஷமீல் பாஷா.

இவர் கடந்த வருடங்களில் ஆம்பூரிலுள்ள ஒரு தோல தொழிற்சாலையில் கண்காணிப்பாளராக (Supervisor) பணி புரிந்துள்ளார். அதே தொழிற்சாலையில் ஆம்பூர் பள்ளிகொண்டா குச்சிப் பாளையத்தைச் சேர்ந்த பழனியின் மனைவி பவித்ரா (27) என்பவரும் பணிபுரிந்துள்ளார். அப்பொழுது இருவருக்கும் பழக்கம் உண்டாகியுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் திருமணம் முடித்த சமீல்பாஷா, திருமணமான உடன் ஆம்பூரிலுள்ள தொழிற்சாலையில் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்துவிட்டு குடும்பத்தாருடன் ஈரோடு மாவட்டம் சென்றுவிட்டார்.

பவித்ராவுக்கு திருமணம் முடிந்துவிட்டது. ஆனால் அவளுக்கும் கணவருக்குமிடையே பூசல்.

ஒரு நாள் ஷமீல் பாஷா ஈரோட்டில் பணியிலிருந்த பொழுது, அவருடைய கைபேசியில் தொடர்புகொண்ட பவித்ரா, தான் ஈரோடு புகை வண்டி நிலையத்தில் நிற்பதாகவும், தன்னை வந்து அழைத்துச் செல்ல வேண்டுமென்று கூறியுள்ளார், உடனே அங்கு சென்ற ஷமீல்பாஷா, எனக்கு திருமணம் முடிந்துவிட்டது. உனக்கும் திருமணம் முடிந்துவிட்டது. இப்படியிருக்கும் பொழுது, நீ இங்கு வந்தது தவறு. ஆகையால் இங்கிருந்து சென்றுவிடு என்று கூறி, உணவு வாங்கிக் கொடுத்து, கையில் ரூபாய் 500ம் கொடுத்துவிட்டு அவளை ஆம்பூருக்கு அனுப்பி விட்டேன். எல்லா விபரங்களையெல்லாம் பவித்ராவின் பெற்றோரிடம் ஷமீல் பாஷா கூறி விட்டர்.

இதேவேளையில் பவித்ராவின் கணவர் தன்னுடைய மனைவியைக் காணவில்லை என்று மே மாதம் 24ம் தேதி காவல்

துறையில் புகார் கொடுத்தார். பள்ளி கொண்டா காவல் நிலையம் தான் அதிகாரம் பெற்றக் காவல் துறை. இந்தப் புகாரின் பேரில் மே மாதம் 26ம் தேதி குற்ற எண் 140/2015 ஆக வழக்குப் பதியப்பட்டு திரு. ரவி, சிறப்பு உதவி ஆய்வாளர் அதனை விசாரித்தும் வந்திருக் கின்றார்.



அந்நிலையில் கடந்த ஜூன் மாதம் 15ம் தேதி ஆம்பூரில் தன்னுடைய மாமனார் (இவர் INTJ இயக்கத்தில் பொறுப்பிலுள்ள வர்) வீட்டிலிருந்த சமீல்பாஷாவைத் தேடி சுமார் 20-25 நபர்கள் வந்து தாங்கள் பவித்ராவின் உறவினர்களென்றும், பவித்ரா வைக் காணவில்லை. கொஞ்சம் பணம் தந்தால் நாங்கள் பிரச்சினையைப் பெரி தாக்காமல் சென்று விடுவோமென்றும் கூறி உள்ளனர்.

அவர்களின் அந்தப் பேரத்திற்கு உடன்படாத ஷமீல்பாஷா தரப்பினர், நேரே பள்ளி கொண்டா காவல் நிலையம் சென்றுள்ளனர். அங்கு வழக்கம் போல் ஆய்வாளர் இல்லை. இருந்தவர்கள் ஷமீல்பாஷாவைப் பிறகு வந்து பாருங்கள் எனக் கூறியுள்ளனர்.

மீண்டும் 15.06.2015 அன்று பகல் 1 மணிக்கு காவல்நிலையம் சென்ற சமீல்பாஷாவை அழைத்துக் கொண்ட ஆய் வாளர் மார்டின் பிரேம்ராஜ், விசாரணை செய்துவிட்ட அனுப்பி விடுகிறேன் என்று கூறி அனைவரையும் காவல் நிலையத்திலிருந்து அனுப்பி விட்டுள்ளார். அதன் பிறகு 18.6.2015ம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் இவர் மீது எந்த குற்றமுமில்லை என்று கூறி ஆய்வாளா மார்டின் பிரேம் ராஜ் ஷமீல்பாஷாவை விடுவித் துள்ளார்.



இடைப்பட்ட இந்த 3 நாட்களும் சமீல்பாஷாவின் குடும்பத்தார் காவல் நிலையம் சென்று விசாரிக்கும் பொழு தெல்லாம், காவல்துறையினர் அவரை விசாரணைக்கு வெளி யே அழைத்துச் சென்றுள் ளனர் என்றே கூறியுள்ளனர். ஆகையால் ஷமீல் பாஷா குடும்பத்தினரும் எந்த விதமான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வில்லை.

18ம் தேதி காவல் நிலையத்திலிருந்து வந்த ஷமீல் பாஷாவிற்கு கைகளையும், கால்களையும் முன்னர்போல் இயக்க முடியவில்லை. மேலும் சிறுநீரும் வெளி யேறாமல் இருந்துள்ளது. அதனைத் தொடர்ந்து அவரிடம் விசாரித்ததில், மார்டின் பிரேம்ராஜ் உட்பட காவல் துறையினர் 7 பேர் தன்னை கடந்த 3 நாட்களாகவும், காவல் நிலையமல்லாத ஓரிடத்தில் வைத்து மது அருந்திவிட்டு அடித்து உதைத்து ஆணுறுப்பில் மிதித்து துவம்சம் செய்துள்ளதாகக் கூறியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மிகவும் ஆபத்தான நிலைக்கு வந்து விட்ட அவரை 18ம் தேதி இரவு ஆம்பூர் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு முறையான சிகிச்சையில்லாத தால் அங்கிருந்து மற்றொரு மருத்துவமனைக்கும் பிறகு சென்னை அரசு மருத்துவ மனைக்கும் கொண்டு சென்றனர். ஜூன் மாதம் 26ம் தேதி சிகிச்சை பலனின்றி அவர்

இறந்துவிட்டார். இதற்கிடையில் ஜூன் மாதம் 23ம் தேதி ஷமீல்பாஷா சிகிச்சையிலிருக்கும் பொழுதே INTJவினர் வேலூரில் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அதாவது 15ம் தேதியிலிருந்து அவர் மரணத்தி ன் மடியில் விழும் வரை சட்டப்பூர்வமான எந்த நட வடிக்கையுமில்லை.

ஷமீல்பாஷா இறந்ததைத் தொடர்ந்து காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் மீது கொலை வழக்குப் பதிவு செய்து அவரை சிறையிலடைக்க வேண்டுமென்றும், இந்த மரணம் தொடர்பாக, நீதி விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்றும் கடந்த 27ம் தேதி மீண்டும் INTJவினர் ஆர்பாட்டம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து ஷமீல்பாஷா தரப்பினர் கொடுத்த புகாரின் பேரில் ஜூன் 27ம் தேதி பள்ளிகொண்டா காவல் நிலைய குற்ற எண். 157/57ல் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 176(1)(a)வாக (சிறைகொட்டடி மரணம் குறித்து, குற்றவியல் நடுவர்மன்ற நீதிபதி விசாரணை செய்ய வழிவகைச் செய்யும் பிரிவு) வழக்குப் பதிந்து, JM-V விடுமுறையிலுள்ளதால் வேலூர் JM-1 அவர்கள் பிரேத பரிசோதனை செய்யும் பொழுதே உடனிருந்து தன்னுடைய விசாரணை நடத்தியுள்ளார்.

அதன் பிறகு 27ம் தேதி இரவு இறந்த உடலை ஆம்பூருக்குக் கொண்டு செல்லும் பொழுது, ஆத்திரமடைந்தவர்களின் ஆத்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சில சமூக விரோதிகள் அங்கிருந்தவர்கள் பொது வாகனங்களை சேதப்படுத்தியும், வாகனங்கள் தீ வைத்துக் கொளுத்தியும், இது தொடர்பாக ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் 7 முதல் தகவல் அறிக்கைகள் "FIR"பதியப்பட்டு அப்பாவிகள் சுமார் 112 பேர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டுள்ளனர்.

திரு. சரவணன், காவல் ஆய்வாளரே விசாரணை அதிகாரியாக உள்ளார்.

இந்நிலையில காவல் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் பணியிடைநீக்கம் செய்யப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது. காணாமல் போயுள்ள பவித்ராவைக் கண்டு பிடிக்கும் பணியும் முடுக்கிவிடப்பட்டது.

பவித்ராவை ஜூலை 5ஆம் நாள் கண்டபிடிக்கப்பட்டுள்ளார். 7ஆம் நாள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுளளார்.

ஷமீல் பாஷாவைச் சந்தித்துவிட்டு ஷமீல் பாஷா தந்த பணத்தோடு ஈரோட்டிலிருந்து நேரடியாக அம்பத்தூர் வந்துவிட்டார். அங்கு அவர் வேலை செய்வதில் முன் அனுபவம் உள்ளவர் என்பதால் உடனேயே வேலைக் கிடைத்துவிட்டது. வேலை கிடைத்ததும் அவர் ஓர் பெண்கள் விடுதியில் இணைந்து தன் வாழ்க்கையைத் தொடங்கியுள்ளார்.

நன்றாகவும் ஓரளவுக்கு நிம்மதியாகவும் இருந்த ஒரு பெண்ணை காரணங்காட்டி ஓர் அப்பாவியைக் கொலை செய்துள்ளார்கள் காவல் துறையினர்.

அதனால் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தி IPC 302 இன் கீழ் தூக்கிலிட வேண்டும்.

காவல்துறையினர் ஷமீல் பாஷாவை சித்திரவதைச் செய்வதை நிறுத்தி விட்டு, பவித்ராவைத் தேடி இருந்தால் அவள் கிடைத்திருப்பாள் விவகாரம் என்றோ முடிந்திருக்கும்.

எல்லோரும் நன்றாகவும், சுமூகமாகவும் வாழ்ந்திருப்பார்கள். ஆனால் ஆய்வாளர் மார்ட்டின் குழுவினரின் குடிவெறியும், அதிகார மமதையும் அப்பாவியைக் கொன்றுவிட்டது.

# டிக். . .டிக். . . டிக். . . ஜூலை 01,2015

**வா**கன விபத்து இழப்பீடு தொடர்பான ஒரு மேல்முறையீட்டு வழக்கில், தீர்ப்பு வழங்கியுள்ள சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதி திரு. என். கிருபாகரன் அவர்கள், இரு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் மற்றும் அந்த வாகனங்களின் பின்னால் அமர்ந்து செல்பவர்கள் அனைவரும் 2015ம் வருடம் ஜூலை மாதம் 1ம் தேதியிலிருந்து தலைக்கவசம் அணிவதைக் கட்டாயமாக்கி தீர்ப்பு வழங்கியுள்ளார்.

பின்னால் அமர்ந்து செல்லும் சிறுவர்கள் மற்றம் முதியவர்களுக்கு இதில் விதி விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

ஓட்டுநர் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்படுவது அபராதம் விதிக்கப்படுவது மற்றம் வாகனம் வரை பறிமுதல் செய்யப்படுவது போன்றவை தலைக்கவசம் அணியாதவர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் அடங்கும் என்று காவல்துறையினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த அறிவிப்புகளைத் தொடர்ந்து கடந்த சில தினங்களாக சென்னையிலுள்ள தலைக்கவசம் விற்பனைக்கூடங்களில் கட்டுக்கடங்காத கூட்டம் அலை மோதுகிறது. அபார விலை, கொள்ளை இலாபம், திடீர் பணக்காரராகி விட்டார்கள் ஹெல்மெட் வியாபாரிகள்.

சாலைகளின் தரம் மற்றும் பராமரிப்பைக் குறித்து மாநில அரசுக்கோ அல்லது மாநகராட்சிக்கோ எந்த விழிப் புணர்வுமில்லாத நிலையில் இப்படியொரு தீர்ப்பு நம்மை விரக்தியடைய வைக்கின்றது.

கடந்த 10 ஆண்டுகளில், சென்னை யிலுள்ள சாலைகளின் நீள, அகலங்கள் மற்றும் பெருகியுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் வாகன நிறுத்தம் மற்றும் சாலைகளின் தரம் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டால், இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதென்பது நம்முடைய மனநிலையில் தடுமாற்றத்தையே உண்டாக் கும்.

ஆதலால் வாகனங்களில் அறிவுரை கூறும் வகையில் தமிழக அரசு வைத் திருக்கும் தட்டிகளே போதும் அடாத நடவடிக்கைகள் வேண்டாம். தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டும்

சென்னையின் மக்கள் தொகை கிட்டத்தட்ட 80 இலட்சமென்று சொல்லப் படுகிறது. அந்த மக்கள் தொகையில் சுமார் 60 சதவிகிதம் பேர் தினமும் சென்னை நகரின் சாலைகளில் பேருந்து, சிற்றுந்து, மூன்று சக்கர வாகனம் (Auto Rickshaw) மற்றும் இரு சக்கர வாகனத்தில் பயணிக் கிறார்கள். அப்படிப் பயணிப்பவர் கள் அனைவரும் கண்டிப்பாக பழுதடைந்த சாலைகளில் பயணித்தேயாக வேண்டும்.

குண்டுங்குழியுமான சாலைகளில் பயணிப்பவர்கள் பல உடல் உபாதைகள் (குறிப்பாக முதுத்தண்டு தேய்மானம்) எரிபொருள் விரையம் மற்றும் வாகன சேதாரம் போன்ற தொல்லைகளுக்கு ஆட்பட்டேயாக வேண்டும்.

குண்டுங்குழியுமில்லாத சாலைகளை உண்டாக்கிக் கொடுப்பது மாநில அரசின் சட்டபூர்வமான கடமையென்றும், அது குடிமக்களின் அடிப்படை உரிமையென்றும் கடந்த மே மாதம் வழங்கிய தீர்ப்பில் ஹ.ளு. ஓகா மற்றும் ஊ.ஏ. பதான்ங் ஆகியோர் அடங்கிய மும்பை உயர்நீதிமன்ற அமர்வு கூறியுள்ளது.

சென்னை சாலைகளில் பயணம் செய்வோர் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50 லட்சம் பேர். அதில் இரு சக்கர வாகனத் தில் பணிப்போர் எண்ணிக்கை சுமார் 9-12 லட்சம். அந்த எண்ணிக்கையில் விபத்துக் குள்ளாவோரின் எண்ணிக்கை சில ஆயிரம். அந்த சில ஆயிரங்களில் தலையில் காயமடைந்தோரின் எண்ணிக்கை சில நூறு. அந்த சில நூறில் உயிரிழப்போரின் எண்ணிக்கை சில பத்துக்கள்.

குண்டுங்குழியுமான சாலைகளில் கிட்டத்தட்ட 50 லட்சம் பேர் பயணம் செய்து பல உடன் உபாதைகளை அனுபவிப்பதைப்பற்றி இந்தத் தீர்ப்பில் எதுவும் கூறவில்லை என்றாலும் சில பத்து பேர் உயிர்காக்க வேண்டி தலைக்கவசத்தை கட்டாயமாக்கி வழங்கப்பட்ட இந்த தீர்ப்பை நாம் கண்டிப்பாக மனதார வரவேற்க வேண்டும். **ந.நி.**

# கொலைகாரனைக் காப்பாற்ற முயன்றால் சட்டம் தண்டிக்காதா?



கடந்த வருடம் அக்டோபர் மாதம் 14ம் தேதி இராமநாதபுரம் மாவட்டம் எஸ்.பி. பட்டிணம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் காளிதாஸ் என்பவர் செய்யது முகம்மது என்னும் 21 வயது இளைஞனை தன்னுடைய துப்பாக்கியால் 3 முறை சுட்டதில் அந்த இளைஞன் காவல் நிலையத்திலேயே மரணமடைந்தான்.

அது தொடர்பாக எஸ்.பி. பட்டிணம் காவல்நிலையத்தில் குற்ற எண் (FIR) 91/2014ல் குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Cr.P.C.) பிரிவு 176(1)(ய) ஆக வழக்குப் பதியப்பட்டு, அது தொடர்பான குற்றவியல் நடுவர் மன்ற நீதிபதி திரு. வேலுசாமி (JM-IIï Ramnad) அவர்களின் விசாரணையும், CBCID விசாரணையும் முடிந்து, CB-CIDயின் இறுதியறிக்கை மேற்சொன்ன நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எஸ்.பி. பட்டிணம் காவல்நிலைய குற்ற எண் 91/2014ல் Cr.P.C. பிரிவு 176(1) (a)- இந்திய தண்டனைச் சட்டம் (இதச/IPC) பிரிவு 302 ஆக மாற்றப்பட்டு அந்தக் கொலைகாரன் கைது செய்யப்பட்டுள்ளான்.

அந்த கொலை நடந்த அக்டோபா மாதம் 14ம் தேதியன்றே எஸ்.பி. பட்டிணம் காவல் நிலையத்தை உள்ளடக்கிய திருவாடனை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் (DSP, Thiruvaadanai Sub-Division) அவர்கள், அந்த இளைஞனின் தாயாருக்கு ஒரு கடிதமெழுதுகிறார். அந்த கடிதத்தின் வாசகங்களை அப்படியே கீழே தருகிறோம்.

“இன்று (14.10.2014) மாலை 3 மணிக்கு எஸ்.பி. பட்டிணம் காவல் நிலைய குற்ற எண்.90/2014 வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட தங்களது மகன் செய்யது முகம்மது காயம்பட்டு அதன் தொடர்பாக இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பு வழியில் இறந்துவிட்டார் என்பதனையும், இது தொடர்பாக எஸ்.பி. பட்டிணம் காவல் நிலைய குற்ற எண்.91/2014 பிரிவு 176(1)(a) Cr. PC வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்பதாகும்.

அதாவது மேற்சொன்ன அந்தக் கடிதத்தின் பிரதான நோக்கமென்னவென்றால் அந்தக் கொலைகாரன் காளிதாஸ் செய்யது முகம்மதுவை கொலை செய்யவில்லை, மாறாக விசாரணையின் பொழுது காயமேற்பட்டு சிகிச்சைக்கு செல்லும் வழியில் உங்கள் மகன் இறந்துவிட்டான் என்று அந்தக் கொலையை திசை திருப்புவதே இந்தக் கடிதத்தின் நோக்கம்.

கொலைகாரன் காளிதாஸ் தன்னுடைய துப்பாக்கியால் சுட்டவுடன் அந்த இளைஞன் காவல் நிலையத்திலேயே இறந்த விஷயம் சந்தேகத்திற்கிடமில்லாமல் நன்கு தெரிந்திருந்தும், அந்த இளைஞனின் தாயாருக்கு இப்படியொரு கடிதமெழுதி அந்தக் கொலையை மறைக்க முயன்ற அந்த டி.எஸ்.பியும், மற்றும் இந்த விபரங்களெல்லாம் தெரிந்தும் அந்த டி.எஸ்.பி.யை கண்டிக்காத மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் (எஸ்.பி.) சட்டத்தின் முன் நிறுத்தப்படாதது ஏன்? சட்டம் தன் கடமையைச் செய்வதெப்பொழுது?

**ந.நி.**



# அவசியம் செய்வோம் இந்த ரமழானில்

**சென்ற ரமழானை சற்றே நினைத்துப் பார்ப்போம்!**

அல்லாஹ் இன்னொரு ரமழானை சந்திக்கின்ற வாய்ப்பை வழங்கி இருக் கின்றான்.

அதற்காக அவனுக்கு முதலில் நன்றி சொல்வோம்.

இந்த ரமலானை நன்றாகப் பயன் படுத்தி பாவங்களை மன்னிக்க அல்லாஹ் விடம் மன்றாடுவோம்!

இனி பாவங்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வோம். அதுவே உண்மையான தௌவ்பா. பாவ மன்னிப்பு.

இந்நிலையில் நாம் சென்ற ரமழானில் (2014) பெருமளவில் சஞ்சலப்பட்டதையும், நெஞ்சங்களில் நிம்மதி இழந்து நின்றதையும், கண்களில் கண்ணீர் மல்க அல்லாஹ்விடம் கையேந்தி நின்றதையும் சற்றே நம் நினைவுக்குக் கொண்டு வருவோம்.

ஆமாம், சென்ற ரமழானில் நம்மைச் சஞ்சலப்படுத்தியதும், நிம்மதி இழக்கச் செய்ததும், பாலஸ்தீனத்து அகதிகள் முகாமை அதாவது கஸாவின் மீது வெறித் தாக்குதல் நடத்திய யூதர்கள்தாம்.

அழிந்தது மொத்த பாலஸ்தீனமும் என எதிரிகள் அச்சுறுத்தியபோது நாம், அல்லாஹ்விடம் மன்றாடினோம். அந்த மக்களுக்கு எந்த உதவியும் செய்ய முடியாத கையறு நிலையில் இருக்கின்றோம். யா அல்லாஹ்! நீயே அவர்களைக் காப்பாற்றி டும் பொறுப்பை எடுத்துக் கொள் எனப் பிரார்த்திப்பதைத் தவிர நமக்கு வேறு வழி தெரியவில்லை.

அடுக்கடுக்கான கொந்தளிப்புகளுக்கு ஆளாகிநின்ற முஸ்லிம் நாடுகளிலிருந்தே

அல்லாஹ் மூன்று நாடுகளைக் கொண்டு அவர்களுக்கு உதவிடச் செய்தான். அவை துருக்கி, ஈரான், கத்தர் ஆகிய மூன்று நாடுகளும் தான். அவனியில் யாரும் எதிர்பார்க்காத, அதிசய வெற்றியை அந்த மக்களுக்கும் அல்லாஹ் வழங்கினான்.

வரலாற்றில் இன்று வரை சந்தித்ராத கேவலமான தோல்வியை யூதர்கள் அடைந்தார்கள். சரணடந்தே சமாதானம் செய்து கொண்டார்கள்.

யூதர்கள் மொத்த பாலஸ்தீனையும் கட்டிக் கொண்டாடவும் "Greater Isarel" அகண்ட இஸ்ரேல் ஒன்றை ஆக்கவும் மேற்கொண்ட முயற்சிகள் நிலைக் குலைந்தன. பாலஸ்தீன மக்களுக்கென ஒரு தனி நாட்டைத் தந்தாக வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டன.

இஸ்ரேலின் இந்த தோல்விக்குப் பின் உலக நாடுகளை முன்வந்து பாலஸ்தீனர்களுக்குத் தனி நாடு என முழங்கின. போர் முடிந்த பின்தான், இதில் உலக நாடுகளில் பல இதில் கலந்து கொண்டன என்பதும் அவற்றையும் சேர்த்துதான் அல்லாஹ் தோல்வியும் செய்தான் என்பதையும் அறிக்கின்றோம்.

இது அல்லாஹ் வழங்கிய முதல் வெற்றி.

இஸ்ரேல் இந்த தனிநாடு கோரிக்கை ஏற்காமல் தன் அடாவடித்தனங்களைத் தொடருகின்றது. என்றாலும், அது தான் கொண்டிருந்த அகண்ட இஸ்ரேல் மொத்த பாலஸ்தீனமும் தனக்கு என்ற அடங்காத வெறித்தனத்தை கைவிட்டு வருகின்றது.

பாலஸ்தீன மக்கள், தங்கள் குழந்தைகளும் குடும்பங்களும், ஷஹீதானதைப் பற்றி, அதாவது வீரமரணமடைந்ததைப் பற்றிக் கிஞ்சிற்றும் அரற்றிக் கொள்ளவில்லை. அவர்களின் தலைவர் ஹாலித் மஷாயில் இப்படி கர்ஜிக்கின்றார் "11,452 ஷஹீத்களைத் தந்த எங்கள் அமைப்புத் தான் பலம் பொருந்திய அமைப்பு. இன்னும் பலர் அந்த ஷஹாதத்தை வீரமரணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். ஆக அறுதி வெற்றி அன்மித்துக் கொண்டிருக்கின்றது." அல்ஹம்ந்துலில்லாஹ், எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

**இந்த ரமழானில். . .**

இந்த ரமழானில் பர்மா முஸ்லிம்கள், அஸ்ஸாம் முஸ்லிம்கள், முசாபர் நகர் முஸ்லிம்கள், மீரட் முஸ்லிம்கள், அத்தாலி முஸ்லிம்கள் நோன்பு நோற்க கூடாது என அரசின் தடையைத் தான்டி நோன்பு நோற்கும் சீனத்து மக்கள் தீவிரவாதிகள் என பழி சுமத்தப்பட்டு சிறைகளில் வாடும் ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம்கள், முஸ்லிம்களற்ற காஷ்மீரை உருவாக்கிடும் முயற்சில் கஷ்மீரில் நித்தமும் பிணமாக்கப் படும் முஸ்லிம் இளைஞர்கள், இராணுவத்தால் கற்பழிக்கப்பட்டு வாழ்வுக்கும், மரணத்திற்கும் இடையே அலைக்கழிக்கப் பட்டு நிற்கும் குனான் - போஷ்புரா கிராமத்து மக்கள் இவர்கள் அனைவருக்கும் துஆ செய்வும் அல்லாஹ்வின் உதவியருள துஆ செய்வோம்.

அனைத்திற்கும் மேலாக நாம் முயன்று விடுதலையை பெற்றுத்தந்த நம் நாடு பாசிசத்தின் பிடியிலிருந்து விடுபட இந்த புனித ரமழானினும் அதற்குப் பின்பும் தொடர்ந்து வக்து தொழுகையிலும் சிறப்பான இரவுகளிலும் "துஆ" செய்வோம்.

இந்தச் செய்தியை அனைவருக்கும் அறிய தந்திடுவோம்

வஸ்ஸலாம்

**இவண்**

**வைகறை வாசகர் வட்டம்,**

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்**

# நிழல் பட்டால் தீட்டா. . . . ?

**செ**ன்னை மாதம் (ஜுன்2015) வைகறையில் அம்பேத்கரும் இந்து ராஷ்டிராவும் என்றொரு கட்டுரையை வெளியிட்டிருந்தோம். அதில் இந்து ராஷ்டிராவின் விதிகளைப் பின்பற்றிட வில்லை யென்றால் தலீத்கள் பல்வேறு தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனக் குறிப்பிட்டிருந்தோம்.

அவற்றில் ஒன்று பூனா பெஷாவாக் களின் ஆட்சியில் தலீத்கள் ஒரு கயிற்றை தங்களுக்குப் பின்னால் கட்டிக் கொண்டு வரவேண்டும். கயிற்றின் தூரத்திற்கு அப்பால்தான் அடுத்தவர்கள் குறிப்பாக உயர் ஜாதிக்காரர்கள் வருவார்கள். இதனால் தீண்டத்தகாத இந்த மகக்ளின் நிழல் இவர்களின் மேல் விழாமல் தடுத்துக் கொள்ளலாம். இதனால் தீட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம், என்பதேயாகும்.

இந்தச் சட்டத்தை அன்றைய பூனா பெஷாவாக்கள் தங்கள் இந்து ராஷ்டிரா வில் கண்டிப்புடன் செயல்படுத்தினார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

அனைத்தும் 'அம்பேத்கரும் இந்து ராஷ்டிராவும்' என்ற ஆராய்ச்சி தொகுப்பி லிருந்து எடுக்கப்பட்டது.

இந்தக் கட்டுரையைப் படித்த நண்பர் கள் பலர் நிழல்பட்டால் தீட்டு என்பது இன்று நடைமுறையில் எங்கேயுமில்லை எனக் கூறினார்கள்.

உங்கள் கருத்தை கட்டுரைக்கு மறுப்புக்கருத்தாக எழுதித் தாருங்கள் வெளியிடுகின்றோம் என்றேன்.

நீங்கள் தீண்டாமைக்கு இஸ்லாத்தை தீர்வாகக் கூறுகின்றீர்கள். நாங்கள் அதை ஏற்பவர்கள். அதனால் அந்தக் கட்டுரைக்கு ஒரு மறுப்பு எழுதி அனுப்புவது தீண்டாமைக் கொடுமைகள் இன்று எந்த வடிவிலும் இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடக் கூடாது. அதனால் மறுப்பு எழுத்தில் வேண்டாம் என்றார்கள்.

அதனால் அதுபோன்று கருத்துச் சொன்னவர்களை அப்படியே விட்டு விட்டோம். அந்த வாசகர்களோடு விவாதித்து இரண்டொரு நாள்களில் டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற ஆங்கில நாளிதழ் இந்தச் செய்தியை வெளி யிட்டிருந்தது.

**கணேசபுரா கிராமம் (சட்டாபூர்)**

“தலீத் இளம் பெண் ஒருத்தி தொலை தூரத்திலுள்ள அடி பைப்பிலிருந்து தண்ணீர் எடுத்து வரும் போது அவளுடைய நிழல் உயர் ஜாதி ஆண்மகளின் மீது வீழ்ந்துவிட்டது. அதனால் அந்த ஆண் மகனின் குடுமூபத்துப் பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவளைத் தாக்கினார்கள்.”

**டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஜுன் 17, 2015**

பின்னா தாக்கப்பட்ட பெண்ணின் தந்தை தனது சார்பில் காவல்துறையிடம் புகார் ஒன்றைத் தந்தார். புகாரை காவல்துறையினர் பெற்றுக் கொண்டனர். அவ்வளவுதான் வழக்கம் போல் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்திடவோ புலன் விசாரணையை மேற்கொள்ளவோ இல்லை.

நிச்சயமாக இஃது SC/ST வன் கொடுமைச் சட்டம் 1989 யின் கீழ் உள்ள குற்றம்.

நாட்டில் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யாமல் விடப்பட்ட பலகோடி வழக்குகளில் இதுவும் ஒன்று.

இப்போது இந்தியா பாசிசத்தின் பிடியில் வீழ்ந்து விட்டதால் பழைய பெஷாவாக்களாக காவல் துறையினர் மாறிவிட்டார்கள். இந்த அநீதிகளுக்கெதிராக தொடரட்டும் நமது போர்கள்.

**நீதிக்கான மக்கள் இயக்கம்**

# தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் (பதிவு)

# அன்பான வேண்டுகோள்!

கடந்த 35 ஆண்டுகளாக எல்லாத் தடைகளையும் கடந்து இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் கடமையை நிறை வேற்றி வருகின்றோம்.

இஸ்லாத்தை இல்லங்கள்தோறும் இடைவிடாமல் பிரச்சாரம் செய்தோம் என்பதற்காக மத்திய, மாநில அரசுகள் கட்டவிழ்த்திட்ட அத்தனை கெடுபிடிகளை யும் எதிர் கொண்டோம். எதிர் கொண்டு வருகின்றோம்.

எம் கடன் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதே!எனத் தொடருகின்றோம்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் களுக்காக மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவி நடத்தி வருகின்றோம்.

மூன்றவதாக குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் களுக்காக நிறுவப்பட்ட 'அன்பகம்' இன்றளவும் 566 குடும்பத்தைச் சார்ந்த 879 பேர் படித்துச் சென்றுள் ளார்கள்.

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இங்கே கல்விக் கற்க வருவர்களுக்கு அனைத்தும் இலவசம். குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களில் சகோதரிகள், கருவுற்ற நிலையில் வந்தால் அவர்கள் பிரசவம் முதற்கொண்டு அனைத்து வசதிகளையும் இலவசமாகவே செய்து தருகின்றோம்.

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இந்தப் புனித பெருஞ் செயலில் கிராமம் கிராமமாக சென்று காரியமாற்றும் செயல் மழவர் பாசறைகளை உருவாக்கி பயிற்சி தந்து களம் காண செய்திருக்கிறோம்.

அவர்கள், இன்றும் களத்தில் கிராமங்களில் இடைவிடாமல் இஸ் லாமியப் பிரச்சாரத்தைச் செய்து வருகின்றார்கள்.

20 இலக்கியங்களை இஸ்லாமியப் பிரச்சாரத்திற்கென்றே வெளியிட்டு மிகக் குறைந்த விலையிலும் இலவசமாகவும் வெளியிட்டு வருகிறோம்.

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பிரசுரங்கள் இஸ்லாத்தை மிகச் சுருக்கமாக விளக்கிடும் சிற்றேடுகள் இவற்றை லட்சக்கணக்கில் இலவசமாக விநியோகித்துள்ளோம். இவற்றைப் படிப்பவர்கள் அல்லாஹ்வின் அறுதி வழி காட்டுதலாம் ஆல் குர்ஆனை கேட்டு வாங்கி படிக்கின்றார்கள். பலர் இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டுள் ளார்கள்.

இஸ்லாத்தை விளக்கிச் சொல்லிடும் நூல்களையும் ஏராளமாக வெளியிட்டு இலவசமாக விநியோகித்து வருகின்றோம்.

**இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் களுக்கான கல்வி நிறுவனங்கள்**

இஸ்லாத்தின் ஏதேனும் ஒரு பகுதியால் கவரப்பட்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்கள், இஸ்லாத்தின் இதரப் பகுதிகளையும் அறிந்திடவும்,

அன்றாட வாழ்க்கையில் இஸ் லாத்தை எப்படிச் செயல்படுத்துவது என்பதை கற்றிடவும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கென தனிக் கல்விக் கூடங்கள் மூன்றை நிறுவியுள்ளோம். அல்ஹம்ந்துலில்லாஹ்!

அறிவகம் ஆண்கள், அறிவகம் பெண்கள், அன்பகம் (இஸ்லாத்தைக்

குடும்பத்தோடு ஏற்றுக் கொள்பவர்களுக் கான கல்விக் கூடம்)

அன்புச் சகோதரர் டி.எம். மணி அவர்கள் மர்ஹூம் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடா ஆகிய மொழிகளில் கொண்டு வந்துள்ளோம்.

இந்த நூல், இந்தியாவெங்கும் தொடர்ந்து இலவசமாகவும், குறைந்த விலையிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்களின் நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி என்ற நூலை தமிழ், ஆங்கிலம், கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியிட்டு விநியோகித்து வருகின்றோம்.

இந்த நூல்கள் வழி கன்னடம், பீகார், உத்திரப்பிரதேசம், டெல்லி, ஹரியானா, ஆகிய மாநிலங்களில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை விரிவுபடுத்தி யுள்ளோம். எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே!

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் இந்தப் பணிகளில் நீங்கள் நேரடியாகப் பங்கெடுத்திட இயலாது என்பதனாலேயே உங்கள் சார்பில் இந்த பணிகளைச் செய்து வருகின்றோம். இவையும் நாங்கள் திட்டமிட்டுள்ள

# நீதிக்கான மக்கள் இயக்கம்

**அநீதிகளுக்கு எதிரான பெரும் போர்**

முஸ்லிம்களையும் - இஸ்லாத்தை யும் தீவிரவாதத்தோடு இணைக்கும் பழிபடலத்திற்கெதிரான நீண்ட பயணம்.

இந்த வகையில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரையும் விழிப்படையைச் செய்த நிகழ்வுகள்

## கர்கரேயைக் கொலை செய்தது யார்?

நூல் வெளியீட்டு நிகழ்ச்சி என்ற பெயரில் நாடெங்கும் பிரச்சாரம்.

இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம். இதுவரை 18,000 பிரதிகள் விநியோகம். தமிழகமெங்கும் 24 பிரச்சார கூட்டம். விற்பனை

நாடாளுமன்றத் தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள். 5,000 பிரதிகள் விநியோகம்

கஷ்மீரின் தீவிரவாதிகள் - அப்சா என்ற AFSE, ஆயுதங்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகார சட்டம் என்ற ஆள்தூக்கி சட்டத்திற்கெதிரான விழிப் புணர்வு

தமிழகமெங்கும் 5 பிரச்சாரக் கூட்டங்கள்.

உணவு பெறும் உரிமையைப் பெற்றுத்தரும் கருத்தியல் இயக்கம்!

- மனிதர்கள் மலம் அள்ளும் அவலத்திற்கெதிரான கருத்தியல் இயக்கம்.

மாதம் 300 ரூபாய் மட்டும் பெற்றுக் கொண்டிருந்தவர்கள் இப்போது ரூ. 4500 பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

விருந்தாவன் விவரங்களின் விடுதலை மக்கள் கருத்தை ஒன்று திரட்டும் இயக்கம்

காவல்துறையின் மனித உரிமை கொலைகளுக்கெதிராக வழக்குகள்

இன்னொரன்ப பணிகள்.

## மெது பிரச்சார வழிமுறைகள்

1. தாஃவா சுற்றுப் பயணங்கள் அடித்தட்டு மக்களிடம் இஸ்லாத்தை எடுத்துரைத்தல்
2. மடக்கோலைகள்
3. நூல்கள் வெளியீட்டு விழாக்கள் (எ) ஆய்வரங்கங்கள் / கருத்தரங்கங்கள்
4. நூல்கள் இலவச விநியோகம்
5. திருக்குர் ஆன் இலவசமாக விநியோகம்
6. மருத்துவமனைகளில் நோயாளிகளைச் சந்தித்து தாஃவா - இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு
7. மருத்துவமனைகளில் இரத்தம் தேவைப் படும் போது உதவுதல்.
8. நிவாரணங்கள் வழங்குதல்
9. ஈத் மிலன்கள் (எ) பெருநாள் சந்திப்புக்கள்
10. பெண்களே பெண்களுக்காக நடத்தும் பெருநாள் சந்திப்புக்கள்
11. எதிர் இலக்கியங்கள் - பிரச்சாரங்கள், கேள்விகள் இவற்றிற்கு அறிவுப்பூர்வ மாகவும், ஆய்வு பூர்வமாகவும் பதிலடிகள்
12. இளையத்தலைமுறையைத் தாஃவாவின் பக்கம் இருக்கச் செய்யும் தாஃவா பயிலரங்கங்கள் ('DOC' என்ற Dawah Orinetal Courses)
13. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி வாழ்கின்றார்கள் என்பதை வருடந் தோறும் ஓர் ஆய்வுக்கு உட்படுத்தி வரு கின்றோம். அவர்களின் நல்வாழ்வில் அக்கறைக் கொண்டவர் களைச் கொண்டு அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளை யும் செய்து வருகின்றோம்.

ஏனைய பணிகளும் நமது பணிகள். இவற்றை நிறைவேற்ற உங்களுடைய நிதி உதவிகளைத் தாராளமாக வழங்க வேண்டு கிறோம்.

நன்றியுடன்

**மு. குலாம் முஹம்மத்**
காப்பாளர்

**மௌலவி கே.எம். இலியாஸ் ரியாஜி**
பொருளாளர்

**எஸ்.ஏ. அப்துல் ரவூஃப்**
துணைச் செயலாளர்

செக் அல்லது டி.டி. அனுப்புவோர் **Darul Islam Foundation Trust** என்ற பெயருக்கு எடுத்து பின் வரும் முகவரிக்கு அனுப்பும்

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் (பதிவு)**
**52/1, மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, எஸ்.எம்.எஸ். கோனிகா கலர் லேப் பில்டிங்,**
**மண்ணடி, சென்னை - 600 001.**

**நேரடி**

கனரா வங்கி கிளைகளில் எங்கிருந்து வேண்டுமானாலும் நமது டிரஸ்ட் அக் கவுண்டில் பணம் நேரடியாகச் செலுத்தலாம்.

**Canara Bank, St. Marys Road, Branch, Chennai**
**SB Account No. : 1287101017301**
**Please draw your cheque / DD in favor of**
**DARUL ISLAM FOUNDATION TRUST and send to**
**52/1, Mannady Street, 4th Floor, Room No.7,**
**SMS Konica Colour Lab Building,**
**Mannady, Chennai - 600 001**
**Cell : 8148129887/ 9788788018 / 9444434422**




# தனி மனித உரிமைகளைவிட சமுதாய உரிமை காக்கும் கடமைக்கே முதலிடம்!

இங்கே இன்னொரு விளக்கத்தையும் கூறியாக வேண்டும்.

அது, "ஒரு மனிதனின் உரிமைகளைக் காக்கும் கடமையைவிட சமுதாயத்தின் உரிமைகளைக் காக்கும் கடமைக்கே முதலிடம்" என்பதே.

ஏனெனில் எந்த தனி மனிதனும் அவன் சார்ந்துள்ள சமுதாயம் இன்றி அவன் இல்லை.

ஒருவன் தனியாக வாழ்ந்திட இயலாது. முன்னோர்கள் கூறியது போல கூட்டு வாழ்க்கைதான் மனித சுபாவத்துக்கு ஏற்றது.

இதைத்தான் 'மனிதன் ஒரு சமூக விலங்கு' என்கின்றனர்.

ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் பார்த்தால் குறைவாகவே தெரியும். மொத்தமாக கூட்டமாகப் பார்த்தால் அதுவே அதிகமாகத் தெரியும்.

தனித்து வாழ்பவன் இல்லாதவன் போன்று. கூட்டாக வாழ்பவனே இருப்பவன்.

எனவேதான் கூறுகிறேன் ஒரு சமுதாயத்தின் ஒரு கூட்டத்தின் உரிமைகளைக் காக்கும் கடமைக்கே முதலிடம் தனி மனித உரிமைகளைக் காக்கும் கடமைகளை விட.

இதற்கு முன்னர் நாம் கூறியிருந்தோம் ஜிஹாத் எனும் அறப்போரும் பெற்றோருக்குப் பணிவிடை செய்வதும் ஒரே நேரத்தில் நம் முன் வந்தால் பெற்றோருக்குப் பணிவிடை செய்வதற்கே முதலிடம் தர வேண்டும் என்று.

இதற்கு பல ஆதாரப்பூர்வமான நபி மொழிகளை சான்றாகக் காட்டியிருந்தோம். இது எப்போதென்றால் அந்த ஜிஹாத் (அறப்போர்) ஃபர்ளு கிஃபாயா என்ற அடிப்படையில் (யாரேனும் சிலர் செய்தாலே அனைவரின் பொறுப்பும் நீங்கி விடும்) என்று இருந்தால்தான்.

அதே நேரத்தில் இந்த ஜிஹாத் அனைவரின் மீதும் கட்டாய கடமை (ஃபர்ளுஅய்ன்) என்றாகிவிட்டால் அப்பொழுது ஜிஹாத்கே முதலிடம்.

இஸ்லாமிய அரசுக்கு எதிராக இறைமறுப்பாளர்கள் போர் தொடுக்கும் சூழல் ஏற்பட்டால் தம் நாட்டைப் பாதுகாத்திட வேண்டிப் போராடுவது முஸ்லிம்கள் அனைவர் மீதும் கட்டாயக் கடமை.

இந்நேரத்தில் தாயோ தந்தையோ தம் பிள்ளை மீதுள்ள பாசத்தின் காரணமாக இந்த தற்காப்புப் போரில் பங்கேற்க வேண்டாம் எனத் தடுத்தால் அதை ஏற்கக் கூடாது. ஜிஹாத்க்கே வரவேண்டும்.

ஆம்! பெற்றோரைப் மதிப்பது அவர்கள் சொல் கேட்பது கடமைதான். அதே போல ஜிஹாத்-ம் கடமைதான்.

எனினும் ஜிஹாத் என்பது மொத்த சமுதாயத்தையும் காப்பாற்றும் கடமை. இந்த சமுதாயத்தில் போராளியின் பெற்றோரும் ஓர் அங்கம்.

இந்த இஸ்லாமிய நாடு எதிரிகளின் கைகளில் வீழ்ந்து விட்டால் அல்லது அங்கே வாழ்வோர் அனைவரும் அழிந்திட நேர்ந்தால் இந்த போராளியின் பெற்றோரும் சேர்ந்தே அழிந்திட வேண்டும்.

எனவே சமூக நலன் காத்திட நடக்கும் ஜிஹாத்துக்கே முதலிடம்.

சிலர் இதை இப்படியும் குறிப் பிடுவார்கள் "ஜிஹாத் அல்லாஹ்வுக்காக நாம் செய்யும் கடமை. பெற்றோர் நலன் பேணுதல் என்பது அடியார்களுக்கு செய்யும் (பெற்றோர்களுக்கு செய்யும்) கடமை. எனவே அடியார்களின் உரிமை காக்கும் கடமையை விட அல்லாஹ்வுக்குச் செய்யும் கடமைக்கே முதலிடம்"

மேலே நாம் கூறிய கருத்துக்கு வலிமை சேர்ப்பதாகவே இது இருக்கிறது.

ஆம், பெரும்பாலும் அல்லாஹ்வுக் குரிய கடமை என்ற சொல் ஒரு கூட்டத்தின் அல்லது ஒரு சமுதாயத்தின் நலன் காக்கும் கடமை என்பதாகவே அமைந்துவிடுகிறது.

ஏனென்றால் இவற்றையெல்லாம் நாம் செய்வதன் மூலம் அல்லாஹ்வுக்கு நலன் தந்துவிட்டோம் என்பதல்ல. அது முழுக்க முழுக்க அடியார்களின் நலனாகவே இருக்கிறது. (அல்லாஹ்வுக்காக நாம் செய்யும் ஹுகூகுல்லாஹ் கடமைகளில் அடியார்களின் நலன் தான் பேணப் படுகிறது).

தனி மனித உரிமை காக்கும் கடமையைவிட சமுதாய உரிமை காக்கும் கடமைக்கே முதலிடம் என்ற இந்த விதியின் கீழ் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும் வேறு சில அறிஞர்களும் இப்படிக் கூறுகின்றனர்.

ஒரு போர்களத்தில் எதிரிகள் முஸ்லிம்களில் சிலரைக் கைது செய்து அவர்களைக் கேடயமாகப் பயன்படுத்து கின்றனர். இப்போது எதிரிகள் மீது தாக்குதல் நடத்தினால் (எதிரணியில் முன்னே நிறுத்தப்பட்டிருக்கும்) முஸ்லிம் கள் கொல்லப்படுவார்கள் என்ற நிலை.

இந்தச் சூழலில் இந்த முஸ்லிம்களின் உயிரைப் பற்றி கவலைப்படாமல் எதிரி களைத் தாக்கி அழிக்க வேண்டும் என் கின்றனர் அந்த அறிஞர்கள்.

ஒரு முஸ்லிம் கூட அநியாயமாகக் கொல்லப்படக் கூடாது. முஸ்லிம்கள் அனைவரின் உதிரங்களையும் பாதுகாப்பது கடமை என்ற அடிப்படை விதி இருக்க இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் எப்படி எதிரிகளின் பிடியில் சிக்கியிருக்கும் அந்த அப்பாவி முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்த அனுமதித்தார்கள்?

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) மட்டுமல்ல, அவர்களுடைய கருத்துடன் ஒத்துச்

செல்பவர்களும் இப்படித் தாக்குதல் நடத்த அனுமதிப்பதற்குக் காரணம் முஸ்லிம் அணியையும் முஸ்லிம் சமுதாயத்தையும் பாதுகாப்பதற்காகத்தான்.

ஏனெனில் தனி மனிதர்களின் இழப்பை ஈடு செய்திட முடியும். ஒரு சமுதாயமே அழிந்து போனால் அந்த இழப்பை ஈடுகட்ட முடியுமா? முடியாதல்லவா!

முஸ்லிம்களில் சிலரைக் கைதிகளாகப் பிடித்துக் கேடயமாக்கிக் கொண்டால் முஸ்லிம்கள் நம்மைத் தாக்க மாட்டார்கள் என்று நினைக்கும் போது அந்தக் கைதிகளாக இருக்கும் போராளிகளை எதிரிகளிடம் விட்டு வைப்பதால் ஏதேனும் ஆபத்து இருந்தால் இந்த அப்பாவி முஸ்லிம்களின் உயிர்களைப் பற்றிக் கவலைப்படாமல் எதிரிகளைத் தாக்க வேண்டும் என்பதே சட்ட வல்லுநர்களின் கருத்து.

இஸ்லாம் வேரோடு அழிக்கப்பட்டு இறைமறுப்புக் கோட்பாடு மேலோங்கும் ஆபத்து இருப்பதால் ஒரு சிலரை அர்ப்பணித்து சமுதாயத்தைப் பாதுகாத்திட வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்த அப்பாவிகளுக்கு அல்லாஹ்விடம் நிறைவான கூலி காத்திருக்கிறது. (காண்க: இமாம் கஸ்ஸாலி (ரஹ்) எழுதிய அல்முஸ்தஸ்ஃபா எனும் நூல் பாகம் -1 பக்கம் : 294,295)

இப்படிச் செய்வது புனிதமான பாதுகாக்கப்பட வேண்டிய உயிர்களைப் பறிப்பதாக ஆகிவிடுமல்லவா? என்ற கேள்விக்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) இப்படி பதிலளிக்கிறார்கள்.

“இப்படி எதிரிகளால் கேடயமாக்கப் பட்டிருக்கும் முஸ்லிம்களின் சில உயிர்களைக் காக்க முற்பட்டால் எண்ணிலடங்காத பல அப்பாவிகளை இழக்க வேண்டியதிருக்கும் தனி மனித நலனைவிட பொதுநலனே முதன்மையானது என ஷரிஅத் கூறுவது நமக்குத் தெரியும். இறைமறுப்பாளர்களின் கோரத் தாக்குதலிலிருந்து முஸ்லிம்களைக் காப்பாற்று வதே முதன்மையானது தனி மனிதனைக் காப்பதை விட. ‘ஷரீஅத்’ தின் உறுதியான லட்சியமும் இதுதான்” (காண்க : அதே நூல் பாகம் -1 பக்கம் 303)

“முவாசனத்” எனும் நன்மை, தீமைகளை சீர்தூக்கிப் பார்த்து எடை போடும் திறன் மூலமே இது போன்ற முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

இதே போல மற்றொரு பிரச்சனையையும் பார்ப்போம்.

இஸ்லாமிய சட்டத்துறை வல்லுநர்கள் பலரும் “சகஜமான சூழலில் ஒருவரின் செல்வத்திற்கு ஸகாத் தவிர வேறு வரிகள் விதிக்கக் கூடாது” என்கின்றனர்.

அதே நேரத்தில் போர் மேகம் சூழ்ந்திருக்கும் போது போரின் தேவைகளுக்காகவும் ஜிஹாதின் செலவுகளுக்காகவும் படை வீரர்களுக்கு உதவிடவும் செல்வந்தர்களிடமும் சீமான்களிடமும் வரி வசூலிக்கலாம் என்கின்றனர் மார்க்க சட்ட வல்லுநர்கள்.

ஷரீஅத் இதை வலியுறுத்துகிறது தேவைக்கேற்ப கட்டாயமாக்குகிறது.

இதற்கு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) இப்படி விளக்கம் தருகின்றார்கள், “இரண்டு தீங்குகளில் ஏதேனும் ஒன்றைச் செய்தாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் பெரிய தீங்கைத் தடுப்பதற்கு சிறிய தீங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற பொது விதி நமக்குத் தெரியும்”

“இது போன்ற சூழல்களில் செல்வந்தர்கள் மீது அல்லது வாய்ப்புள்ளவர்கள் மீது விதிக்கப்படும் வரி (தற்காலிக வரி)

என்பது சிறிய தீங்குதான். முஸ்லிம்களின் உடமைக்கும் உயிருக்கும் ஏற்பட்டிருக்கும் ஆபத்தே பெரிய தீங்கு”

“இஸ்லாமிய நாட்டைச் சூழ்ந் திருக்கும் (போர் மேகம் எனும்) ஆபத்து நீங்கி விட்டால் நிலைமை சீராகிவிடும். தீமைகளின் ஆணிவேர் அகற்றப்பட்டு விடும்” (காண்க: அதே நூல் பாகம் :1 பக்கம் 303,304 மற்றும் இந்திசாம் இமாம் ஷாத்பீ)

இதேபோல எதிரிகளிடம் சிக்கி அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் கைதிகளை மீட்கவும், வரிவிதிக்கப்பட வேண்டும். இமாம் மாலிக் (ரஹ்) கூறுகிறார்கள், “முஸ்லிம் கைதிகளை விடுவிப்பது முஸ்லிம்கள் அனைவர் மீதும் கடமை. இதற்காக அவர்களின் செல்வங்களெல்லாம் மூழ்கினாலும் சரியே” (நூல்: அஹ்காமுல் குர்ஆன், காரீஅபூபக்கர் ரஹ்)

இதற்குக் காரணம் தனி மனிதர்கள் சிலரின் செல்வங்களைவிட இந்த சமுதாயத்தின் கண்ணியமே மேலானது. கைதிகளின் கண்ணியமென்பது முஸ்லிம் சமுதாயத்தின் கண்ணியத்துடன் சேரந்தது தான்.

எனவே தனி மனித நலனைவிட சமுதாய நலனே முதன்மையானது.

**தொடரும்**



தொடர். . .

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

## பாகம் : 3 - உதுமானிய சாம்ராஜ்யத்தின் காலம்

**அபுல் ஹசன் அலீ நத்வீ - மொழிபெயர்ப்பு -அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

இந்தக் காலகட்டத்தில்தான் வரலாற்றின் மேடையில் துருக்கியர்களாம் உதுமானியர்கள் தோன்றினர்.

முராத் அவர்களின் மகன் இரண்டாம் முஹம்மது என்ற இருபத்து நான்கு வயதேயான இளைஞர் கி.பி. 1453ம் ஆண்டில் (ஹிஜ்ரி 853-ல்) எவராலும் நெருங்கமுடியாத பைசாந்தியப் பேரரசின் தலைநகரான கிரேட் கான்ஸ்டாண்டிநோபிளை வென்றெடுத்தார்.

இதனால் முஸ்லிம்களின் உள்ளத்தில் புது நம்பிக்கை பிறந்தது. இஸ்லாத்தின் எதிர் காலம் துளிர் விடத் தொடங்கிற்று.

துருக்கியர்களுக்குத் தலைமை யேற்றிருந்த உதுமானியர்கள் முஸ்லிம் சமுதாயத்தை வழி நடத்துவதிலும் முஸ்லிம்களின் வலிமையை மீட்டெடுப்பதிலும் உலகில் தனக்கென தக்கதோர் இடத்தைப் பிடிப்பதிலும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.

எட்டு நூற்றாண்டுகளாக முஸ்லிம்களின் கைக்கு வரமறுத்த கான்ஸ்டாண்டிநோபிளை அவர்கள் வென்றதே அவர்களின் அபார ஆற்றலுக்கும், வலிமைக்கும் சிறந்த எடுத்துக் காட்டாக இருந்தது.

அது மாத்திரமன்று உதுமானியர்களின் இந்த வெற்றி அவர்கள் போர் திறனில் எவ்வளவு முன்னேற்றம் பெற்று விட்டார்கள் என்பதற்கும் அவர்களின் படை நடத்தும் பாங்கிற்கும் போராயுதங்களைப் பயன்படுத்து வதில் அவர்கள் இக்காலத்திலுள்ள இதர சமுதாயங்களை விட எவ்வளவு தூரம் முன்னேறியிருந்தார்கள் என்பதற்கும் செயல் திறன் அறிவாற்றல் ஆகியவற்றை எப்படி அவர்கள் முறையாக பெற்று சரியாகப் பயன்படுத்தினார்கள் என்பதற்கும் சான்றாக விளங்கிற்று.

ஆக ஒரு சமுதாயத்துக்கு எவையெல்லாம் தேவையோ அவை அனைத்தையும் பெற்றுத் திகழ்ந்திருந்தனர் உதுமானியர்கள். அதனால் அவர்கள் கான்ஸ்டாண்டிநோபிளை வென்றார்கள்.

### போர்க்கலையில் தேர்ந்த வெற்றியாளர் முஹம்மது

டிராபர் கூறுவது போல் முஹம்மது அல் ஃபாதிஹ் அவர்கள் விளையாட்டுக் கலைகளைக் கற்றிருந்தார். அவற்றைப் போர்க்கலைகளுடன் சரியாகப் பொருந்திடப் பயன்படுத்தினர். இந்த வெற்றியைப் பெற்றிட அவர் திட்டமிட்டு பல முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார். தம் காலத்திலிருந்த போர் ஆயுதங்கள் அனைத்தையும் பயன்படுத்தினார்.

---

* கி.பி. 664ம் ஆண்டு (ஹிஜ்ரி 44-ல்) அரேபியக் கப்பல்படை கான்ஸ்டாண்டி நோபிள் மீது படயெடுத்தது கி.பி. 672ம் ஆண்டில் (ஹிஜ்ரி 52ல்) முஆவியா (ரழி) வின் மகன் யசீது காண்ஸ்டாண்டி நோபிளை முற்றுகை யிட்டார். அரபுக்கள் (முஸ்லிம்கள்) குறைந்தபட்சம் நான்கு தடவைகளாவது அதை முற்றுகை யிட்டிருப்பார்கள். எனினும் அதனை முஸ்லிம்களால் வெல்ல முடியவில்லை. அவ்வளவு வலிமைமிக்கதாக அது இருந்தது.

எழுத்தாளர் Baran Carfa De VAvx இஸ்லாமிய சிந்தனைவாதிகள் என்ற புத்தகத்தின் முதல் பகுதியில் முஹம்மது அல்பாத்திஹைப் பற்றிக் கூறும் போது.

இந்த வெற்றி முஹம்மது பாத்தி ஹுக்கு சமயோசிதமாகவோ பைசாந்திய சாம் ராஜ்ஜியத்தின் பலவீனத்தின் காரண மாகவோ ஏதோ கையை வந்தடைந்த தாகவோ கூறமுடியாது. சுல்தான் இதற்கு முன்னால் தேவையான வியூகங்களை அமைத்திருந்தார். அக்கால அறிவியல், விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் அனைத்தை யும் பயன்படுத்தினார். அக்கால நவீனக் கண்டுபிடிப்புகளில் பீரங்கியும் ஒன்று. மிகப் பென்னம் பெரிய பீரங்கியை இவரே உருவாக்கினார். முன்னூறு கிலோ எடை யுள்ள குண்டைத் தாங்கிச் செல்லும் பீரங்கியை உருவாக்க ஒரு என்ஜினியரை நியமித்தார். அக்குண்டு ஒரு மைல் தூரம் வரைச் சென்று தகர்க்கக்கூடியது. அதனைப்பற்றிக் கூறப்படும் செய்தி, இந்த பீரங்கியை இழுத்துச் செல்வதற்காக சுமார் எழுநூறு மனிதர்களை நியமித்ததார் குண்டைப் பீரங்கியில் செலுத்த சுமார் இரண்டு மணி நேரங்கள் பிடித்தது.

முஹம்மது பாத்திஹ் கான்ஸ்டாண்டி நோபுளின் மீது படையெடுத்த போது சுமார் மூன்று இலட்சம் போர் வீரர்கள் இருந்தார்கள் என்றும் உருவத்தால் பயங்கரமான பீரங்கி இருந்தது என்றும் சொல்லப்படுகிறது. அந்நகர முற்றுகையில் நூற்றி இருபது போர்க் கப்பல் இருந்தன.

## துருக்கியர்களின் சிறப்பம்சங்கள்

இஸ்லாமிய துருக்கிய சமூகம், உதுமானிய மக்களின் தலைமையின் கீழ் பெற்றிருந்த சிறப்புகள் எண்ணிலடங்கா தவை. அதனால் அவர்கள் உலக முஸ்லிம் தலைமைக்கு உரியவர்களாயிருந்தனர்.

## ஒன்று

துருக்கிய சமூகம் உயர்ந்து முன்னேற வேண்டுமென்ற ஆசை, ஆர்வம், ஊக்கம், விடாமுயற்சி, உயர்நோக்கம் கொண்ட சமூகமாக இருந்தது. வாழ்க்கையில் எளிமை, பிறப்பும் வளர்ப்பும் இயற்கையாய் மிக நெருக்கும். நகாரீக சமூகங்களுக்கேற்பட்ட ஒழுக்கக் கேடுகளை விட்டும் மிகத் தூரமாய் இருத்தல் இதுதான் கிழக்கத்திய சமூகங்களை அழித்தது.

## இரண்டு

போர்க்குணம் நிரம்பப்பெற்றதால் அச்சமூகம் ஆன்மீக மட்டத்திலும் உலகாதய மட்டத்திலும் ஆளுமையைப் பெற்றிருந்தது. அதனால் பகைவர்களின் வக்கிரத்தையும் விரோதிகளின் ஏகாந்தத்தை யும் முறியடித்தது. உலகத் தலைமையும் அதனால் கிடைத்தது. துருக்கியர்கள் ஆரம்ப காலத்தில் அதிநவீன ஆயுதங்களை குறிப்பாக துப்பாக்கிகளைப் பயன்படுத் தினர். பீரங்கிகளுக்கு அதிக முக்கியத் துவத்தை அளித்தனர். யுத்த ஆயுதங்களில் அதி நவீனத்தையே பயன் படுத்தினர். போர் கலைக்கு முக்கியத்துவம் அளித்தனர். போர்படைகளை சீரமைத்து படைகளுக்கு ஆள் சேர்த்து போர்க்கலையில் வித்தகர் களாக மாறினர். ஐரோப்பியர்களுக்கு மிகச் சிறந்த முன்னோடிகளாயினர்.

ஒரே நேரத்தில் மூன்று கண்டங்களை ஐரோப்பா, சிரியா, ஆப்ரிக்கா ஆகியவற்றை ஆட்சி செய்தனர். பாரசீகத்திலிருந்து ஆரம்பித்து அட்லஸ் நதிக்கரையில் அமைந்த மராகிஸ் நகர் வரையுள்ள இஸ்லாமிய கிழக்குப் பகுதியை சொந்தப் படுத்தியிருந்தனர். சின்ன சிரியாவில் கிளைகளைப் பரப்பி ஐரோப்பாவுக்குவுக்கு இணையான நகரங்களை உருவாக்கினர். மத்திய தரைக் கடலை ஏக போக சொந்தமாக்கிக் கொண்டனர். இது உதுமானியர்களின் சொந்தக் கடலாக்கி அந்நியர்கள் யாருமே நுழைவதற்கு அனுமதி வழங்கபடவில்லை. புரடெரிக் மன்னன், போப் ஆண்டவருக்குத் தபால் ஒன்றை எழுதியுள்ளார். அதில் சுல்தான் கருங்கடலை தன் சொந்த வீட்டைப் போன்று ஆக்கிக் கொண்டார். அன்னியர் யாருக்குமே அனுமதி அளிப்ப தில்லை எனக் கூறியுள்ளார்.

**தொடரும். .**

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங்    தமிழில் மு. குலாம் முஹம்மத்**



**இன்றைய நவீன உலகைப் பற்றி யார் மேற்கொள்ளும் பார்வையும் முழுமையானதோர் பார்வையாக அமைந்திடாது அவர் இஸ்லாத்தை புரிந்திடவில்லை என்றால்,**

**ஆனால், இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், நாம் முஹம்மத்(ஸல்)ஐ புரிந்திட வேண்டும். முஹம்மத்(ஸல்) ஐ ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப் படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள். அவர்களைப் பற்றி ஏராளமான இலக்கியங்கள் கிடைக்கின்றன. அவற்றில் மிகச் சில இலக்கியங்களே அவரது வாழ்க்கையை நிறைவான கோணத்தில் நமக்குச் சொல்லுகின்றன. எஞ்சியன வேண்டுமென்றே திரிக்கப் பட்டு தவறான எண்ணங்களையும், சிந்தனைகளையும் விதைக்கின்றன.**

**ஆனால் கரன் ஆம்ஸ்டிராங்கின் இந்த வரலாறு அந்தக் கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுவு நிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

**இந்த நூல் பற்றி ஆங்கில நாட்டு பத்திரிகை - SUNDAY TIMES**

# குறைஷிகள்

ஆறாம் நூற்றாண்டில் பாலை வனத்தில் நாடோடிகளாக வாழ்ந்து கொண்டிருந்த அரபுக்கள், ஓர் புதிய உத்தியைக் கண்டுபிடித்தார்கள்.

அது ஒட்டகைகளில் ஓர் (Saddle) இருக்கையை வைத்திடும் உத்திதான்.

இப்போது ஒட்டகங்களில் முன்பை விட அதிமான பொருள்களை ஏற்றிச் சென்றிட இயலும் என்ற புதிய நிலை உருவானது.

இதனால் அவர்கள் வியாபாரி களாகத் தங்களை ஆக்கிக் கொண்டார்கள். இதனை அரபுக்களின் போக்குவரத்துப் புரட்சி எனலாம். (Transport Revolution)

இந்தியா, கிழக்கு ஆப்பிரிக்கா, யேமன், பெஹ்ரைன் ஆகிய இடங்களி லிருந்து அரேபியாவுக்கு வியா பாரம் செய்திட வந்தவர்கள் கோவேறு கழுதையைப் பூட்டிய வண்டிகளில் தாம் வியாபார பொருள்களைக் கொண்டு வந்தார்கள்.

இப்போது அவர்கள் ஒட்டகளி லேயே அந்தப் பொருள்களைக் கொண்டு வந்தார்கள். கோவேறு கழுதைகள் பூட்டிய

வண்டிகளை விட ஒட்டகங்களில் இந்த புதிய இருக்கைகளில் பொருள்களை கொண்டு வந்திட முடிந்தது. அது எளிதாகவும், இலாபகரமாகவும் இருந்தது. அன்று வரை அரேபியாவுக்கு வரத் தயங்கிய பல வியாபாரிகள் இப்போது அரேபியாவுக்குள் வரத் தொடங்கினார் கள்.

பைசாந்தியம் - சிரியா ஆகிய நாடுகளுக்கு வியபாரம் செய்திட வந்த பல வியாபாரிகள் இப்போது அரேபியாவுக்குள் வந்து சென்றனர்.

அவர்கள் அரேபியாவுக்குள் புகுந் ததும், தங்கள் பொருள்களைப் பாது காத்திட அரபு நாட்டு மக்களையே நியமித் தார்கள். அதே போல் நீர்சுனைகளை நோக்கித் தங்களை அழைத்துச் செல்லவும் அவர்களையே பயன்படுத்தினார்கள்.

மெல்ல, மெல்ல வடக்கு நோக்கிச் செல்லும் வியாபாரக் கூட்டங்களுக்கு மக்கா ஒரு தங்கிச் செல்லுமிடமாக மாறியது.

மக்கா ஹிஜாஸ் பகுதியின் மத்தியில் அமர்ந்திருந்ததால் வியாபாரிகளுக்கு இது மிகவும் வசதியாக இருந்தது. அத்தோடு அங்கு தண்ணீர் பஞ்சமிருக்கவில்லை.

காரணம் அரபுக்கள் ஜம் ஜம் என அழைத்த நிலத்தடி நீர் சுனை ஒன்றைக் கண்டெடுத்தார்கள். இதனால் அங்கே சுனை தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. இதனால் அங்கு தங்கி வாழ்வது கூட எளிதாக இருந்தது.

இந்த நிலத்தடி நீர்சுனை மிகவும் ஆச்சர்யமானது, அதிசயமானது. ஏனெனில் அது எல்லா தட்பவெப்ப நிலைகளும் இதில் தண்ணீர் தங்கு தடையின்றி வந்து கொண்டிருந்தது. இதனால் மக்கா ஓர் மாநகரமாக வாழ்வதற்கு முன்பே இந்த இடம் ஓர் புனித இடமாக அரபுக்களால் கருதப்பட்டது. அதனால் இதர இடங்களில் வாழ்ந்த அரபுக்கள் அந்த இடம் நோக்கி புனித பயணத்தை மேற்கொண்டார்கள். காபா என்ற சதுரமான ஓர் கட்டடம் அங்கே இருந்தது. இந்தக் கட்டடம் மிகவும் தொன்மையானது. கஆபா "ஜம்ஜம்" என்ற நிலத்தடி நீர்ச்சுனை இவை அந்த இடத்திற்கு அதிகமான மக்கள் புனிதப் பயணம் வந்திடக் காரணமாக அமைந்தது.

இந்த இடங்களுக்கு அதாவது கஆபாவுக்கும் ஜம் ஜம் நீர்சுனைக்கும் பாதுகாலவர்கள் இருந்தார்கள். இந்தப் பாதுகாப்புப் பணி தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

ஆறாம் நூற்றாண்டில் இவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு "குறைஷி" என்ற குலத்திடம் வந்திருந்தது. இதுதான் முஹம்மத் (ஸல்) இன் குலம். இவர்கள் தங்களுக்கு முன் கஆபா ஜம் ஜம் இவற்றைப் பாதுகாத்தவர்களை, பராமரித்தவர்களை, விரட்டி விட்டு இந்த இரண்டு இடங் களையும் தங்க ளுடைய பொறுப்பின் கீழ் கொண்டு வந்து விட்டார்கள்.

அத்தோடு தங்களோடு இரத்தப் பந்த தொடர்புடைய மக்களையெல்லாம் ஒன்று திரட்டி அவர்களுக்கிடையே இருந்த பிணக்குகளையும், வழக்குகளையும் தீர்த்துத் தங்கள் குறைஷி குலத்தைப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

அடுத்து கஆபா - ஜம் ஜம் நீருற்று இவற்றைச் சுற்றி அவர்கள் தங்கள் இல்லங்களை அமைத்துக் கொண்டார்கள்.

காஆபா வுக்கு புனிதப் பயணம் மேற்கொள்பவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் கஆபாவைத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்பனவே குறிக்கோள்.

ஏனெனில் கஆபாவைத் தங்கள் கட்டுபபாட்டுக்குள் வைத்துக் கொள்ள அன்றைய அரபு குலத்தவர்கள் சண்டை இட்டுச் செத்து மடிந்தார்கள். காபாவின் அருகாமையிலேயே பிணங்களும், இரத்த மும் தாராளமாக கிடக்கும் என்பதே அன்றைய வரலாறு.

இதில் மாறுபட்டு குரைஷிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கஆபா வந்த நாளிலிருந்தே அதற்கான சண்டைகள் வந்திடவோ, அதில் வேறுாயரும் சொந்தம் கொண்டாடிடவோ கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். அவற்றோடு நில்லாமல் தங்கள் குலத்தவர்களின் குடியிருப்புகளை அதனைச் சுற்றி வைத்துக் கொண்டார்கள். அதன் மூலம் கஆபாவுக் காக எந்த குலமாவது சண்டைக்கு வந்தால் அவர்களை நிச்சயம் வெல்வோம் என்பதையும் உறுதிபடுத்திக் கொண்டர்கள். தாங்களாக யாரிடமும் வம்புக்குப் போவதில்லை என்பதிலும் உறுதியாக இருந்தார்கள்.

இன்னொருபடி மேலே போய் சண்டைகளோ, இளக்குகளோ இதர இனத்தவர்களிடமோ குலத்தவர்களிமோ இருந்து வந்தால், அவற்றை சமாதானமும் செய்து வைத்தார்கள்.

இதையும் கடந்து இன்னொன்றையும் செய்தார்கள். அரபு நாட்டில் அன்று ஒவ்வொரு குலத்தவரும் ஓர் குலக் கடவுளை வழிபட்டார்கள். இந்தக் கடவுள்களின் எண்ணிக்கை 360 ஆகும். இந்தக் கடவுள்களின் பெரும்பாலனவற்றைக் கஆபாவுக்குள் வைத்துவிட்டார்கள். ஆனால் அந்தக் கடவுள்களுக்குத் தலைமையாகத் தங்கள் கடவுளை வைத்துக் கொண்டார்கள்.

இப்போது புனிதப் பயணம் என எல்லாக் குலத்தவர்களும் கஆபாவுக்கு வந்து சென்றார்கள். அதனால் மக்கள் எப் போதும் அதிக அளவில் குழுமுமிடமாக கஆபா ஆனது.

இதனால் வியாபாரிகள், வியாபாரக் கூட்டங்கள், அங்கே அதிக அளவில் வந்தன. தங்கி இதர இடங்களுக்கு சென்றன. போயின.

இஸ்லாத்தின் வருகைக்கு முன்னால் அரபுக்களின் தொழில்களுள் ஒன்றாக வழிப்பறி இருந்தது. இதனால் வியாபாரக் கூட்டங்கள் வந்திடத் தயங்கும். இதைக் கருத்தில் கொண்ட குறைஷி குலத்தவர்கள் தங்கள் சக குலத்தவர்களிடம் வழிப்பறி வேண்டாம், எனக் கூறினர். அதற்குப் பதிலாக வியாபாரக் கூட்டத்வர்களை நீர் சுனைகளுக்குப் பக்கத்தில் கூடாரமடிக்கச் செய்வது, அவர்களின் வியாபரப் பொருள்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது இவற்றின் மூலம் சம்பாதிக்க வழிகாட்டினர்.

அதேபோல், கஆபாவின் கட்டிடத் தில் ஓர் கறுப்புக்கல். இது மிகவும் தொன்மையானது. இது வானத்திலிருந்து வந்தது. அதனால் வானத்தையும் பூமியை யும், இணைக்கும் கல் என அரபுக்கள் நம்பினர். இந்தக் கல்லை தரிசிப்பதும் அந்த அரபுக்களின் புனித கிரியைகளுள் என்றாகக் கருதப்பட்டது.

இந்த கல்லை தரிசிக்கும் பக்தர்களை ஒழுங்குப் படுத்துவதையும் குறைஷிகள் தங்கள் வசம் வைத்துக் கொண்டார்கள்.

இவற்றின் மூலம் அரபு நாட்டு வியாபாரத்தையும் ஆன்மீகத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டார் கள்.

ஆனால் இஃது அரபு நிலப்பரபுக்கு பக்கத்தில் இருந்த மக்களுக்குப் பொறா மையைத் தந்தது. அவர்கள் மக்கா, கஆபா அதன் வியாபாரம் அனைத்தும் அடித்துப் பிடிங்கிடத் திட்டம் போட்டார்கள். படை திரட்டினார்கள்.

அதனை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் பார்ப்போம்.

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.